மனித உரிமைகளுக்கான

# குழந்தைகளின் குரல்

அனைத்து குழந்தைகளுக்கும் 12ஆம் வகுப்புவரை
(18வயது) இலவச, சமமான, தரமான கல்வி –

## சம கல்வி



CHILDREN'S VOICES FOR HUMAN RIGHTS - 55 & 56 - 2010

# கருவிலேயே கருகிப்போன கல்வி உரிமைச் சட்டம்

– டாக்டர் நிரஞ்ஜனாராத்யா விபி

குழந்தை உரிமைகள் இயக்க வரலாற்றில் டிசம்பர் மாதம் மிகுந்த முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. ஏனெனில் இந்த மாதத்தில்தான் குழந்தைகளின் உரிமைகள் தொடர்பாக தேசிய அளவிலும் உலக அளவிலும் பல முக்கிய நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. ஒரு சில உதாரணங்கள் சொல்வதானால், குழந்தை உரிமைகளுக்கான ஐ.நா. மாநாட்டு (யுன்சிஆர்சி) தீர்மானத்தை இந்தியா 1992 டிசம்பரில் அங்கீகரித்தது; குழந்தைகளுக்கு அவர்களது குழந்தைப் பருவத்தை மீட்டுத்தருவதன் மூலம் அவர்களின் வாழ்க்கையை முன்னேற்றுவதற்கான முக்கியக் கொள்கை மாற்றங்களைப் பரிந்துரைக்கும் நடைமுறைகளின் ஒரு பகுதியாக தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் (என்சிபிசிஆர்) வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முதல் தேசிய ஆலோசனைக் கூட்டத்தை 2008 டிசம்பரில் கூட்டியது; உலக மனித உரிமைகள் தினம், குழந்தைகள் கடத்தல் எதிர்ப்பு தினம் ஆகியவை இந்த மாதத்தில்தான் கடைப்பிடிக்கப்படுகின்றன.

ஆனால் இந்த வரலாற்று நிகழ்வுகளின் முக்கியத்துவம் இருட்டடிக்கப்பட்டிருக்கிறது. இந்திய அரசு அறிவித்திருந்த 'கல்வி உரிமைச் சட்ட முன்வரைவு' கடுமையான விமர்சனத்திற்கு உள்ளானது. அதையும் நீர்த்துப்போன, உருக்குலைந்த புது அவதாரமாக, 'குழந்தைகளின் இலவச கட்டாய கல்வி உரிமைச் சட்ட முன்வரைவு–2008' என்பதைக் கொல்லைப்புறம் வழியாகக் கொண்டுவந்தது.

அதிகார வர்க்கம் இந்த நீர்த்துப்போன சட்டமுன்வரைவை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்வதற்கான தயாரிப்புகளைச் செய்துகொண்டிருந்தபோது, தேசிய குழந்தை குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையம் ஒரு தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றியிருந்தது கவனிக்கத்தக்கது. குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிப்பதற்கும், கல்வி உரிமையை நிலை நாட்டுவதற்குமான தீர்மானம் அது. அதில், விட்டுக்கொடுக்க இயலாத மூன்று மையமான கொள்கைகள் உள்ளன: (அ) 18 வயதுக்குக் குறைவானவர்கள் எவரும் குழந்தைதான்; (ஆ) குழந்தைத் தொழிலாளர் முறையின் அனைத்து வடிவங்களும் ஒழிக்கப்பட வேண்டும்; (இ) பள்ளிகளில் சேர்க்கப்படாத குழந்தைகள் அனைவரும் குழந்தைத் தொழிலாளர்கள்தான், ஆபத்தான அல்லது ஆபத்தற்ற வேலைகள் அனைத்துமே குழந்தை வளர்ச்சிக்குக் கேடானதுதான். அரசாங்கம் குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிப்பதற்கும் கல்வி உரிமையை நிலை நாட்டுவதற்குமான கொள்கைகளை உருவாக்குகிறபோது இந்த மூன்று பரிந்துரைகளை வழிகாட்டும் கொள்கைகளாகக் கொள்ளவேண்டும் என்று என்சிபிசிஆர் எதிர்பார்க்கிறது.

புதிய சட்டம் நடைமுறைக்கு வருகிறபோது அது எவ்வாறு செயல்படுத்தப்படுகிறது என்பதைக் கண்காணிக்கும் பொறுப்பு தேசிய அளவிலான அமைப்பாகிய இந்த ஆணையத்திற்குத்தான் இருக்கிறது. ஆனால், மிகப்பெரிய முரண்பாடு என்னவென்றால், புதிய சட்ட முன்வரைவு உருவாக்கப்பட்டபோது ஆணையத்தின் இந்த மூன்று மையமான பரிந்துரைகள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படவே இல்லை; அப்புறம் அல்லவா அவற்றை சட்ட முன்வரைவில் இணைப்பது! ஆணையத்தின் பரிந்துரைகளைச் சேர்த்திருந்தால், 'குழந்தை', 'குழந்தை தொழிலாளர்', 'உழைக்கும் குழந்தை' என்பன போன்ற சில சொல்லாடல்களாவது மாறியிருக்கும். ஆனால் இதற்கு நேர்மாறாக, நாடாளுமன்ற மாநிலங்களவையில் 2008 பிப்ரவரியில் தாக்கல் செய்யப்பட்ட கல்விச் சட்ட முன்வரைவில், 'உழைக்கும் குழந்தை', 'பள்ளியில் சேராத குழந்தை', 'புலம்பெயர்ந்த குடும்பம்' ஆகிய சொற்களுக்கான விளக்கங்கள் அரசாங்கத்தால் நீக்கப் பட்டிருந்தன.

இது குழந்தைகளுக்கு எதிரான ஈவிரக்கமற்ற குற்றமேயாகும். தலைமுறை தலைமுறையாக கோடிக்கணக்கான குழந்தைகளுக்கு சமமான கல்வி பெறும் அடிப்படை உரிமை மறுக்கப்பட்டு வந்திருக்கிறது. அவர்களுக்கு அந்த உரிமை கிடைப்பதை சந்தை சக்திகள் தட்டிப்பறிக்கின்றன. அவர்களோடு நவீன–தாராளமயவாதிகள் கைகோர்த்துக்கொண்டு, இந்த சட்ட முன்வரைவுக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அந்த துரோகத்திற்கு அவர்கள் நாட்டின் குழந்தைகளுக்கு பதில் சொல்லியாக வேண்டும்.

குாந்தைகளின் கல்வி தொடர்பாக ஆந்திர மாநில அரசுக்கு எதிராக உன்னிகிருஷ்ணன் தொடுத்த வழக்கில் தீர்ப்பளித்த உச்சநீதிமன்றம், 14 வயது வரையில் கல்வி பெறுவதற்கான உரிமை குழந்தையின் அடிப்படை உரிமையாகும் என்று அறிவித்தது. அத்துடன், அரசாங்கத்தின் பொருளாதார பலத்தைப் பொறுத்து, 14 வயதுக்கு மேலேயும் அந்த அடிப்படை உரிமை நீடிக்கிறது என்றும் உச்சநீதிமன்றம் தெளிவுபடுத்தியது. 15 ஆண்டு காலம் இழுத்தடித்த பிறகு, அரசமைப்பு சாசனத்தின்

உணர்வை முற்றிலுமாக நிராகரிக்கும் ஒரு சட்டமுன்வரைவை அரசாங்கம் கொண்டுவந்திருக்கிறது. வாழ்க்கைக்கான உரிமையை உறுதிப்படுத்தினால் மட்டும் போதாது, கவுரவமான வாழ்க்கையை உறுதிப் படுத்துவதாகவும் இருக்க வேண்டும் என்ற அடிப்படையில், வாழ்வுரிமையோடு கல்வியுரிமையையும் இணைக்க வேண்டும் என்பதே உச்சநீதிமன்றத் தீர்ப்பின் ஆழமான அர்த்தமாகும். அரசாங்கத்தின் சட்டமுன் வரைவு அதையும் தள்ளுபடி செய்கிறது.

நாட்டின் ஆகப்பெரும்பாலான குழந்தைகளுக்கு உரிய கவனிப்பையும் கல்வியையும் தட்டிப்பறிக்கிற, தற்போதுள்ள நிலைமையை அப்படியே தொடரும் வகையில் கல்வியின் சமத்துவமின்மைகளையும் பாகுபாடுகளையும் நியாயப்படுத்துகிற இந்த சட்டமுன் வரைவு பற்றிய பொய்மைத்தோற்றங்களை ஆட்சியில் இருக்கிற மேல்தட்டினரும் அதிகார வர்க்கத்தினரும் சமுதாயத்தின் புறக்கணிக்கத்தக்க சிறு பிரிவினரும் உருவாக்கிக்கொண்டிருக்கிறார்கள். எனவே, அந்த மாயத்தோற்றங்களை மக்களரங்கில் அம்பலப் படுத்துவதும், சட்டமுன்வரைவில் உள்ள மோசமான குறைபாடுகளை எடுத்துவைப்பதும் அவசர அவசியமாகும்.

**கல்வி என்ற அடிப்படை உரிமையை நிலைநாட்டுவதற்கு அனைத்து விதமான குழந்தை உழைப்பு முறைகளையும் ஒழிக்க வேண்டும் என்ற என்சிபிசிஆர் நிலைபாடும் மீறப்பட்டிருக்கிறது**

முதலில், சட்டமுன்வரைவின் தலைப்பு 'கல்வி உரிமை சட்டமுன்வரைவு' என்பதிலிருந்த 'குழந்தைகளின் இலவச கட்டாய கல்வி உரிமை சட்டமுன்வரைவு' என்பதாக மாற்றப்பட்டது. இதன் மூலம், முந்தைய தலைப்பில் பிரதிபலித்த 'உரிமைத் தொலைநோக்கு' நீர்த்துப்போகச் செய்யப்பட்டது. பள்ளிகளில் சேர்க்கப் படாத குழந்தைகளுக்கான இலவச கட்டாய ஏற்பாடு என்பதாக மாற்றப்பட்டது. இவ்வாறு மாற்றப்பட்டதன் விளைவு என்ன என்றால், உரிமைக்கு உரியவர்களாகிய குழந்தைகளுக்கு சாதகமாக நீதிமன்றத்தில் இனி கல்வி என்பது அவர்களது அடிப்படை உரிமை என்று வாதிட முடியாது. மாறாக, மாநிலங்களவையில் தாக்கல் செய்யப் பட்ட இந்த சட்டமுன்வரைவு, பள்ளிகளுக்கு வெளியே குழந்தைகள் இருப்பதற்கான பழியை ஆசிரியர்கள் மீதும் பெற்றோர் மீதும் அதிகார வர்க்கத்தினரும் சம்பந்தப்பட்ட இதர அதிகாரிகளும் சுமத்துவதற்கு வழிசெய்கிறது.

இரண்டாவதாக, சட்டமுன்வரைவின் முன்னுரை அகற்றப்பட்டு அந்த இடத்தில் "நோக்கங்களும் காரணங்களும்" என்று சேர்க்கப்பட்டுள்ளது. எந்தவொரு சட்டத்திலும் அதன் நோக்கங்களை நிறை வேற்று வதற்கேற்ப விளக்கங்கள் அளிப்பதற்கு உதவும் முக்கியமான கருவியாக இருப்பது முன்னுரைதான். இந்த சட்டமுன்வரைவின் முன்னுரை நீக்கப்பட்டதற்கு இவ்வாறுதான் விளக்கம் அளிக்க முடியும்:

(அ) சமூகநீதி, சமத்துவம் நெறிகளுக்கேற்ப சட்டத்திற்கு விளக்கம் அளிப்பதற்கான விரிவான கட்டமைப்பு பறிபோகிறது;

(ஆ) உன்னிகிருஷ்ணன் வழக்கில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பில் (1993) தனிமனித கவுரவம் பற்றியும் அடிப்படைக் கல்வி பற்றியும் கூறப்பட்டுள்ளது. அந்த இரண்டுக்கும் இடையே ஒரு பிரிக்கமுடியாத தொடர்பை சட்ட முன்னுரை ஏற்படுத்தியிருக்கும்;

(இ) எல்லாவற்றுக்கும் மேலாக, இந்த நீண்ட கால லட்சியத்தை அடைவதில் ஏற்படக்கூடிய எந்தவிதமான குறுக்கீடுகளோடும் சமரசம் செய்து கொள்ளாமல், குறிப்பிட்ட காலவரைக்குள் அனைத்துக் குழந்தைகளுக்கும் சமமானதரமான கல்வி வழங்குவதில் அரசு நிர்வாகத்துக்கும் நீதித்துறைக்கும் உள்ள பங்கையும் பொறுப்பையும் சட்ட முன்னுரை தொடர்ந்து நினைவூட்டிக் கொண்டே இருக்கும்.

மூன்றாவதாக, எந்த ஒரு சட்டத்திலும் அதன் விளக்கங்கள் பிரிவுக்கு மிகுந்த முக்கியத்துவம் உண்டு. சட்டத்தைச் செயல்படுத்தும்போது தேவையான தெளிவுகளை அந்தப்பிரிவுதான் அளிக்கிறது. சட்டமுன்வரைவின் (2008) மாதிரிப் படிவத்தில் இருந்த பொதுவான 29 விளக்கங்களும், குறிப்பாக சமமான தரமான கல்வியை உறுதிப்படுத்துவதற்கான அனைத்து முக்கிய விளக்கங்களும் மாநிலங்களவையில் தாக்கல் செய்யப்பட்ட புதிய சட்ட முன்வரைவில் நீக்கப்பட்டுள்ளன என்பது வருத்தத்திற்குரியது. உதாரணமாக 'வயதுக்கு பொருத்தமான வகுப்பு', 'கட்டாயக் கல்வி', 'சமமான தரமான', 'குழந்தையைப் பொறுத்தமட்டில் தொடக்கக் கல்வியில் பங்கேற்பு' ஆகியவை போன்ற விளக்கங்கள் சட்டத்தைச் செயல்படுத்துவதற்கான, தேவைப்படும் போதெல்லாம் அவசியமான விளக்கங்கள் அளிப்பதற்கான முக்கிய செயல் விளக்கங்களாகும். ஏற்கெனவே நான் குறிப்பிட்டது போல, 'உழைக்கும் குழந்தை', 'பள்ளியில் சேராத குழந்தை', 'புலம்பெயர்ந்த குாந்தை' போன்ற விளக்கங்கள் நீக்கப்பட்டதன் மூலம் குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழிப்பதற்கும் கல்விக்கான ஒரு உரிமையை நிலைநாட்டுவதற்குமான இணைப்பு பலவீனப்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாறு

நீர்த்துப்போகச் செய்யப்பட்டிருப்பதன் மூலம் (14 வயது வரையிலான) ஒரு குழந்தையின் அடிப்படை உரிமை மறுக்கப்பட்டிருக்கிறது; அது மட்டுமல்லாமல், கல்வி என்ற அடிப்படை உரிமையை நிலைநாட்டுவதற்கு அனைத்து விதமான குழந்தை உழைப்பு முறைகளையும் ஒழிக்க வேண்டும் என்ற என்சிபிசிஆர் நிலைபாடும் மீறப்பட்டிருக்கிறது.

சட்டமுன்வரைவின் விளக்கங்கள் பிரிவுக்கு ஏற்பட்ட மிகவும் வருந்தத்தக்க நிலைமை என்னவென்றால், 0–6 வயதுப் பிரிவைச் சேர்ந்த குழந்தைகளுக்கு நியாயம் வழங்கும் வகையில் இருந்த பள்ளிக்கு முந்தைய கல்வி தொடர்பான விளக்கங்கள் நீக்கப்பட்டிருப்பதாகும். இது நீக்கப்பட்டதன் மூலம், முன்பு ஏற்கெனவே அடிப்படைக் கல்வி உரிமையிலிருந்து விலக்கிவைக்கப்பட்டிருந்த இந்த வயதுப்பிரிவைச் சேர்ந்த குழந்தைகள் இப்போது இந்த சட்டத்தின் எல்லையிலிருந்தும் விலக்கி வைக்கப்படுகிறார்கள். அவர்கள் தொடக்கநிலை குழந்தைப் பருவ கவனிப்பு மற்றும் கல்வி (இசிசிஇ) என்பதன்கீழ் தங்களுக்கு உள்ள உரிமைகளைக் கோர முடியாதவர்களாக்கப் பட்டிருக்கிறார்கள்.

## மாற்றுத் திறன் குழந்தைகளுக்கு சமமான வசதிகளையும் கற்றுக்கொள்ளும் வாய்ப்புகளையும் வழங்குவது தொடர்பான பிரிவும் நீக்கப்பட்டிருக்கிறது

சட்டமுன்வரைவில் நீக்கப்பட்டுள்ள இதர சில முக்கிய வரையறைகள் வருமாறு: 'கல்வி ஆண்டு', 'வயதுக்குப் பொருத்தமான வகுப்பு', 'அரசு நிதியுதவி பெறும் பள்ளி', 'கவனிப்பும் பாதுகாப்பும் தேவைப்படும் குழந்தை', 'கட்டாயக் கல்வி', 'தொடக்கநிலைக் கல்வியில் சமமான தரம்', 'புலம்பெயர்ந்த குடும்பம்', 'குழந்தையைப் பொறுத்தமட்டில் அருகாமைப் பள்ளி', 'பள்ளிக்கு வெளியே உள்ள குழந்தை', 'குழந்தையைப் பொறுத்தமட்டில் தொடக்கக் கல்வியில் பங்கேற்பு', 'பள்ளி தொடர்பான தொடக்க நிலைக்கு முந்தைய கல்வி', 'தொடக்கநிலைக்கு முந்தைய பள்ளி', 'உழைக்கும் குழந்தை'.

நான்காவதாக, எனக்குத் தெரிந்த வரையில், கல்விச் சட்ட முன்வரைவு–2008ன் இலக்கு எந்த நிறுவனம் கல்வி வழங்குகிறது என்ற மாறுபாடின்றி அனைத்துக் குழந்தைகளுக்கும் சமமான தரமான கல்வி வழங்குவதை உறுதிப்படுத்துவதாக இருந்தது. தற்போதைய சட்டமுன்வரைவில் இந்த இலக்கு கிட்டத்தட்ட வீழ்த்தப் பட்டிருக்கிறது. சட்ட முன்வரைவில் உள்ள உரிமைகள் தொடர்பான பாகம்–1ன் தலைப்பில் “சமமான தரமான” என்ற சொற்கள் நீக்கப்பட்டுள்ளன. கொள்கைப் பூர்வமாகவே இந்தியாவில் உள்ள குழந்தைகள் அனைவருக்கும் சமமான தரமான கல்வி வழங்க அரசுக்கு மனமில்லை, இந்திய அரசமைப்பு சாசனத்திற்கும் யுன்சிஆர்சி உள்ளிட்ட உலகளாவிய சட்ட ஏற்பாடுகளுக்கும் உட்பட்டுச் செயல்படவும் விருப்பமில்லை என்பதையே இது தெளிவாகக் காட்டுகிறது.

மாறாக, சட்ட முன்வரைவின் தற்போதைய வடிவமானது நவீன தாராளமய அரசு இரண்டு விதமான கல்வி முறையை சட்டப்பூர்வமாக்கி பாகுபடுத்தவே முயல்கிறது என்பதை மேலும் உறுதிப்படுத்துகிறது: ஏழைக் குழந்தைகளுக்கு சமத்துவமற்ற, பல அடுக்குகளாக உள்ள, தரம் தாழ்ந்த கல்வி; மேல்தட்டுக் குழந்தைகளுக்குப் பல்வேறு முறைகளில் தரமானது என்பதாகச் சொல்லிக்கொள்ளப்படுகிற கல்வி. இது சமத்துவமற்ற, தரம் தாழ்ந்த கல்வி முறையை ஒரு மத்திய சட்டத்தின் மூலம் சட்டப்பூர்வமாக்கிடும் முயற்சியேயன்றி வேறொன்றுமில்லை. இந்த சட்டமுன்வரைவு சட்டமாகவே நிறைவேற்றப்படுமானால் நமது அரசமைப்பு சாசன அடிப்படைக் கோட்பாடுகளையும் இந்தியாவால் அங்கீகரிக்கப்பட்ட பல்வேறு சர்வதேச கோட்பாடுகளையும் மீறுவதாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. மேலும், இன்றுள்ள “சதுர்வர்ண அமைப்பு” என்பதன் இடத்தில் ஒரு “புதிய சப்த வர்ண அமைப்பு” என்பதை வைத்து, தற்போதைய சமத்துவமற்ற கல்விமுறை தொடர்வதற்கே இட்டுச்செல்லும். ('சதுர்வர்ண அமைப்பு' என்பது சாதிய அடிப்படையில் மேல்சாதியினருக்கு மட்டுமே கல்வி வழங்குகிற, பிற்பட்டோருக்கும் தாழ்த்தப்பட்டோருக்கும் கல்வி உரிமையை மறுக்கிற வர்ணாசிரம முறை. 'புதிய சப்த வர்ண அமைப்பு' என்பது பணக்காரர்கள், உயர் நடுத்தரவர்க்கத்தினர், நடுத்தர வர்க்கத்தினர் ஆகியோருக்கான ஐஜிசிஎஸ்இ பள்ளிகள், ஐசிஎஸ்இ பள்ளிகள், சிபிஎஸ்இ பள்ளிகள், தனியார் மெட்ரிகுலேசன் பள்ளிகள் போன்றவையும், கீழ் நடுத்தரக் குடும்பங்கள், ஏழைகள் போன்றோருக்கான அரசுப் பள்ளிகள், அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள், உள்ளாட்சிகளால் நடத்தப்படும் பள்ளிகள் போன்றவையும், விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்ட ஓட்டாண்டிகளாக உள்ள குடும்பங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்கான 'சர்வ ஷிக்ஷா அபியான்' போன்ற கல்வி உத்தரவாத ஏற்பாடுகளுமாகும்.)

சட்ட முன்வரைவின் விளக்கங்கள் பிரிவில், 'அருகாமைப் பள்ளி' என்பதற்கான எந்தவொரு விளக்கமும் இல்லை. ஆனால் சட்ட வாசகங்களில் அந்தச் சொற்கள் இடம்பெற்றுள்ளன. இது, இப்படிப்பட்ட சொல்லாக்கங்களைப் புரிந்துகொண்டு அனைவருக்கும் கல்வி கிடைக்கும் வகையில் செயல்பட வேண்டிய

நிலையில் உள்ள, சட்டத்தை அமலாக்கும் அமைப்புகளுக்குக் குழப்பத்தை ஏற்படுத்துவதாக இருக்கிறது. பொதுப் பள்ளி அமைப்பு (சிஎஸ்எஸ்) என்ற கண்ணோட்டத்தின்படி இந்தச் சொல்லாக்கத்தின் அர்த்தம், குறிப்பிட்ட நிலப் பகுதியைச் சேர்ந்த அனைத்துக் குழந்தைகளும் சமூக, பாலின, மத வேறுபாடின்றி அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்ட அருகாமைப் பள்ளிக்குச் செல்ல முடியும் என்பதேயாகும்.

முந்தைய சட்ட முன்வரைவில், பள்ளிகளிலிருந்து தள்ளப்பட்ட (படிப்பைத் தொடராமல் நின்றுவிட்ட) அனைத்துக் குழந்தைகளுக்கும், ஒரு பொருத்தமான இணைப்புப் பாடத்திட்டம் (பிரிட்ஜ்கோர்ஸ்) அல்லது மாற்றுத் திட்டத்தின் மூலம் முழுநேர பள்ளிக் கல்வி வழங்குவதற்கு ஒரு கால அளவு குறிப்பிடப்பட்டிருந்தது. புதிய சட்டமுன்வரைவில் அந்தக் கால அளவு நீக்கப்பட்டுள்ளது. கல்வி வாய்ப்பு மறுக்கப்பட்ட குழந்தைகளின் அடிப்படை உரிமை, குறிப்பிட்ட ஒரு தெளிவான காலவரைக்குள் முன்னுரிமை அடிப்படையில் மீட்கப்படமாட்டாது என்பதே இதன் பொருள். வாய்ப்பு மறுக்கப்பட்ட குழந்தைகள் வரையறுக்கப்பட்ட வயதை அடைவதற்கு முன் அடிப்படைக் கல்வி பெறுவதற்கான உரிமைக்கு இது குழிபறிக்கிறது. அதன் மூலம் அவர்களது அடிப்படைக் கல்வி உரிமை ஒட்டுமொத்தமாக மறுக்கப்படுகிறது. இதன் விளைவாக, பள்ளிகளிலிருந்து வெளியேறிய குழந்தைகளுக்கும் பள்ளி செல்லாத குழந்தைகளுக்கும் பிரதான கல்வி வழங்குகிற கடமைப்பொறுப்பை அரசு தனது மனம்போனபடி இழுத்தடித்துக்கொள்ளலாம்.

**பள்ளிக் கல்வியில் போதிய நிபுணத்துவம் உள்ள, தேசிய / மாநில / மாவட்ட / வட்ட / ஊராட்சி மட்டத்தில் செயல்படும் அதிகாரம் உள்ள ஒரு அமைப்பு இருந்தால்தான் கல்விக்கான அடிப்படை உரிமையை விரைவாகவும் பயன்விளையத்தக்க வகையிலும் நிலைநாட்ட முடியும்**

புதிய சட்டமுன்வரைவில் உள்ள மற்றொரு முக்கியமான தடைக்கல், குழந்தைகள் பள்ளிமாறுகிறபோது இடமாறுதல் சான்றிதழ் (டிரான்ஸ்பர் சர்டிபிகேட்) வழங்குவதில் தாமதம் ஏற்படுமானால் தலைமை ஆசிரியருக்கு அபராதம் விதிக்கும் பிரிவு ஒன்று சேர்க்கப்பட்டிருப்பதாகும். இது ஆசிரியர் சமூகத்தை மேலும் இழிவுபடுத்துவதாகும். சமச்சீர் கல்வி வழங்குதல் என்ற நெடுங்கால லட்சியத்தை அடைவதில் அவர்களை முனைப்புடன் இணைந்து செயலாற்றச் செய்ய வைக்கக்கூடிய ஒரு ஆக்கப்பூர்வ சட்டத்திற்கு மாறாக, செயலை முடக்குகிற சட்ட நடைமுறைதான் கொண்டுவரப்படுகிறது என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது.

ஐந்தாவதாக, கல்விக்கான அடிப்படை உரிமையை நிலைநாட்டுவதில் மிகவும் தீர்மானகரமான அம்சமாக இருப்பது, அதனை பயனுள்ளவகையில் செயல்படுத்துவதற்கான நிதி ஒதுக்குவதாகும். இதில் மத்திய அரசின் பொறுப்பு மிக மிக முக்கியமானது. பயன்விளையக்கூடிய வகையில் இந்த அடிப்படை உரிமையை நிலைநாட்டுவதற்கான பெரும்பங்கு நிதி மத்திய அரசிடமிருந்துதான் வரவேண்டும். ஆனால், மத்திய அரசு இதில் தனது பொறுப்பை முற்றிலுமாகத் தட்டிக்கழித்துள்ளது. சட்டமுன்வரைவின் விளக்கங்கள் பிரிவில் (அத்தியாயம் 1), இந்த அடிப்படை உரிமையைச் செயல்படுத்துவதற்கான சுமை மாநில அரசுகள், கிராம ஊராட்சிகள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் ஏழைப் பெற்றோர் தலையில் கட்டப்பட்டிருக்கிறது என்பது தெளிவு. 1976ஆம் ஆண்டிலிருந்து கல்வி பொதுப்பட்டியலில் இருந்து வருவதால் கல்வி உரிமை என்பது மத்திய–மாநில அரசுகளின் கூட்டுப் பொறுப்பாகிறது என்று மத்திய அரசு தனது நிலைபாட்டை நியாயப்படுத்துகிறது. தகவல் அடிப்படையில் இது உண்மைதான் என்றாலும், இந்த நோக்கத்தை அடைவதற்குப் போதிய நிதி ஒதுக்கக்கூடிய நிலையில் மாநில அரசுகள் இல்லை. இந்த நிலைமையின் காரணமாகத்தான், சர்வ சிக்ஷா அபியான் திட்டத்தின் (எஸ்எஸ்ஏ) கீழ் ஒரு நியாயமான நிதி மாநில அரசுகளுக்கு வழங்கப்பட்டது. மத்திய அரசிடமிருந்து கணிசமான நிதி உதவி இல்லாமல், இந்தியாவில் அனைத்துக் குழந்தைகளுக்கும் தரமான கல்வி வழங்குதல் என்ற இலக்கை அடையமுடியாது என்பது வெளிப்படை. ஆக, இந்தியாவில் கல்வி உரிமை வழங்குவதற்கான அரசியல் பொருளதாரம் என்பது கல்வியை விலைகொடுத்து வாங்கத்தக்க சரக்காக மாற்றுவதன் மூலம் ஆதிக்க மேல்தட்டினர், அதிகாரவர்க்கத்தினர், பணக்கார வர்த்தகப்பிரிவினர், சந்தைசார்ந்த நடுத்தர வர்க்கத்தினரின் நலன்களைப் பாதுகாப்பதாகவே இருக்கிறது; அத்துடன், பொதுக்கல்வி முறையைத் தகர்த்து அனைத்துக் குழந்தைகளின் வளர்ச்சியைத் தடுத்து, ஏற்கெனவே உள்ள அசமத்துவத்தையும் அநீதியையும் கெட்டிப்படுத்துவதாகவே இருக்கிறது என்பது தெளிவு.

பள்ளிக்கு வரத்தவறுதல் என்ற ஒரு பிரிவு கல்வி உரிமைச் சட்ட முன்வரைவு–2008ல் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதன்படி, அரசமைப்பு சாசனத்தின் 51ஏ (கே) பிரிவின் கீழ், குழந்தைகளுக்குக் கல்வி வழங்குவது அவர்களது பெற்றோரின் பொறுப்பாக்கப்பட்டிருக்கிறது. இது ஏற்கெனவே வாழ்க்கைக்காகப் போராடிக் கொண்டிருக்கிற ஏழைகளின் தலையில் இந்த மாபெரும் பணியின் சுமையை ஏற்றுவதன்றி வேறல்ல.

கல்வியில் தனது பங்களிப்பு, பொறுப்பு ஆகியவற்றில் மத்திய அரசு இரட்டை வேடம் போடுவதாக நான் நம்புகிறேன். ஒரு பக்கம், நிதிப்பிரச்சனை வருகிறபோதெல்லாம் பொதுப்பட்டியல் என்றும் அதிகாரங்களைப் பரவலாக்குதல் பற்றியும் மத்திய அரசு பேசுகிறது. உள்ளடக்கம், பாடத்திட்டம், குறைந்தபட்ச தரம், கல்வி தொடர்பான நடைமுறைகள் ஆகியவற்றைப் பொறுத்தவரையில், மாநிலங்களை முடிந்த அளவுக்கு முழுமையாகக் கட்டுப்படுத்தவே மத்திய அரசு முயல்கிறது.

## ஆறு வயதுக்குக் குறைந்த குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாப்பது, வளர்ப்பது என்பதில் தனக்குள்ள பொறுப்பை அரசு முழுமையாகக் கைவிட்டுவிட்டது என்பதையே இது காட்டுகிறது

மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்டுள்ள சட்டமுன்வரைவில், தனியார் பள்ளிகளில் நலிவுற்ற பிரிவுகள் மற்றும் வாய்ப்பற்ற பிரிவுகளைச் சேர்ந்த குழந்தைகளுக்கு 25 சதவீத இட ஒதுக்கீடு வழங்க வகைசெய்யப்பட்டிருக்கிறது. இக்குழந்தைகளுக்கான செலவை, அரசுப்பள்ளிகளில் ''ஒரு குழந்தைக்கு'' ஆகக்கூடிய செலவு அடிப்படையில் மத்திய–மாநில அரசுகள் வழங்கும் என்று அதில் உள்ளது. இந்த அணுகுமுறைக்கு நேர்மாறாக, தனியார் நிறுவனங்கள் இப்படிப்பட்ட குழந்தைகளுக்குக் கல்வி வழங்கிட சமூகநீதியாகக் கடமைப்பட்டவையேயாகும். ஏனெனில் அந்த நிறுவனங்கள் அரசு அளிக்கும் பல்வேறு வசதிகளை அனுபவிக்கின்றன. உதாரணமாக, பொது நல நோக்கங்களுக்காக என ஒதுக்கப்பட்டுள்ள நிலங்கள் இந்த நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்றன. பொது நோக்கங்களுக்கான அரசு நிலங்களும் கூட வழங்கப்படுகின்றன. சாலை வசதி, குறைந்த மின் கட்டணம் அல்லது இலவச மின்சாரம், தண்ணீர், பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் போன்ற இதர பல வசதிகளும் இந்த நிறுவனங்களுக்குக் கிடைக்கின்றன. நிலைமை இப்படியிருக்க, நலிவுற்ற குழந்தைகளுக்குக் கல்வி வழங்குதற்கான செலவை அரசு ஈடுகட்டுவது என்ற முடிவு, ஒரு வகையான பாரபட்சமான சலுகையேயாகும். கல்வியை மேலும் மேலும் தனியார்மயமாக்குவதற்கே இது இட்டுச் செல்லும்.

ஆறாவதாக, முந்தைய சட்டமுன்வரைவில் சேர்க்கப்பட்டிருந்த, ஆசிரியர்கள் நியமனம் தொடர்பாக தேசிய ஆசியர் கல்வி மன்றம் (என்சிடிஇ) பரிந்துரைத்த அனைத்து விதிகள், தரங்கள் ஆகியவை புதிய சட்டமுன்வரைவில் நீக்கப்பட்டுள்ளன. இது, பயிற்சி பெறாத, பகுதிநேர ஆசிரியர்களை நியமித்து தரமான கல்வியைக் காவுகொடுக்கும் தற்போதைய போக்கை அரசாங்கம் தொடர்வதற்கே உதவும். அது மட்டுமல்லாமல், ஆசிரியர் பயிற்சியில் தகவல் தொடர்பு தொழில் நுட்பத்தை (ஐசிடி) பயன்படுத்துதல் உள்ளிட்ட புதிய அணுகுமுறைகள் மூலம் ஆசிரியர் கல்வியை வலுப்படுத்துவது, அதன் மூலம் சமமான தரமான கல்வியை உறுதிப்படுத்துவது'' என்ற பிரிவும் புதிய சட்டமுன்வரைவில் நீக்கப்பட்டுள்ளது.

மாற்றுத் திறன் குழந்தைகளுக்கு சமமான வசதிகளையும் கற்றுக்கொள்ளும் வாய்ப்புகளையும் வழங்குவது தொடர்பான பிரிவும் நீக்கப்பட்டிருக்கிறது. பயிற்று மொழி (இதை கல்வி மொழி என்று குறிப்பிடுவது இன்னும் பொருத்தம்) தொடர்பான பிரிவில் செய்யப்பட்டுள்ள மாற்றம் தனியார் நிறுவனங்களின் சுயநலத்துக்கு அரசாங்கம் சேவை செய்வதாகவே இருக்கிறது. அவர்களது நிர்ப்பந்தங்களுக்குப் பணிந்து அரசு செய்துள்ள மாற்றம், குழந்தைகளுக்கு அவர்களது தாய்மொழியிலேயே கல்வி வழங்கப்படுகிறபோதுதான் அவர்கள் சிறப்பாகச் செயல்படுகிறார்கள், மிகுந்த ஆக்கத்திறனோடு உருவாகிறார்கள் என்ற உலகளாவிய உண்மையைப் புறக்கணிப்பதாக இருக்கிறது. மேலும், அரசமைப்பு சாசனத்தின் 350வது சட்டப்பிரிவை நிராகரிப்பதாகவும் இது இருக்கிறது.

ஏழாவதாக, கல்வி உரிமைச் சட்டமுன்வரைவு–2008ன் 6வது அத்தியாயத்தில், 'சட்ட அமலாக்கத்தைக் கண்காணித்தல்' என்பது 'குழந்தைகளின் கல்வியைப் பாதுகாத்தல்' என மாற்றப்பட்டிருக்கிறது. அதன் நோக்கம், கல்வி உரிமையைச் செயல்படுத்துவதற்கான பொறுப்பை தேசிய குழந்தை உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்திடம் (என்சிபிசிஆர்) மட்டுமே ஒப்படைப்பதாகும். குழந்தைகள் உரிமை பாதுகாப்புச் சட்டம்–2005ன் படி, ஆணையங்கள் பிரிவின் கீழ் என்சிபிசிஆர் அமைக்கப்பட்டது என்பது தெரிந்ததே. என்சிபிசிஆர் கட்டமைப்புக்குள், இந்திய நிலைமைகளுக்கு ஏற்ற வகையில் அந்த ஆணையம் அமைக்கப்பட்டது. கல்வி உரிமையைச் செயல்படுத்துவது என்பதைப் பொறுத்தவரையில், பள்ளிக் கல்வித்துறையில் நிபுணத்துவமும் திறமையும் உள்ள ஒரு தகுதிவாய்ந்த அமைப்பிடம் அதை ஒப்படைப்பதே பொருத்தமாக இருக்கும். என்சிபிசிஆர் இதற்குப் பொருத்தமான அமைப்பு அல்ல என்பது என் கருத்து. பள்ளிக் கல்வியில் போதிய நிபுணத்துவம் உள்ள, தேசிய / மாநில / மாவட்ட / வட்ட / ஊராட்சி மட்டத்தில் செயல்படும் அதிகாரம் உள்ள ஒரு அமைப்பு இருந்தால்தான் கல்விக்கான அடிப்படை உரிமையை விரைவாகவும் பயன்விளையத்தக்க வகையிலும் நிலைநாட்ட முடியும்.

திருத்தப்பட்ட சட்ட முன்வரைவானது, அதன் இன்றைய வடிவில், கல்வி உரிமை என்பதையே அர்த்தமற்றதாக்குக்குகிறது. ஏனெனில் இதில், சட்டப்பூர்வமாக நீதிமன்றத்தை நாடும் உரிமை இல்லை. உரிமை எந்த விதத்திலாவது மீறப்படுமானால், நிவாரணம் பெறுவதற்கு ஒரு அதிகாரப்பூர்வ அமைப்பின் கீழ் அரசாங்கத்தின் அனுமதி அல்லது ஒப்புதல் பெற வேண்டும் என்று திருத்தப்பட்டுள்ளது. எனவே, தனது அடிப்படை உரிமையாகிய கல்வி வாய்ப்பு மறுக்கப்படுகிற ஒரு குழந்தை சட்டத்தின் நீதிமன்றத்தை நாட முடியாது. இதன் மூலம், நமது ஜனநாயகத்தின் அடியாதாரமாக உள்ள அடிப்படை உரிமைகள் என்பதையே மத்திய அரசு நீர்த்துப்போகச் செய்துள்ளது. அடிப்படை உரிமைகளை அரசு மற்றும் அதிகார வர்க்கத்தின் கருணைக்கு உட்பட்ட விஷயமாக மாற்றியதன் மூலம் மத்திய அரசு, பல்வேறு சர்வதேச உடன்பாடுகளிலும் தேசிய சட்டங்களிலும் பொறிக்கப்பட்டுள்ள அடிப்படை மனித உரிமைகளையும் மானுட கவுரவத்தையும் அவமதித்துள்ளது.




இறுதியாக, கல்வி உரிமைச் சட்டமுன்வரைவு–2005ல் இருந்த பல முக்கியமான பிரிவுகள் தற்போதைய சட்டமுன்வரைவில் கைவிடப்பட்டுள்ளன, அல்லது இதரவை என்ற முக்கியத்துவமற்ற பிரிவுக்கு மாற்றப்பட்டுள்ளன, அல்லது அரசாங்கம் சட்டம் இயற்ற வேண்டிய பிரிவுகளில் சேர்க்கப்பட்டுள்ளன. இது, ஏற்கெனவே நீர்த்துப்போயிருக்கிற சட்டமுன்வரைவை மேலும் நீர்த்துப்போகச் செய்திருக்கிறது. ஒட்டுமொத்த சட்டத்தையே வறட்சியானதாக, பயனற்றதாக மாற்றுகிறது. உதாரணமாக, தொடக்கநிலைக்கு முந்தைய குழந்தைக் கவனிப்பு மற்றும் கல்வி (இசிசிஇ) என்பதை விரும்பத்தக்க நடவடிக்கைகள் பிரிவில் கூட சேர்ப்பதற்கு அரசாங்கத்திற்கு மனமில்லை. ஆறு வயதுக்குக் குறைந்த குழந்தைகளின் உரிமைகளைப் பாதுகாப்பது, வளர்ப்பது என்பதில் தனக்குள்ள பொறுப்பை அரசு முழுமையாகக் கைவிட்டுவிட்டது என்பதையே இது காட்டுகிறது. விளக்கங்கள் பிரிவில் இருந்த இசிசிஇ என்பதற்கான விளக்கமும் அகற்றப்பட்டுவிட்டது.

இன்றைய தகவல் தொழில்நுட்ப யுகத்தில், மின்சாரமும் கம்ப்யூட்டர்களும் ஒரு பள்ளிக்கூடத்திற்குத் தேவையானவை என அரசு கருதவில்லை என்பதையே திருத்தப்பட்ட சட்டமுன்வரைவின் உரை காட்டுகிறது. ஆகவேதான், மின்சாரம், தொலைபேசி, கம்ப்யூட்டர் போன்ற வசதிகளை ஏற்படுத்தித்தருவதற்கான பிரிவு புதிய சட்டமுன்வரைவில் கைவிடப்பட்டுள்ளது.

சட்டமுன்வரைவின் இறுதிப்பகுதியில் நிதி ஏற்பாடுகள் குறித்துச் சொல்லப்பட்டுள்ளது. அதில் எவ்வித உத்தரவாதமும் இல்லாத வெற்று அறிவிப்புகளே உள்ளன. இதன் மூலம், சமமான தரமான கல்வியை உறுதிப்படுத்துவதற்குப் போதுமான நிதியாதாரங்களைக் கண்டறிவதில் அரசாங்கத்தின் உண்மையான லட்சணம் என்ன என்பது அம்பலமாகிறது. ஆழ்ந்த நிதி ஏற்பாடுகள் தேவைப்படும் திட்டங்களுக்கு, போதிய நிதியாதாரங்களை உறுதிப்படுத்துகிற வகையில் திட்டமிடப்பட வேண்டும் என்பது உலகளாவிய உண்மை. இந்தியாவில் அமைக்கப்பட்ட கல்வி ஆணையம் (1964–66), தாபஸ் மஜூம்தார் கமிட்டி, சிஏபிஇ போன்ற பல வல்லுநர் குழுக்கள் இது தொடர்பாக, சட்டமுன்வரைவை திருத்தி எழுதுவதன் ஒரு பகுதியாகப் பல பரிந்துரைகளை அளித்துள்ளன. இந்த வல்லுநர் குழுக்களின் பரிந்துரைகளை அரசு ஏன் பரிசீலிக்கவில்லை, சட்டமுன்வரைவின் நிதி ஏற்பாடுகள் பற்றிய பிரிவில் குறிப்பிடத்தக்க வகையில் ஒரு தோராயமான நிதி அளவு குறித்து ஏன் முடிவுக்கு வரமுடியவில்லை என்பதைப் புரிந்துகொள்ள இயலவில்லை.

நிறைவாக, நம் அரசமைப்பு சாசனத்தின் 13வது சட்டப்பிரிவு, அனைத்துக் குடிமக்களுக்கும் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளின் உயர்ந்த தன்மையை நிலைநாட்டுகிறது. அதன் முதல் பிரிவு ஏற்கெனவே உள்ள, நடைமுறைப்படுத்தப்படுகிற சட்டங்கள் பற்றியதாகும். அடிப்படை உரிமைகளை மீறுவதாக இருந்தால் அந்தச் சட்டங்கள் செல்லுபடியாகாது என்று அந்தப் பிரிவு கூறுகிறது. 13வது சட்டப்பிரிவின் இரண்டாவது பிரிவு, அரசமைப்பு சாசனத்துக்குப் பிந்தைய சட்டங்கள் பற்றியதாகும். அரசமைப்பு சாசனத்தின்படி உறுதிப்படுத்தப்பட்டுள்ள எந்த ஒரு அடிப்படை உரிமையையும் முற்றிலுமாகப் பறிக்கக்கூடிய அல்லது பகுதி பகுதியாக மறுக்கக்கூடிய சட்டங்களை அரசாங்கம் இயற்றுவதற்கு அது தடை விதிக்கிறது.

உண்ணி கிருஷ்ணன் வழக்கில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பு மட்டுமன்றி அரசமைப்பு சாசனத்தின் 14, 15(3), 21, 21ஏ, 23, 24, 39(இ), 39(எப்), 41, 46 ஆகியவை உள்ளிட்ட சட்டப்பிரிவுகளும் கல்வி உரிமையை உயர்த்திப் பிடிக்கின்றன. அனைத்திற்கும் மேலாக அரசமைப்புசாசனத்தின் முன்னுரையில் சமூக நீதி மற்றும் சமத்துவம் ஆகியவை சாசனத்தின் ஒருங்கிணைந்த பகுதியாக அவற்றின் உணர்வாகவும் முதுகெலும்பாகவும்

சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. எனினும் மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்ட கல்வி உரிமை சட்ட முன்வரைவு – 2008 இந்த அடிப்படைக் கோட்பாடுகளையும் மாண்புகளையும் அப்புறப்படுத்துகிறது. அரசமைப்பு சாசனத்தின் உணர்வையும் செயலையும் வெளிப்படுத்துவதாக கல்வி உரிமை என்ற கண்ணோட்டம்தான் அந்த கோட்பாடுகளாகவும் மாண்புகளாகவும் இருந்து வந்தது. இதன் மூலம் கல்வி உரிமை, கவுரமான வாழ்க்கை என்ற அடிப்படை உரிமை மறுக்கப்படுகிறது.

ஆகவே, மாநிலங்களவையில் நிறைவேற்றப்பட்ட இந்த சட்ட முன்வரைவு அரசமைப்பு சாசனத்திற்கு விரோதமானது என்பது மேற்கூறிய ஆய்விலிருந்து தெரியவருகிறது. இந்த சட்ட முன்வரைவு கவுரமான வாழ்க்கைக்கான அடிப்படை உரிமைகளுக்கு இசைவானதாக இல்லை என்பதும் தெளிவாகிறது. அதுமட்டுமல்லாமல், அரசமைப்பு சாசனத்திலுள்ள பல்வேறு சட்டப்பிரிவுகளையும், யுஎன்சிஆர்சி உட்பட இந்தியாவால் அந்தந்த காலகட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட சர்வதேச மாநாடுகளின் தீர்மானங்களையும் இந்த சட்ட முன்வரைவு மீறுகிறது. இந்த சட்ட முன்வரைவு, அதன் தற்போதைய வடிவத்தில், இந்தியாவின் குழந்தைகளுக்கு பயனுள்ள எதையும் வழங்கப்போவதில்லை. எனவே, நம் குழந்தைகளின் நலன்களை பாதுகாக்கவேண்டுமானால் இந்த சட்ட முன்வரைவை நாம் நிராகரித்தாக வேண்டும்.

**– Combat Law, Sep –Dec 2009**

## அனைவருக்கும் கல்வி

அனைவருக்கும் கல்வி வழங்க, மத்திய அரசும் மாநில அரசுகளும் பல ஆயிரம் கோடிகளை செலவழித்து வருகின்றன. இருந்தாலும் இன்னமும் பல லட்சம் சிறுவர், சிறுமிகள் கம்பளம் தயாரிப்பிலும் பீடி சுற்றும் தொழிலிலும் தீப்பெட்டி தொழிற்சாலைகளிலும் வேலை பார்த்து வருகின்றனர். குறைந்த சம்பளம் கொடுத்தால் போதும் என்பதால், அதிக எண்ணிக்கையில் தொழிலாளர்கள் தேவைப்படும் நிறுவனங்கள் சிறுவர்களை வேலைக்கு அமர்த்தி வருகின்றன. அதனால் தான், என்ன அதிரடி ரெய்டு நடத்தி, அபராதம் விதித்தாலும் இந்த பழக்கத்தை ஒழிக்க முடியவில்லை.

விவசாயம், கம்பளம் தயாரிப்பு, எம்பிராய்டரி, தையல் தொழில், பீடி, தீப்பெட்டி, பட்டாசு தயாரிப்பு போன்ற தொழில்களில் தான் அதிக எண்ணிக்கையில் சிறுவர்கள் வேலைக்கு அமர்த்தப்படுகிறார்கள். கிராமங்களில் நிலவும் வறுமைதான் முக்கிய காரணம். பள்ளிக்கு செல்ல வேண்டிய வயதில், உடலுக்கு கேடு விளைவிக்கும் ரசாயனங்களுக்கு மத்தியில் இரவும் பகலும் இவர்கள் வேலை பார்க்கிறார்கள். குடிசைத் தொழில் போல் நடக்கும் இதுபோன்ற பல சிறிய தொழிற்சாலைகளில் அப்பா, அம்மா, அண்ணன், தம்பி, தங்கை என குடும்பமே வேலை பார்க்கிறது. இவர்கள் வேலை பார்க்கும் தொழிற்சாலை குடும்பத்தலைவருக்கு சொந்தமானதாக இருக்கும் பட்சத்தில், அரசு அதிகாரிகள் அங்கு சோதனை கூட நடத்த முடியாது. என் பிள்ளை என் குடும்பத் தொழிலில் எனக்கு உதவியாக இருக்கிறான். இதில் என்ன தப்பு என வாதம் செய்வார்கள். சட்டமும் இதுவரை அவர்களுக்கு ஆதரவாகத்தான் இருக்கிறது. இந்த சட்டத்தை மாற்ற முடிவு செய்துள்ளது திட்டக் குழு மாற்றினால் தான் அனைவருக்கும் கல்வி அளிக்க முடியும் என்பதால் இந்த முடிவு.

பெரும்பாலான சிறிய தொழில்களில் குடும்பமே ஈடுபட்டிருக்கிறது. அப்படி இருந்தால் தான் சம்பாதிக்க முடிகிறது. இருந்தாலும் இந்த நிலைமை அப்படியே நீடித்தால், இந்தக் குழந்தைகளுக்கு எப்படி கல்வியறிவு கொடுக்க முடியும். சொந்த தொழிலாக இருந்தாலும் குழந்தைத் தொழிலாளர்களை அனுமதிக்க முடியாது என திட்டவட்டமாகக் கூறியுள்ளது திட்டக் குழு.

எந்த பெற்றோரும் தங்கள் குழந்தை நன்றாகப் படித்து நல்ல வேலைக்கு போக வேண்டும் என்று தான் விரும்புவார்கள். அதையும் மீறி, வேலைக்கு அனுப்ப காரணம் வறுமை. அது இருக்கும் வரை எந்த சட்டமும் இங்கு செல்லாது.

**– தினகரன்,14.12.2009**

# கல்வி கடைச்சரக்கல்ல

கல்வியும், கல்யாணமும் வியாபாரமாகிவிட்ட சமுதாயத்துக்கு விடிவும் இல்லை, விமோசனமும் இல்லை. உப்பு, புளி, மிளகாய் போன்று கல்வியும் கடைச்சரக்கானால் என்னவாகும் என்பதற்குக் கும்பகோணம் பள்ளியே சாட்சி. அநியாயத்துக்குப் பலியான பிஞ்சுகளைத் தீயா தின்றது? நம் அன்புக் குழந்தைகளை ஒரு தனியார் பள்ளி முதலாளியின் ஆசைக்குப் பலி கொடுத்தோம். கௌரவத்துக்காகக் கல்வி என்று நம்பிய பெற்றோர்களின் அறியாமைக்குப் பலிகொடுத்தோம். அந்தத் தீயின் கங்குகள் அணைந்துவிட்டதாக நம்பி அடுத்த வேலையைப் பார்க்கக் கிளம்பிவிட்ட நமக்கு, வரலாறு எத்தனை முறைதான் சூடு போடும்?




இனியும் விழிப்புணர்வு வரவில்லை என்றால், வருங்காலம் நம்மை மன்னிக்காது. வணிகச் சந்தையில், தேசத்தின் புனிதப் பொறுப்பான கல்வி எப்படி லாபம் தேடும் தொழிலாகி, தேசத்தின் துயரமாகிவிட்டது என்பதை ஆராய்ந்தால், எல்லாத் திசைகளிலும் சுயநலமே எட்டிப் பார்க்கிறது. ஒவ்வொரு விலைக்கு ஏற்ற வகைவகையான பள்ளி என்பது உலகத்தில் எந்த வளர்ந்த நாட்டிலும் இல்லை. வணிகத்துக்கும் பேராசைக்கும் இடையில் நம் தலைமுறைகளைத் தொலைத்துக் கொண்டிருக்கிறோம். சமூகத்தில் இருக்கிற ஏற்றத்தாழ்வுகளை நீக்குவது தான் கல்வியின் பயனாக இருக்க வேண்டுமே தவிர, மேலும் ஏற்றத்தாழ்வுடைய சமூகத்தை உருவாக்குவதாக இருக்கக் கூடாது. பள்ளியில் ஒரு குழந்தையைச் சேர்த்துக்கொள்ளத் திறமையை அளவுகோலாக வைத்தால், அதுவே தவறு. ஆனால், நாம் இன்னும் மோசமாக வசதியை அளவுகோலாக வைத்திருக்கிறோம். கல்வி வணிகமானால் வாழ்க்கை நரகமாகும். ஏழையாகப் பிறப்பது ஒரு குழந்தையின் குற்றமாகாது. ஏழை என்பதாலேயே தரமற்ற கல்விதான் கிடைக்கும் என்றால், நாம் எப்படி நாகரிகமானவர்கள் என்று சொல்லிக்கொள்ள முடியும்?

தேவையற்ற அநாகரிகங்களை மேலைநாடுகளிலிருந்து காப்பியடிக்கிற நாம், அவர்களிடம் இருக்கிற நல்ல விஷயங்களைக் கற்பதில்லை. முதலாளித்துவ நாடுகளின் சிறப்பே, எல்லோருக்கும் சமமான கல்வி முறை என்பது தான். மந்திரியின் மகனுக்கும், மாடு மேய்ப்பவரின் மகனுக்கும் ஒரே வகுப்பறைகள். அனைவருக்கும் தரமான, சமமான கல்வி கிடைக்க அரசுதான் செலவுசெய்யும். அமெரிக்காவிலும், ஐரோப்பாவிலும் தனியார் பள்ளிகள் என்று சொன்னாலே சிரிக்கிறார்கள். ''கல்வி தனியாரிடம் ஒப்படைக்கப்பட்டால், பிறகு எதற்காக அரசாங்கம்?'' என்று கேட்கிறார்கள்.

**சமூகத்தில் இருக்கிற ஏற்றத்தாழ்வுகளை நீக்குவது தான் கல்வியின் பயனாக இருக்க வேண்டுமே தவிர, மேலும் ஏற்றத்தாழ்வுடைய சமூகத்தை உருவாக்குவதாக இருக்கக் கூடாது**

சென்னையின் பிரபலமான ஒரு பள்ளியில் எல்.கே.ஜி. இடம் கிடைக்க நாற்பதாயிரம் ரூபாய் நன்கொடை கேட்கிறார்கள். பெற்றோர்களும் கட்டுகிறார்கள். அவ்வளவு பணம்கட்டிப் படிக்க வைக்கும் போது, குழந்தை விளையாடலாமா என்று பெற்றவர்களுக்குக் கோபம் வருகிறது. காலையில் இரண்டு டியூசன், மாலையில் இரண்டு ஸ்பெஷல் க்ளாஸ், ஹோம் ஒர்க் என்று குழந்தைகளை வதைக்கிறது நமது கல்வி. இன்னொரு பக்கம், அரசே நடத்துகிற பள்ளிகளில் ஒழுங்கான கூரை வசதிகூட இல்லாமல் மரத்தடியில் பாடம் படிக்கிறார்கள் நம் வருங்காலத் தூண்கள். பல வகுப்பறைகளில் ஆசிரியரே இல்லாத அற்புதங்கள்.

சுமார் எழுபது லட்சம் மாணவர்கள் அடிப்படை வசதிகளே இல்லாத பள்ளிகளில் படிக்கிறார்கள். ஏராளமான தொடக்கப் பள்ளிகளுக்கு தலைமை ஆசிரியர்களே இல்லை. ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட நடுநிலைப் பள்ளிகளில் உடற்பயிற்சி ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை. ஒரேயொரு ஆசிரியரை மட்டுமே வைத்து இயங்குகிற அரசுப் பள்ளிகள் ஆயிரக்கணக்கில் இருக்கின்றன. ஐந்து பாடங்களை ஒரே ஆசிரியர் நடத்தும் பள்ளியில் படிக்கிற மாணவனுக்கும், ஒரு பாடத்தை ஐந்து ஆசிரியர்கள் நடத்தும் பள்ளியில் படிக்கிற மாணவனுக்கும் ஒரே தேர்வு முறை. இங்கே ஆரம்பிக்கிற ஏற்றத்தாழ்வு, அந்தக் குழந்தையின் வாழ்நாள் முழுவதும் ஆக்கிரமிக்கிறது. மத்திய, மாநில அரசுகள் கல்வி விஷயத்தில் பொறுப்பில்லாமல்தான் நடந்து கொள்கின்றன. பாதுகாப்புக்கு முப்பது சதவிகிதம் செலவு செய்கிறது அரசு. ஆனால் நாட்டின் தலையெழுத்தை,

வருங்காலத்தைத் தீர்மானிக்கும் கல்விக்கு அதில் பத்தில் ஒரு பங்கு அளவுதான் நிதி ஒதுக்குகிறது. ‘‘கண்டம்விட்டுக் கண்டம் பாயும் ஒரு ஏவுகணை தயாரிக்க ஆகிற பணத்தில் முன்றரை லட்சம் ஆரம்பப் பள்ளிகள் கட்ட முடியும்’’ என்று முன்னாள் பிரதமர் இந்திரா காந்தி நாடாளுமன்றத்திலேயே அறிவித்தார். தெரியாமல் தவறு செய்தால் திருத்தலாம். தெரிந்தே செய்கிறவர்களை என்ன செய்வது? நம் குழந்தைகளுக்கு நாம் பெரிய துரோகத்தைச் செய்து கொண்டு இருக்கிறோம். 'மாலை முழுவதும் விளையாட்டு' என்கிற பாடலின் அர்த்தம் புரியாமல் அதை ஐந்நூறு முறை மாலை முழுவதும் 'ஹோம் ஒர்க்' எழுதிக்கொண்டு இருக்கிறார்கள் நம் செல்வங்கள். முப்பது கிலோவுக்கு குறைவான எடையே உள்ள நம் குழந்தைகள் சுமக்கிற புத்தகப் பையின் எடை இருபது கிலோ.

பந்தயத்தில் பணம் கட்டி ஓட விடுகிற குதிரைகளாகக் குழந்தைகளை மாற்றிக்கொண்டு இருக்கிறோம். வாழ்க்கையில் எந்த நல்ல பண்பையும் அவர்கள் கற்றுக் கொள்ளத் தேவையில்லை; 'மார்க்' அதிகமாக எடுத்து விட்டால் போதும் என்று நினைக்கிறார்கள் பெற்றோர்கள். இதைச் சாதகமாக்கிக் கொண்டு பணம் கறக்கிற வித்தைகளை விதவிதமாக அறிமுகப்படுத்துகின்றன கல்வி நிறுவனங்கள்.

**சுமார் எழுபது லட்சம் மாணவர்கள் அடிப்படை வசதிகளே இல்லாத பள்ளிகளில் படிக்கிறார்கள். ஏராளமான தொடக்கப் பள்ளிகளுக்குத் தலைமை ஆசிரியர்களே இல்லை. ஆறாயிரத்துக்கும் மேற்பட்ட நடுநிலைப்பள்ளிகளில் உடற்பயிற்சி ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை**

நூற்றுக்கு நூறு வெற்றி தராவிட்டால் பள்ளிக்கு அவமானம் என்று கருதி மாணவர்களைக் கடுமையாகத் தண்டிக்கின்றன பள்ளிகள். பத்தாம் வகுப்புக்கான பாடங்களை ஒன்பதாம் வகுப்பிலிருந்தே படிக்க வைக்கிற ஆசிரியர்களும், அதை அனுமதிக்கிற பெற்றோர்களும் 'எனக்கென்ன வந்தது' என்கிற தோரணையில் வேடிக்கை பார்க்கிற அரசுமே, தோல்வி பயத்தில் தற்கொலை செய்து கொள்கிற பிஞ்சு உயிர்களுக்குப் பொறுப்பேற்க வேண்டும். டியூசன் சென்டர்களும், கோச்சிங் வகுப்புகளும் 14 வயதுக்குட்பட்டவர்களுக்கு இலவசக் கல்வி என்று சொல்கிற அரசியல் சாசனத்தையே கேலி செய்கின்றன. பள்ளிக்கு வெளியில் படித்தால் தான் வெற்றிபெற முடியுமென்றால் பிறகு எதற்குப் பள்ளிகள்? ஆசிரியர்கள்? அரசு? கோடிக்கணக்கில் செலவு? பெரும்பணத்தை முதலீடு செய்தால்தான் தரமான கல்வி கிடைக்கும் என்றால், வரதட்சணை, லஞ்சம், ஊழல் போன்ற சமூக நோய்களும் அதிகரித்துக் கொண்டே தான் போகும். வேர் விஷமானால் கனிகள் மட்டும் எப்படி அமிர்தம் ஆகும்?

தமிழ்நாட்டில் கடந்த இரண்டு தலைமுறையாகத் தனியார் பள்ளிகளில், வசதிபெற்ற குழந்தைகள் தமிழே கற்றதில்லை. மறுபுறம் அரசுப் பள்ளிகள் ஏழைகளின் புகலிடமாக மாறிப் போயின. ஆங்கிலக் கல்விதான் சிறந்தது என்ற மாயை திட்டமிட்டு வளர்க்கப்பட்டுள்ளது. 80 சதவிகித கிராமப் பிள்ளைகள் தங்களுக்கு ஆங்கிலம் தெரியவில்லையே என்கிற ஆதங்கத்திலும் தாழ்வு மனப்பான்மையிலும் தவிக்கிறார்கள். இது சமூகத்தில் பின்தங்கியுள்ள பெரும்பாலான மாணவர்களுக்கு இழைக்கப்படும் அநீதி. கல்வியின் முக்கிய அம்சமாகக் கருதப்படும் 'சைக்கோ மோட்டார் ஸ்கில்ஸ்' என்னும் கைகளால் செய்கிற கலைநயமிக்க திறமைகளை நம் பள்ளிகள் கவனத்தில் கொள்ளவே இல்லை. உழைக்கும் வர்க்கக் குழந்தைகளுக்கு எளிதாகக் கைவந்த திறமைகள் இவை. ஆனால் இவற்றுக்கெல்லாம் நம் பள்ளிகளில் இடமே இல்லை. உடல் உழைப்புக் கேவலமாகவும், மூளை உழைப்பை உயர்வாகவும் நம் கல்வி முறை மாற்றிவிட்டது. மனிதனை மேல் சாதி, கீழ் சாதி என்று கூறுபோட்ட வர்ணாசிரமத்தின் வேலையை இன்று கல்வியே செய்துகொண்டு இருக்கிறது. இந்தக் கல்வி முறை இருக்கிற வரையில் நம்நாட்டில் சாதி ஒழியாது.

இங்கு கல்வி என்பதே ஒரு வடிகட்டுதலாக மாறி விட்டது. கல்வி அமைப்பின் ஒவ்வொரு கட்டத்திலும் கணிசமான குழந்தைகள் தகுதியற்றவர்கள் என முத்திரை குத்தப்பட்டு வெளியே தள்ளப்படுகிறார்கள். இவர்கள் அனைவருமே தலித்துகள், ஆதிவாசிகள், மிகவும் பின்தங்கியோர், ஏழைகள் தான். எந்தக் கட்சி ஆட்சியில் இருந்தாலும் இந்தக் கொடுமை மட்டும் தொடர்ந்து கொண்டேதான் இருக்கிறது.

வெளிநாடு செல்லவும், பன்னாட்டு நிறுவனங்களில் வேலை பார்க்கவும் விரும்புகிற 3 சதவிகிதம் பேருக்காக நமது பாடத்திட்டங்கள் தயாரிக்கப்படுவதுதான் உச்சக்கட்ட வன்முறை மழைக்காகக்கூடப் பள்ளிக்கு ஒதுங்காத எழைப் பெற்றோரின் பிள்ளைகள் எப்படி இந்தப் பேராசைக் கூட்டத்தோடு போட்டிபோட முடியும்? சமுதாயப் பிரமிடின் உச்சி கூர்ந்துகொண்டே போகிறது. வாய்ப்புகள் குறுகிக்கொண்டே வருகின்றன. வாய்ப்புகள் குறைவது ஆதிக்கம் செலுத்துபவர்களுக்கு அனுகூலமாகிறது.

**சரி. இதற்கு என்னதான் தீர்வு ?**

ஏழை, பணக்காரர் பாகுபாட்டை ஒழிக்கும் 'பொதுப்பள்ளிக் கல்விமுறை' தான்! நாட்டின் எதிர்காலத்துக்கு அதுவே நன்மை தரும். குழந்தைகளின் வருங்காலத்துக்கு வளம் சேர்க்கும். சமமான கல்வி வாய்ப்பு என்பது வேரை வளமாக்குகிற முயற்சி. ஒன்பது மணிப் பள்ளிக்குக் காலையில் ஏழு மணிக்கே புறப்படுகிறார்கள் நம் பிள்ளைகள். ஐந்து மணி நேரம் படிக்க நான்கு மணிநேரம் பயணிப்பதால் அதிலேயே களைப்படைந்து விடுகிறார்கள். பெரிய பள்ளிகளில் சேர்க்கிறேன் என்று பல மைல் தூரம் இருக்கிற பள்ளிகளில் மூன்று வயதுக் குழந்தையை சேர்ப்பது குற்றமாகக் கருதப்பட வேண்டும். அதற்கு முன் எல்லா இடங்களிலும் அரசு தரமான பள்ளிகளை உருவாக்க வேண்டியது அவசியம்.

**கல்வி – ஏழை, பணக்காரர் என்ற பாகுபாட்டை ஒழித்து, ஜனநாயக சமுதாயத்தை உருவாக்குவதுதான் கல்வி. கல்வியின் பண்பும் பயனும் இவைதான்**

தாய்மொழி வழியில் கல்வி கற்பிக்கப்பட வேண்டும். தமிழ்வழியில் கற்பிக்கப் பாடத்திட்டங்கள் உருவாக்க வேண்டும். கல்வி, அரசியல் சாசனத்தின் பொதுப் பட்டியலில் இருந்து மாநில அரசுக்கு மாற வேண்டும். மாநில அரசுப் பள்ளிகளை நடத்துகிற, கண்காணிக்கிற அதிகாரத்தைப் பஞ்சாயத்துக்களிடம் ஒப்படைக்க வேண்டும். கல்வி உலகின் பெரும்பாலான நாடுகளிலும், நம் நாட்டின் பல மாநிலங்களிலும் உள்ளாட்சிப்பொறுப்பில் தான் இருக்கிறது. அரசு, பெற்றோர், ஆசிரியர், வணிகக் கல்வி நிறுவனம் எனப் பல தரப்பினரிடமும் முடங்கிக் கிடக்கிறது குழந்தைகளின் எதிர்காலம். பாடங்கள், வகுப்பறையின் நான்கு சுவர்களுக்கு இடையே மனப் பாடம் செய்வதற்கு அல்ல. வாழ்க்கையை வாழக் கற்றுக்கொடுப்பதே கல்வி. குழந்தைகளின் அனைத்து வகையான திறமைகளையும் வளர்ப்பதே கல்வி. ஏழை, பணக்காரர் என்ற பாகுபாட்டை ஒழித்து, ஜனநாயகச் சமுதாயத்தை உருவாக்குவது தான் கல்வி. கல்வியின் பண்பும் பயனும் இவைதான்.

**– ஜனசக்தி, 14.7.09**

# கழிப்பிட வசதி உண்டு ஆனால் பயன்படுத்தவே முடியவில்லை

கழிப்பிட வசதி இருந்தும் பயன்படுத்த முடியாமல் சுற்றுச்சூழல் சீர்கேட்டில் சிக்கி, அரசு பள்ளி மாணவர்கள் அவதிப்படுகின்றனர். சென்னை செங்குன்றம் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில், புழல், பாடியநல்லூர், சோழவரம் சுற்று வட்டார பகுதிகளில் இருந்து 1,500க்கும் மேற்பட்ட மாணவர்கள் படித்து வருகின்றன. இப்பள்ளியில் கழிப்பிட வசதிகள் இருந்தும் அவற்றை மாணவர்கள் பயன்படுத்த முடியாமல் பல ஆண்டுகளாக தவித்து வருகின்றனர். கடந்த சில ஆண்டுகளுக்கு முன் பள்ளியின் மற்றொரு பகுதியில், புதிய கழிப்பிடம் கட்டப்பட்டது. ஆனால், போதிய தண்ணீர் மற்றும் பராமரிப்பின்றி மாணவர்களின் பயன்பாட்டிற்கு உதவவில்லை. பழைய கழிப்பிடமும் மூடப்பட்டு கிடக்கிறது. சமீபத்தில் புதிதாக கட்டப்பட்ட மற்றொரு சிறுநீர் கழிப்பிடமும் முழுமையாக கட்டப்படாமல் அரைகுறையாக விடப்பட்டுள்ளது. இதனால், அரசுப்பணம் வீணடிக்கப்பட்டுள்ளது. மேலும், மாணவர்கள் இடைவேளை நேரங்களில் பள்ளிக்கட்டடங்கள், விளையாட்டு மைதானம் ஆகியவற்றையே கழிப்பிடமாக பயன்படுத்தும் அவலமும் நீடிக்கிறது. மாணவர்களின் இந்த நடவடிக்கையால், பள்ளிக்கு அருகில் வசிப்பவர்கள் 'முகம் சுளிக்கும்' நிலை ஏற்பட்டுள்ளது.

ஒரு சில மாணவர்கள் தங்களின் அவசர இயற்கை உபாதைக்காக அருகில் உள்ள புழலேரிக்கு செல்ல வேண்டிய நிலை நீடிக்கிறது. இதனால் ஏரியில் மூழ்கி உயிரிழக்கும் ஆபத்தும் உள்ளது. போதிய அளவு குடிநீர் வசதியும் கிடைக்காமல் அவதிப்படுவதாக பள்ளி மாணவர்கள் புலம்புகின்றனர். கடுமையான கோடையில் மாணவர்களின் நிலை பரிதாபமாக உள்ளது. சுகாதாரம் குறித்து விழிப்புணர்வு ஊர்வலம் மற்றும் விழாக்களை வி.ஐ.பி., க்கள் தலைமையில் நடத்தும் பள்ளி நிர்வாகம், மாணவர்கள் மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பை கருதி, இது போன்ற அடிப்படைவசதிகளை செய்து கொடுக்காமல் அலட்சியம் காட்டுவதாக பெற்றோர்கள் அதிருப்தி அடைந்துள்ளனர். ஏற்கனவே உள்ள கழிப்பிடங்களை சீரமைத்தால் மாணவர்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்புடன் கல்வித்தரமும் உயர வாய்ப்பு உருவாகும். பெற்றோர் – ஆசிரியர் கழகம், பள்ளி வளர்ச்சிக்குழு மற்றும் பள்ளி நிர்வாகம் ஆகியவை இப்பிரச்சனைக்கு தீர்வு காண முன் வந்து முயற்சிக்க வேண்டுமென பெற்றோர்கள் எதிர்பார்க்கின்றனர்.

**– தினமலர், 12.9.2009**

# தமிழக சட்டமன்ற நடப்புக்கூட்டத் தொடரில் பள்ளிக்கல்வி தொடர்பாக எழுப்பப்பட வேண்டிய முக்கியப் பிரச்சினைகள்

1. தமிழ்நாட்டில் கல்வி அளிப்பு மாணவரது சமூக, பொருளாதார வேறுபாடுகளுக்கேற்ப பெரும் ஏற்ற தாழ்வுகளும் பாகுபாடுகளும் நிரம்பப்பெற்றதாக உள்ளது. இதனால் வேலைவாய்ப்புகளிலும் பாதிப்பு ஏற்படுகின்றது. வசதி நிறைந்த நாடுகளிலும் கூட இத்தகைய வேறுபாட்டை கல்வி அளிப்பில் காணமுடியாது. பெரும்பான்மையான மக்கள் தரமான கல்வி மறுக்கப்படுவதால் நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியில் பங்கு கொள்ள இயலாதவர்களாக இருக்கின்றனர். இது நாட்டிற்கே நல்லதல்ல. இந்நிலையை மாற்றிட அனைவர்க்கும் சமமான, தரமான கல்வியை இலவசமாக அருகமைப் பள்ளி முறையில் பொதுப்பள்ளித் திட்டத்தின் மூலம் அரசே அளிக்கவேண்டும்.




2. இன்றைய ஆளும் கட்சியான தி.மு.க தனது தேர்தல் அறிக்கையில் சமச்சீர் கல்வி முறையினை செயல்படுத்துவோம் என்று உறுதி அளித்தது. அதனை நடைமுறைப்படுத்த கருத்துரை வழங்கிட அமைக்கப்பட்ட குழுவும் தனது அறிக்கையினை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் ஏப்ரல் 2007ல் அளித்தது. ஆனால் அரசு அதன்மீது உடனடி நடவடிக்கை எடுக்காது பிற மாநிலங்களில் பின்பற்றப்படும் முறைகளைக் கண்டு அறிய ஐவர் குழு அமைத்துள்ளது சமச்சீர் கல்வித் திட்டத்தைக் கைவிடவே என்று மக்கள் கருதுகின்றனர். வேறு எந்த மாநிலத்திலும் ஒன்றிற்கு மேற்பட்ட கல்வி முறைகள் சி.பி.எஸ்.ஈ திட்டம் தவிர மாநில அரசுகள் வழங்குவதில்லை என்பது அனைவரும் அறிந்த உண்மை. எளிய மக்களின் வாழ்வில் வசந்தம் வீசிட உடனடியாக சமச்சீர் கல்வி முறையை செயல்படுத்த வேண்டும்.

3. பல பள்ளிகள் கட்டாய நன்கொடை வசூலித்தும், கட்டணங்களை உயர்த்தியும் வருகின்றன. கல்வி அளிப்பு ஒரு சேவை என்பதற்கு மாறாக அது ஒரு வணிகம் என்ற நிலை ஏற்பட்டுவருவது விரும்பத்தக்கதல்ல, முற்றிலும் ஒழிக்கப்பட வேண்டியது. நன்கொடையைத் தடை செய்ய சட்டம் ஒன்று இச்சட்டமன்றத் தொடரிலேயே கொண்டுவரப்படுமென்று மாண்புமிகு பள்ளிக்கல்வி அமைச்சர் சட்ட மன்றத்தில் உறுதி அளித்திருப்பது வரவேற்பதற்குரியது. நிறைவேற்றப்படும் சட்டம் குறைகளின்றி சி.பி.எஸ்.ஈ பள்ளிகள் உள்ளிட்ட மாநிலத்தில் செயல்படும் எல்லாப் பள்ளிகளுக்கும் பள்ளி முறைகளுக்கும் பொருந்தும் வண்ணம் அமைய வேண்டும்.

4. தமிழ் நாட்டில் பல பள்ளிகள் மூடப்பட்டுவருவது மிக வேதனைக்குரியது. சென்னை மாநகராட்சியில் மட்டும் இவ்வாண்டில் 30 பள்ளிகள் செயல்படாது என்பதால் பல இளஞ்சிறார்களும் வீட்டிற்கருகில் படிக்கும் வாய்ப்பினை இழப்பார்கள். இது போலவே தமிழ்நாட்டின் பிற பகுதிகளிலும் ஏராளமான பள்ளிகள் மூடப்பட்டும், மூடுவதற்கு ஆணை இடும் தருவாயிலும் இருப்பதாக அறிகின்றோம். ஏழை எளியவர் கல்வி மறுப்பிற்கு உள்ளாகின்றனர். இதற்குக் கூறப்படும் எக்காரணமும் ஏற்புடையதல்ல. தனியார் பள்ளிகள் வளர்ச்சிக்காகப் பொதுப் பள்ளிகளை முடக்குவது என்ற பல ஆண்டுகளாக பின்பற்றி வரும் தவறான கொள்கையின் விளைவே இது என்பது தெளிவு. ஆங்கிலவழித் தனியார் பள்ளிகளுக்கு இனி அனுமதி வழங்கக்கூடாது. கல்வி அளிப்பை முழுமையாக அரசே ஏற்பது தான் உறுதியானதும், இறுதியானதுமான தீர்வாகும்.

5. செயல்வழிக் கற்றல், ஆசிரியரின் ஆங்கிலத்திறனை வளர்த்தல், கணிதக் கூடம் அமைத்தல் போன்ற பல நல்ல திட்டங்கள் தொடங்கப்பெற்றிருப்பதை உளமார வரவேற்கின்றோம். ஆனால் இவற்றின் பயன்கள் முழுமையாக மாணவர்களைச் சென்று அடைய தேவைக்கேற்ப போதுமான ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும். பள்ளிக் கல்வியின் தொய்விற்கு மூல காரணம் ஆசிரியர் பற்றாக்குறையே. பெரும்பாலான தொடக்கப்பள்ளிகளில் ஐந்து வகுப்பிற்கு 2 ஆசிரியர்களே உள்ளனர். நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப்பள்ளிகளிலும் ஆசிரியர்கள் பணியிடங்கள் உருவாக்கப்படாமலும், காலியிடங்கள் நிரப்பப்படாமலும் உள்ளன. பல பாடங்களுக்கு ஆசிரியர் இல்லாதிருப்பதும் சர்வ

சாதாரணமாக இருக்கின்றது. ஆசிரியர் – மாணவர் விகிதம் என்பது ஒரு மாயை. பள்ளி நிலையை அறிய உதவாது. இந்த அவல நிலையைப் பிரிவிற்கு ஒரு ஆசிரியர் என்று பணியிடங்கள் உருவாக்கப்பட்டு ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டும்.

6. பல ஆண்டுகளாக அரசு ஆசிரியர் பணியிடங்கள் ஏற்படுத்தாததால் பெற்றோர் – ஆசிரியர் சங்கங்கள் தாமாக மாணவர் நலன் கருதி ஆசிரியர்களை நியமித்து வரும் நடைமுறை பின்பற்றப்பட்டு இன்று ஆயிரக்கணக்கான ஆசிரியர்கள் குறைந்த ஊதியத்தில் எவ்வித பணிப்பாதுகாப்புமின்றி சிறப்பாகப் பணியாற்றிவருகின்றனர். அவர்களுக்கு ஊதியம் வழங்கவும் பள்ளியின் உட்கட்டமைப்பு வசதிகளைப் பெருக்கவும் மற்றும் பள்ளியின் அன்றாட நடைமுறைச் செலவுகளுக்காகவும் பெற்றோர், மாணவரிடமிருந்து நன்கொடை பெற்று வருவது அரசு உட்பட அனைவரும் அறிந்ததே. நன்கொடைக்கு எதிர்ப்புக் குரல் ஓங்கி ஒலித்ததும் அரசு நன்கொடை வசூலைத் தடை செய்துள்ளது. இத்தடை வரவேற்கத்தக்கதெனினும் மாணவர் கல்விக்கு மாற்று ஏற்பாடு செய்யாது எடுக்கப்பட்ட நடவடிக்கையால் பெ.ஆ.ச நியமன ஆசிரியர்களுக்கு ஊதியம் அளிக்க இயலாது பலரும் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர். இவ்வாசிரியர்களில் பலர் பல ஆண்டுகளாகப் பணிபுரிபவர். மாணவரது கல்வியில் இழப்பு ஏற்படாதிருக்க பெ.ஆ.ச ஆசிரியர்களை மறு நியமனம் செய்து அவர்கள் ஊதியத்தை அரசே வழங்க வேண்டும். அரசின் தவறான கொள்கையினால் மாணவர் கல்வி பாதிக்கப்படக்கூடாது. இப்பணியிடங்களை முறைப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

7. உடற்பயிற்சி, ஓவியம், கைத்தொழில், இசை போன்ற பாடங்கள் கல்வித்திட்டத்தில் இருந்தும் அவற்றிற்கானப் பணியிடங்கள் நிரப்பப்படாமலும், தேவைக்கேற்பப் புதிய பணியிடங்கள் உருவாக்கப்படாமலும் இருப்பதால் பல ஆண்டுகளாக மாணவரது பன்முக வளர்ச்சி புறக்கணிக்கப்பட்டு பள்ளிகள் வெறும் தேர்வு ஆயத்தப்பள்ளிகளாக மாறிவருவது விரும்பத்தக்கதல்ல. உடனடியாக இப்பாடங்களுக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டு பள்ளிகள் உயிரோட்டமுள்ளக் கல்விக் கூடங்களாக மலர்ந்திடச் செய்யவேண்டும்.

8. ஐக்கிய நாட்டு அவையின் தீர்மானங்களை ஒட்டி, மனித உரிமைக்கல்வி தமிழ் நாட்டின் சில பள்ளிகளில் தற்பொழுது சிறப்பாக நடைபெற்றுவருகின்றது. மாறிவரும் சமுதாயத்தில் ஒவ்வொருவரும் மனித உரிமை பற்றிய முழுமையான புரிதலும் உணர்வும் கொண்டிருக்க வேண்டும் என்பது உலக அளவில் ஏற்கப்பட்டுள்ளதால், மனித உரிமைக் கல்வியைத் தனிப்பாடமாக எல்லாப் பள்ளிகளிலும் அதற்கானத் தனிப் பயிற்சி பெற்ற ஆசிரியர்களால் கற்பிக்க வகை செய்திட வேண்டும்.

9. ஆண்டுதோறும் தேசிய அளவில் வெளியிடப்படும் ASER (Annual Status of Education Report) தமிழ்நாட்டுக் கிராமப்புறப் பள்ளிகளில் பயிலும் மாணவரது கற்றல் திறன்கள் மிகத்தாழ்ந்து இருப்பதைத் தெளிவாக ஆய்வின் மூலம் வெளிப்படுத்தியுள்ளது. இது மிகுந்த கவலைக்கிடமான செய்தி. மாணவர் கற்றல் திறன்களை மேம்படுத்த போதுமான ஆசிரியர்களை நியமித்தும், மாணவர்க்கு குறைநீக்குத் திட்டம் (Remedial Programme) செயல்படுத்தியும் நேர் செய்தல் வேண்டும். காலதாமதம் தலைமுறைகளை பாதிக்கும்.

10. பள்ளிகளில் நிலவும் சமச்சீரின்மைக்கு ஒரு காரணம் முன்பருவக் கல்வி இல்லாமையே. மூன்று வயது நிரம்பிய அனைத்துக் குழந்தைகளுக்கும் மழலையர் பிரிவை எல்லாப் பள்ளிகளிலும் தொடங்கிட வேண்டும். மழலையர் வகுப்புச் செயல்பாடுகள், பாடத் திட்டம், உட்கட்டமைப்பு வசதிகள் ஆகியவற்றைக் குறித்து விதிகள் இயற்றப்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும். ஆங்கில வழிப்பள்ளிகளில் மழலையர் கல்வி நெறிமுறைகளுக்கு முரணாக நடத்தப் பெறும் நர்சரி வகுப்புகள் முறைப்படுத்தப்பட வேண்டும். மழலையர் கல்வியை முறையாக அளிக்கும் பொறுப்பினை அரசே ஏற்க வேண்டும்.

11. அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகள் வலுவிழந்த நிலையில் உள்ளன. அவற்றின் உண்மையான நிலையைக் கண்டறிந்து தக்க நடவடிக்கைகள் எடுக்க அவற்றின் நிலையைக் கண்டு அறிய ஒரு உயர் மட்டக்குழு அமைத்து அதன் பரிந்துரைகளின் அடிப்படையில் பொதுப் பள்ளி மேம்பாட்டுத் திட்டம் செயல் படுத்தப்பட வேண்டும்.

12. அரசியல் சட்ட சரத்து 21 A வை நடைமுறைப்படுத்தக் கொணரப்படும் கல்வி உரிமை மசோதாவில் பல குறைகளைக் கல்வியாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். அக்குறைகள் நீக்கப்பட்டு நாடாளுமன்றத்தால் விரைவில் நிறைவேற்றிட நடுவணரசினை வற்புறுத்தி மாநில சட்டமன்றத்தில் தீர்மானம்

நிறைவேற்றப்பட வேண்டும். அரசியல் சட்டத்திற்கு முரணாக அமைந்துள்ள தமிழ்நாடு கட்டாயக் கல்விச் சட்டம், 1994 திரும்பப் பெற்று உரிய திருத்தங்களோடு புதிய சட்டம் இயற்றிடவேண்டும்.

13. தேசிய கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் (NCERT) 2005– ஆம் ஆண்டில் தேசியக் கலைத் திட்ட வடிவமைப்பை (NCF 2005) வெளியிட்டது. அதன் அடிப்படையில் கலைத் திட்டங்கள், பாடத் திட்டங்கள் உருவாக்கப்பட புதிய கண்ணோட்டத்துடன் மாணவர் விரும்பும் வண்ணம் பாடநூல்களும் தயாரிக்கப்பட்டு சி.பி.எஸ்.ஈ பள்ளிகளில் பின்பற்றப்பட்டு வருகின்றன. சில மாநிலங்கள் அவர் தம் மொழியில் மொழிபெயர்த்தோ அல்லது தழுவியோ தங்கள் மாநிலத் தேவைக்கேற்பப் பாடநூல்களைத் தயாரித்துள்ளனர். NCF 2005 ஐ தமிழில் மொழியாக்கம் செய்து பரவலான விவாதத்திற்கு உட்படுத்த தே.க.ஆ.ப நிறுவனம் தமிழ் நாட்டிற்கு நிதி ஒதுக்கியுள்ள போதிலும் அத்தகைய பரந்த விவாதம் நடை பெறவில்லை. காலந்தாழ்த்தியேனும் NCF 2005 அடிப்படையில் தக்க மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும்.

14. தமிழக வரவு செலவுத் திட்டத்தில் 30% அளவு கல்விக்கு ஒதுக்கப்பட்ட காலம் உண்டு. தற்பொழுது 14–15% அளவே பள்ளிக்கல்விக்கு ஒதுக்கப்படுகின்றது. ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் குறைந்தது 20% மாவது பள்ளிக் கல்விக்கு ஒதுக்கினால் தான் மேற்கூறிய சீரான மாற்றங்களைக் கொண்டு வரமுடியும்.

மேலும் நகராட்சி, மாநகராட்சிகள் வசூலிக்கும் தொடக்கக் கல்வி வரி முழுமையாகச் செலவழிக்கப்படாமலும், ஊழியர்களுக்கு ஒய்வூதியம் வழங்கல் போன்ற கல்வி சம்பந்தப்படாத இனங்களுக்குத் திருப்பிவிடப்படுவதும் வரிவிதிக்கும் நோக்கங்களை முறியடிக்கின்றது. எஸ்.எஸ்.ஏ திட்டப் பயன்கள் கிடைக்கப்பெறாத, ஆனால் தொடக்கக் கல்வி அளிப்பை மேம்படத்தக்கூடிய காரணங்களுக்கே இவ்வரி செலவழிக்கப்பட வேண்டும்.

15. கோத்தாரி கல்வி அறிக்கையை மையப்படுத்தி தேசிய கல்விக் கொள்கை 1968ன் வெளியிடப்பட்டது. அதனைத் தொடர்ந்து தமிழ்நாட்டிலும் 1972ல் தமிழ்நாட்டிற்கென்று கல்விக் கொள்கை மாநிலத் திட்டக்குழுவால் வெளியிடப்பட்டது. அதில் தமிழ், தமிழ் பண்பாடு, தமிழ் வழிக் கல்வி ஆகியவை வலியுறுத்தப்பட்டன. 1986, 1992 ஆகிய ஆண்டுகளில் தேசியக் கல்விக் கொள்கை புதுப்பிக்கப்பட்டது. அதற்குப் பின்னர் புதிய தேசியக் கொள்கை வகுப்பப்படவில்லை. தமிழகத்திலும் 1972க்குப் பிறகு மாநிலக் கல்விக் கொள்கை ஏதும் உருவாக்கப்படாததோடு 1972 கொள்கையினின்று வெகுவாக விலகிச் சென்று தமிழ் புறந்தள்ளப்பட்டும் கல்வி அளிப்பில் சமச் சீரின்மை உருவாக்கியும் உள்ளது சரி செய்யப் படவேண்டும்.

**– எஸ். எஸ். இராஜகோபாலன்**
**வி. வசந்திதேவி**
அமைப்பாளர்கள், கல்வி

## சத்துணவு மையங்களில் கிராம மக்கள் சமையல்

தமிழகத்தில் பெரும்பாலான சத்துணவு மையங்களில் சமையலர், உதவியாளர் மற்றும் அமைப்பாளர் பணியிடங்கள் மொத்தம் 25 ஆயிரம் காலியாகவே உள்ளன. கிராம பகுதிகளில் உள்ள சத்துணவு மையங்களில் சமையல் அமைப்பாளர் மட்டுமே இருப்பார்.

சமையலர் மற்றும் உதவியாளர் இருக்க மாட்டார். இதனால் அந்த சத்துணவு அமைப்பாளரே, கிராம மக்கள் சிலரை அழைத்து மாணவர்களுக்கான சமையலை தயாரித்து வழங்கி வருகிறார்.

தினமும் ஒவ்வொரு வீட்டில் இருந்து சத்துணவு மையத்துக்கு சென்று மாணவர்களுக்கு சமையல் செய்து கொடுப்பதையும் சில கிராம மக்கள் வழக்கமாக வைத்துள்ளனர்.

'இது நம்முடையது...' என்ற நோக்கில் ஊதியம் எதையும் எதிர்பாராமல், மாணவர்களுக்காக சமையல் செய்யும் இத்தகைய கிராம மக்களை தமிழக அரசு கண்டுகொள்ளுமா ?


**– தினமலர், 18.8.2009**

# சம கல்வி உரிமைக்கான மக்கள் இயக்கம்

# People's Movement for the Right to Equitable Education

*No.30, Kamarajar Street, Gandhi Nagar, Saligramam, Chennai 600 093, email:ssrajagopalan@hotmail.com,*
*No.2A, Palace View Apartments, 88, Santhome High Road, Chennai 600 028, email vasanthideviv@gmail.com*

சமக் கல்வி உரிமைக்கான மக்கள் இயக்கம் **தமிழ்நாட்டில் சமச்சீர் பள்ளிக் கல்வி அளிப்பதற்காக தமிழ்நாடு அரசு 30 நவம்பர் 2009 அன்று வெளியிட்டுள்ள அவசரச் சட்டம் இந்திய அரசியல் சாசன சட்டத்திருத்தம் 21ஏ (86வது திருத்தம்)வை மீறுவதால் அச்சட்டத்தை திரும்பப் பெற வலியுறுத்தியது.** இந்த அவசரச் சட்டம், I முதல் Xவது வகுப்பு வரை ஒரே மாதிரியான பாடத்திட்டத்தைக் கொண்ட வாரியத்தை மட்டுமே பரிந்துரைக்கிறது. ஆங்கில வழிக் கல்விக்கு முன்னுரிமை அளித்து தொடர்ந்து கல்வியில் தனியார்மயத்தையும், வணிகமயத்தையும் சட்டப்பூர்வமாக அங்கீகரிக்கிறது. இது +2 (XI & XII)வது வகுப்பு வரை ஏற்கனவே நடப்பில் என்ன இருந்ததோ அவற்றின் தொடர்ச்சியே ஆகும். பள்ளியில் ஒவ்வொரு வகுப்பிற்கும் ஒவ்வொரு பாடப்பிரிவிற்கும் தேவைப்படும் பாடப்புத்தகங்கள் மற்றும் பொதுவான பாடத்திட்டத்தை பரிந்துரைப்பது; பள்ளிக் கல்விக்கான தரம் மற்றும் பள்ளிக் கல்வியை முன்னேற்றுவதற்கான பரிந்துரைகளை அளிப்பது; சமச்சீரான பள்ளிக் கல்வியை நடைமுறைப்படுத்த தேவைப்படும் நடவடிக்கைகள் பற்றி அரசிற்கு



ஆலோசனைகள் வழங்குவது மற்றும்; தேர்வு நடத்துவதற்கான விதிமுறைகள், தேர்வுச் சான்றிதழ் அளிப்பதற்கான குறைந்தபட்ச தரங்கள் குறித்து பரிந்துரைப்பது ஆகியவையே சமச்சீர் கல்வி வாரியத்தின் பணி ஆகும். இது நடைமுறையில் உள்ள முடிவெடுக்கும் அதிகாரம் இல்லாத செயல்படாத பள்ளிக் கல்வி வாரியத்தை போன்றதாகும். இது வெறும் துறை சார்ந்த குழுவாகும். இந்த குழுவில் இடம்பெற்றுள்ள 13 உறுப்பினர்களில் 7 உறுப்பினர்கள் அரசு அதிகாரிகளாவார்கள். அதிகாரிகள் அல்லாத 3 உறுப்பினர்கள் இன்னும் நியமிக்கப்படவில்லை; நியமிக்கப்பட்டாலும் அவர்கள் பெரும்பான்மையினரல்ல, அவர்களின் பதவியை நீக்கும் அதிகாரத்தை அரசு தன்னிடம் வைத்துக் கொண்டுள்ளது. இந்த வாரியம் ஆங்கில வழி கல்வியை தொடர்வதை அனுமதிக்கிறது, பயிற்று மொழியை அவர்கள் விருப்பப்படி தேர்வு செய்ய மெட்ரிக் பள்ளிகளுக்கு சுதந்திரம் அளிக்கிறது.

## (0–6 வயது) முன்பருவ குழந்தை பராமரிப்பு, வளர்ச்சி மற்றும் கற்றலுக்கான உரிமை உள்ளிட்ட 18 வயது வரை உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் இலவச, கட்டாய, தரமான, சமமான கல்விக்கான உரிமையை நிறைவேற்ற ஒரு முழுமையான சட்டத்தை இயற்ற வலியுறுத்துகின்றோம்

கடந்த 20 ஆண்டுகளாக எண்ணற்ற பிரச்சார அமைப்புகளும் சமூக அமைப்புகளும் கல்வி உரிமைக்கான பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருகின்றன. சமக்கல்வி உரிமைக்கான மக்கள் இயக்கத்தினர் தமிழக அரசு இச்சட்டத்தை உடனடியாக விலக்கிக் கொண்டு, (0–6 வயது) முன்பருவ குழந்தை பராமரிப்பு, வளர்ச்சி மற்றும் கற்றலுக்கான உரிமை உள்ளிட்ட 18 வயது வரை உள்ள அனைத்து குழந்தைகளுக்கும் இலவச, கட்டாய, தரமான, சமமான கல்விக்கான உரிமையை நிறைவேற்ற ஒரு முழுமையான சட்டத்தை இயற்ற வலியுறுத்துகின்றோம். நாங்கள் சமச்சீர் பள்ளி கல்விக்காக ஒரு பொது பள்ளிக் கல்வி வாரியம் அமைக்கும் தமிழக அரசின் இந்த முன்மொழிதல் பற்றாக்குறை என்று கருதுகின்றோம். இது இந்திய அரசியல் சட்டத்தின் 21A (86வது சட்டத் திருத்தம்) பிரிவை மீறுவதாக உள்ளது, குழந்தைகளின் இலவச, கட்டாயக் கல்வி உரிமைக்கான சட்டம் 2009ல் உள்ள குறைந்தபட்ச தர நிர்ணயங்கள் (பற்றாக்குறையாக உள்ளவை) கூட இந்த அவசர சட்டத்தில் இடம்பெறவில்லை. குழந்தைகளின் இலவச, கட்டாயக் கல்வி உரிமைக்கான சட்டமே உன்னிக்கிருஷ்ணன் எதிர்

ஆந்திரப்பிரதேச மாநில வழக்கில் உச்ச நீதிமன்றம் அளித்த தீர்ப்பை மீறுகிறுது.

முனைவர் முத்துக்குமரன் குழு அறிக்கை மற்றும் திரு.M.P.விஜயகுமார், இஅப (ஓய்வு) அவர்களின் அறிக்கைகளின் அடிப்படையில் தான் இந்த அவசரச் சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. இந்தச் சட்டத்தை இறுதி செய்வது பற்றிய அரசின் நடவடிக்கைகளில் வெளிப்படைத் தன்மை கொஞ்சம் கூட இல்லை. இந்த அவசரச் சட்டத்தை இவ்வளவு விரைவாக அரசு கொண்டுவந்தது. இந்த அவசரச் சட்டம், முழுமையான சட்டமாக்கப்படுவதற்கு முன் பரவலான பொது விவாதத்தின் மீது அரசிற்கு நம்பிக்கை இல்லை என்பதையே காட்டுகிறது. மேலும், இந்த அவரசச் சட்டம் சமச்சீர்க் கல்வி என்றால் என்ன என்று விளக்கவில்லை. ஆசிரியர் மற்றும் மாணவர் சங்கங்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள், பிற சமூக சேவை அமைப்புகள் பலமுறை தங்கள் கருத்தை வலியுறுத்திய பிறகும் கூட, முனைவர் S.முத்துக்குமரன் தலைமையிலான குழு தனது அறிக்கையில் சமச்சீர்கல்வி பற்றிய ஒரு குறுகிய விளக்கத்தையே அளித்துள்ளது. இந்தக் குழு அறிக்கையின் பரிந்துரைகளில் எவற்றை எல்லாம் ஒப்புக்கொண்டது, எவற்றை நிராகரித்தது அல்லது தாமதப்படுத்தியது என்பதைப் பற்றி அரசு பொதுமக்களிடம் கூறவில்லை. முனைவர் முத்துக்குமரன் குழு அறிக்கையும் திரு.M.P.விஜயகுமார் அறிக்கையும் பொது விவாதத்திற்கு மக்களிடம் தெரிவிக்கப்படவில்லை. இந்த அவசரச் சட்டம் ஆங்கிலத்தில் மட்டுமே உள்ளது. குறைந்தது சமமான மற்றும் தரமான கல்வியும் ஒரே மாதிரியான கல்வி முறையும் (Uniform System of Education) ஒன்றுதானா என்பதையாவது அரசு பொது மக்களிடம் தெரிவிக்க வேண்டும். இந்த அவசரச் சட்டத்தில் எங்கேயும் சமச்சீர்கல்வி பற்றிய விளக்கம் இல்லை.

இந்த அவசரச் சட்டத்தின் முகவுரையில் ஒரே மாதிரியான கல்வி முறை சமூக நீதியை நிலைநாட்டுவதே சமச்சீர் கல்வி முறையின் நோக்கம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், பல்வேறு வகையான பள்ளிகளில் உள்ள பரவலான வேறுபாடுகளை நீக்க எந்த சட்டப் பிரிவும் இந்த அவசரச் சட்டத்தில் குறிப்பிடப்படவில்லை. அவசரச் சட்டத்தில் குறிப்பிட்டுள்ள சமமான கல்வி முறை, மாநில வாரியம், அரசு பள்ளி, அரசு உதவி பெறும் பள்ளி, தனியார் பள்ளி ஆகியவை பற்றி இரண்டாவது பிரிவில் (பிரிவு 2) விளக்கம் இல்லை. சொல்லப்போனால் நான்கு வகையான கல்வி முறை பாடத்திட்டத்தின் உள்ளடக்கத்தில் குறிப்பிடும் படியான வேறுபாடு எதுவும் இல்லை என்று முனைவர்.S.முத்துக்குமரன் குழு கண்டறிந்துள்ளது. இந்த அறிக்கையில் விளக்கப்பட்டுள்ள ஆனால் இந்த அவசரச் சட்டத்திலோ வேறு வகையிலோ அரசால் விளக்கப்படாத பல்வேறு கல்வி முறைகளிடையே நிலவும் வேறுபாடுகளுக்கு வேறு பல காரணிகள் தான் காரணம்.

மாநில பொது வாரியம் என்ற பெயரில் உள்ள புதிய வாரியம் ஏற்கனவே நடைமுறையில் இருக்கும் வாரியங்களுக்கு மேலாக செயல்படுமா அல்லது அவற்றோடு கூடுதலாக இந்த வாரியம் செயல்படுமா என்று அவசரச் சட்டம் குறிப்பிடவில்லை. அப்படியென்றால், சமச்சீர் சல்வியை நடைமுறைப்படுத்துவதில் ஒவ்வொரு வாரியங்களுக்கும் உள்ள பல்வேறு கல்வி வாரியங்களுக்கும், புதிதான மாநிலப் பொதுக் கல்வி வாரியத்திற்குமான தொடர்பு பற்றி விளக்க இந்த அவசரச் சட்டம் தவறிவிட்டது.

பள்ளி பற்றிய விளக்கங்களில், HR&CE துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளைப் போன்ற அரசுப் பள்ளிகள் (Quasi Government Schools), மாநில மற்றும் பொதுத் துறை நிறுவனங்களால் நடத்தப்படும் பள்ளிகள் பற்றிய விளக்கம் இணைக்கப்படவில்லை. இந்த அவசரச் சட்டத்தின் நடைமுறையிலிருந்து மத்திய அரசால் நடத்தப்படும் பள்ளிகள் (CBSE) விலக்கு அளிக்கப்பட்டிருந்தாலும், அதே போன்ற ICSE, IB போன்ற பள்ளிகள் விடுபட்டுள்ளன. முக்கியமாக, முனைவர். S.முத்துக்குமரன் குழு பள்ளிக்கல்விக்கான பொது வாரியம் எவற்றையும் சாராமல் தனி செயல்பாட்டோடு (autonomous) இருக்க வேண்டும் என்றும், இந்த வாரியத்தின் தனிச் செயல்பாடு மற்றும் தனித்துவமான/சுதந்திரமான செயல்பாடுகளை பாதுகாக்க (அரசு) அதிகாரி அல்லாத ஒரு ஆணையர் வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

மேலே குறிப்பிட்டுள்ள எண்ணிக்கைகளில் கல்விக்கான பொது வாரியத்தில் மெட்ரிக், ஆங்கிலோ இந்தியன் மற்றும் ஓரியண்டல் பள்ளிகள் மட்டும் தான் இடம் பெற்றிருக்கின்றன. மிகப்பெரிய எண்ணிக்கையில் உள்ள மாநில வாரியப் பள்ளிகள், ஆரம்ப பள்ளிகள், அரசு மற்றும் உள்ளாட்சிப் பள்ளிகள் இடம்பெறவில்லை என்பது அதிர்ச்சியான தகவலாகும். இந்த வாரியத்தில் பெற்றோருக்கு எந்தஒரு பிரதிநிதித்துவமும் இல்லை.

ஆங்கில வழிக்கல்வியில் இயங்கும் தனியார் மெட்ரிக் பள்ளிகள் போன்ற பள்ளிகள் தற்பொழுது நடைமுறையில் உள்ளதைப் போலவே தொடர்ந்து இயங்கும் என்ற நிலையில் பொதுப் பாடத்திட்டம் மற்றும் பொது பள்ளிக் கல்வி வாரியம் அறிமுகப்படுத்தப்பட்ட பிறகும் கூட பல்வேறு பிரிவு பள்ளிக் கல்விமுறைகளின் இணைப்பு இல்லை. நடைமுறையில் உள்ள பல்வேறு விதமான பள்ளிக் கல்வி முறையை விடுத்து ஒரே ஒரு மாநில கல்வி வாரியத்தை உடனடியாக அறிமுகப்படுத்த வேண்டும் என்று தமிழக அரசைக் கேட்டுக் கொள்கிறோம். இந்த மாநில கல்வி வாரியம் மாநில அரசின் முழுமையான நிதி

## பள்ளிகள், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களின் எண்ணிக்கை விவரங்கள் குறித்த டாக்டர் முத்துக்குமரன் குழு அறிக்கை

| வ.எண். | பள்ளிகள் | பள்ளிகளின் எண்ணிக்கை | மாணவர்களின் எண்ணிக்கை | ஆசிரியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1. | ஆரம்பப்பள்ளி | 34208 | 3882092 | 115568 |
| 2. | Upper Primary | 8017 | 2348141 | 62156 |
| 3. | உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளி (மாநில வாரியம்) | 5908 | 4802523 | 127832 |
| 4. | மெட்ரிகுலேஷன் | 3474 | 1743024 | 98808 |
| 5. | ஆங்கிலோ இந்தியன் | 41 | 51575 | 1367 |
| 6. | ஓரியண்டல் | 25 | 10230 | 301 |

ஒதுக்கீட்டில் தமிழைப் பயிற்றுமொழியாகக் கொண்ட பொதுப் பள்ளி முறை மற்றும் அருகாமைப் பள்ளிகள் என்ற அடிப்படையில் இருக்க வேண்டும். இவ்வாறு செய்வது மட்டுமே கல்வியில் உள்ள சமச்சீர் இன்மையை ஒழித்து சமூக நீதியை நிலைநாட்டுவது என்ற நோக்கத்தை அடைய வழிவகுக்கும். இதை நிறைவேற்ற, பொதுப் பள்ளி வாரியத்தை விட கேரளா, கர்நாடகா மாநிலத்தில் உள்ள சட்டங்களைப் போன்று ஒரு முழுமையான தமிழ்நாடு மாநில கல்விச் சட்டம் தேவை.

**தமிழக அரசு, சமச்சீர் கல்வியை அறிமுகப்படுத்துவதாக இருந்தால் இப்பொழுது கொண்டு வந்துள்ள இந்த அவசரச் சட்டத்தை உடனடியாக திரும்பப் பெற்று அதற்கு பதில் சட்டமன்றத்தில் இலவச, தரமான, சமச்சீர் கல்வியை அடைவதற்கு சமரசம் செய்யக் கூடாதவற்றை உள்ளடக்கிய புதிய மசோதாவை அறிமுகப்படுத்த வேண்டும்**

**அவை :**

- அருகாமைப் பள்ளி கொள்கையோடு கூடிய பொது பள்ளி முறை
- பல்வேறு கல்வி வாரியங்களை ஒழித்து, ஒரே கல்வி வாரியத்தை அரசு அமைக்க வேண்டும். அனைத்துப் பள்ளிகளையும், இந்த நிர்வாக அமைப்பின் கீழ் கொண்டு வந்து, குழந்தைகளின் தேவைக்கேற்ற கல்வியை வழங்க வேண்டும்.
- 12 ஆம் வகுப்பு வரை எல்லா குழந்தைகளுக்கும் கட்டாயமான இலவசக் கல்வியை (குழந்தைகளுக்கு எந்தச் செலவும் இல்லாமல்) ஏற்றத் தாழ்வுகளற்ற பொதுப் பள்ளி மூலம் வழங்குவதும், அதற்கான நிதி ஒதுக்கீடு செய்வதும் அரசின் அடிப்படையான கடமையாகும். அத்துடன், அரசு பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கிடையே சிறந்த நிர்வாகத் திறமை கொண்ட ஒருங்கிணைப்பை ஏற்படுத்த வேண்டும்;
- 6 வயதுக்குட்பட்ட குழந்தைகளின் பராமரிப்புகளையும், அவர்களுக்கான கல்வியையும் அரசு வழங்க வேண்டும், இது அரசின் அடிப்படைக் கடமையாகும்.
- கல்வி – தனியார் வர்த்தகத்துக்கு திறந்துவிடப்படமாட்டாது என்ற நிலையை – அரசு எவ்வளவு விரைந்து உருவாக்க முடியுமோ, அவ்வளவு விரைந்து உருவாக்க வேண்டும். லாபம் ஈட்டக்கூடிய வர்த்தக மையமாக எந்தப் பள்ளியும் செயல்படக் கூடாது. அடுத்த 3 ஆண்டுகளுக்குள் அரசுப் பள்ளிகள் மற்றும் உள்ளாட்சி பள்ளிகள் மட்டுமே இயங்க முடியும் என்ற நிலை உருவாக்கப்பட வேண்டும். 12 ஆம் வகுப்பு வரை அனைத்து தனியார் பள்ளிகளும் தடைப்படுத்தப்பட்டுவிட்டன என்ற நிலை வர வேண்டும்.
- அனைத்துப் பள்ளிகளிலும் தமிழ் அல்லது தாய்மொழியே பயிற்று மொழியாக இருத்தல் வேண்டும்.
- ஆங்கிலம் தேவையான மொழி என்ற அடிப்படையில் அனைத்துப் பள்ளிகளிலும், மேலும் சிறந்த ஆற்றலோடு கற்பிக்க வேண்டும்.

- தற்போதுள்ள இடஒதுக்கீடு முறை அனைத்துப் பள்ளிகளிலும் கண்டிப்பாகப் பின்பற்றப்பட வேண்டும்.

- 18 வயதுக்குட்பட்ட அனைவருக்கும், பொதுப் பள்ளி அமைப்பு வழியாக சமச்சீர் கல்வியை வழங்குவதற்கான ஒருங்கமைந்த கல்விச் சட்டம் ஒன்றை அரசு இயற்ற வேண்டும். பல்வேறு அரசாணைகள் பதிலாக அனைத்துப் பள்ளிகளுக்கும் பொருந்தும் ஒரு கல்வி சட்டம் இயற்றப்பட வேண்டும். துணைவேந்தர் நிலையில் உள்ள ஒரு கல்வியாளரை ஆணையராகவும் பிற கல்வியாளர்களை உறுப்பினர்களாகவும் கொண்ட தன்னாட்சி உரிமைக் கொண்ட மாநில பள்ளிக் கல்வி வாரியம் ஒன்று இந்த சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட வேண்டும். இந்த வாரியமே ஒட்டுமொத்த பள்ளிக் கல்விக்கு பொறுப்பாக்கப்பட வேண்டும்.

- அரசியல் சட்டம் வலியுறுத்துவது போல, பாடத்திட்டம், பள்ளி விதிமுறைகள், வகுப்பு நடைமுறைகள் போன்றவை கற்பவருக்கு மகிழ்ச்சியளிக்கக்கூடிய வகையிலும், குழந்தைகளின் நலன் கருதி அவர்களுக்கு எந்தவித தண்டனைகளையும் வழங்காத வகையிலும் இருக்க வேண்டும்.

- ஆசிரியர்கள் கல்விப் பணிகளை செம்மையாக ஆற்றிடவும், மாணவர்களுக்கு பயன்படவும், அவர்களின் கற்றலுக்கு தூண்டிடும் கருவியாக கடமையாற்றவும் வேண்டுமானால், குறைந்தது ஒரு வகுப்புக்கு ஒரு ஆசிரியராவது நியமிக்கப்பட வேண்டும். உரிய கல்வித் தகுதியுடைய ஆசிரியர்களை முறையான ஊதியத்தோடு, போதுமான எண்ணிக்கையில் நியமிக்க வேண்டும்.

- கல்வியானது, குழந்தைகளின் கேள்வித்திறன், கற்பனைத் திறன்களை ஊக்குவித்து, அவர்களை அதிகாரமிக்கவர்களாக மாற்றுவதற்கேயாகும்.

- அரசு வகுத்துள்ள விதிமுறைகளுக்கேற்ப பள்ளிகளின் கட்டமைப்பு வசதிகள் அமைத்திருத்தல் வேண்டும்.

தங்கள் உண்மையுள்ள

**எஸ்.எ.ஸ். இராஜகோபாலன், V.வசந்திதேவி**

அமைப்பாளர்கள்

## அரசு விடுதி மாணவர்கள் தட்டு ஏந்தி போராட்டம்

வேலூரில் அரசு கல்லூரி ஆதி திராவிடர் நல விடுதி மாணவர்கள் சாப்பாடு சரியில்லை என கூறி கையில் தட்டு ஏந்தி போராட்டம் செய்தனர். வேலூரை அடுத்த பல வன்சாத்து குப்பத்தில் அரசு கல்லூரி ஆதி திராவிடர் நல விடுதி உள்ளது. இங்குள்ள மாணவர்கள் 42 பேர் வியாழன் அன்று காலைவிடுதியிலிருந்து கையில் சாப்பாடு தட்டுடன் வெளியே வந்தனர்.

விடுதி முன்பு கூடிய இவர்கள் விடுதியில் உணவு வழங்கப்படாததைக் கண்டித்து கோஷம் எழுப்பினர். முாணவர்கள் திடீர் போராட்டத்தால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது. இது பற்றி தகவலறிந்த ஆதி திராவிடர் நல தனி தாசில்தார் சாந்திபாய் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து மாணவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது மாணவர்கள் தாசில் தாரிடம் புகார் மனு கொடுத்தனர். அதில் விடுதியில் அட்டவணைப்படி உணவு வழங்கப்படுவதில்லை. மேலும் சாப்பாடு மாணவர்களுக்கு போதுமானதாக இல்லை. விடுதி வார்டனுடன் தொடர்புடைய சீனியர் மாணவர்களுக்கு தனியே சமைக்கிறார்கள்.

தினமும் அவர்கள் சாப்பிட்ட பின்னர் தான் நாங்கள் சாப்பிட வேண்டும். இதனால் பல நாட்கள் உணவு இல்லாமல் வெளியே ஓட்டலில் சாப்பிடும் நிலை ஏற்படுகிறது. கடந்த சில நாட்களுக்கு முன்பு உடல் நலம் சரியில்லாத மாணவர் ஒருவருக்கு உணவு இல்லை. இது பற்றி வார்டனிடம் அந்த மாணவர் கேட்ட போது வார்டன் அவரை கன்னத்தில் மாறி மாறி அறைந்தார். உணவு பற்றி புகார் செய்தால் விடுதியில் இருந்து பெயரை நீக்கிவிடுவதாக மிரட்டுகின்றனர். எங்களுக்கு உணவு கிடைக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கண்ணீரோடு தெரிவித்துக் கொள்கிறோம். இவ்வாறு அதில் கூறியிருந்தனர்.

தாசில்தார் இதுபற்றி விசாரிப்பதாக கூறினார். இதனையடுத்து மாணவர்கள் கலைந்து சென்றனர். அதிகாலையில், நடந்த மாணவர்கள் போராட்டம் பரபரப்பை ஏற்படுத்தியது.

**– 11.1.10, தீக்கதிர்**

# கல்வி உரிமைச் சட்டம் : ஏழைகளின் சாபக்கேடு

**– பேராசிரியர் பி.எம். பார்கவா**
துணைத் தலைவர், தேசிய அறிவு ஆணையம், ஹைதராபாத்.

### வெகு மக்கள் கல்வி

கல்வி குறித்து விவாதிப்பதற்கு நான் ஒன்றும் கல்வித்துறை வல்லுனரோ, செயல்முனைப்பாளரோ, சட்ட அறிஞரோ, கொள்கைகளை வகுப்பவரோ அல்ல. மாணவனாக இருந்த போது நாட்டின் விடுதலைக்காகப் போராடிய கோடிக்கணக்கானோரில் ஒருவனாகப் பங்கேற்ற, இந்த நாட்டை நேசிக்கிற, அக்கறையுள்ள ஒரு சாமான்ய குடிமகன்தான் நான். 2003ம் ஆண்டில் நாங்கள் ‘‘தேசத்திற்கான செயல்திட்டம்’’ என்ற ஒன்றைத் தயாரிக்கிற முயற்சியில் ஈடுபட்டோம். அந்தத் திட்டத்தின் ஒரு பகுதி, நம் நாட்டின் அனைத்துப் பிரச்சனைகளையும் ஒரு விரிவான பட்டியலாகத் தயாரிப்பதாகும். அவற்றில் எந்தப் பிரச்சனைகளுக்குத் தீர்வு காணாவிட்டால் மற்ற பிரச்சனைகளுக்குத் தாமாகவே தீர்வு பிறக்காது என்கிற வகையில் உச்சத்தில் உள்ள பிரச்சனைகளை அடையாளம் காண முயன்றோம்; அதற்காக அனைத்துப் பிரச்சனைகளையும் ஒன்றோடொன்று தொடர்பு படுத்தினோம். அந்த முயற்சி முடிவுக்கு வந்தபோது, பட்டியலின் உச்சத்தில் ஐந்து பிரச்சனைகள் இடம்பிடித்தன. கல்வி, தண்ணீர், விசை, ஊழல், அரசு நிர்வாகம் ஆகியவையே அந்த ஐந்து பிரச்சனைகளாகும். இவற்றில் முதலிடம் பிடித்தது கல்விப் பிரச்சனைதான். அந்த அறிக்கை 2003 டிசம்பர் 29 அன்று சோனியா காந்தி அவர்களிடம் வழங்கப்பட்டது.

இன்று நாட்டில் மக்களைப் பிளவுபடுத்துகிற முக்கியமான விவகாரம் மதமோ, சாதியோ, மொழியோ அல்ல, கல்விதான். கல்வி சார்ந்த பாகுபாடுகள்தான் மிகுந்த கவலையையும் அச்சத்தையும் ஏற்படுத்துகிற பிரச்சனையாகத் தலைதூக்கியுள்ளன. நாட்டு மக்களில் கிட்டத்தட்ட 80 விழுக்காட்டினர் கல்விக்கான வாய்ப்பற்றவர்களாக இருக்கின்றனர். கடைசியாக மேற்கொள்ளப்பட்ட மக்கள்தொகை கணக்கெடுப்பு பற்றி ஆய்வு செய்த அர்ஜுன் சென்குப்தா அறிக்கையின்படி, 78 விழுக்காடு மக்கள் ஒரு நாளைக்கு 20 ரூபாய்க்கும் குறைவான வருமானத்திலேயே வாழ்கின்றனர். அர்த்தமே இல்லாத இந்த வருமானத்தில் நிச்சயமாக அவர்களால் தங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கு அனுப்பி ஏதோ ஒரு வகையில் உண்மையான கல்வி பெறச் செய்ய முடியாது. இதில் கவலைக்குரிய விவகாரம் என்னவென்றால், நாட்டின் சுயநல சக்திகள் இந்த அநீதியான நிலையை அப்படியே பராமரிக்க விரும்புகின்றன என்பது தான். சில ஆண்டுகளுக்கு முன் இது தொடர்பாக வெளிப்படையாகக் கருத்துத் தெரிவித்த நான், 6 முதல் 18 வரை பள்ளி செல்லும் வயதுடைய ஒவ்வொரு குழந்தையும், நாம் வழங்கக்கூடிய மிகச்சிறந்த, தரமான கல்வி பெறுவதைக் காண விரும்புகிறேன் எனக் கூறியிருந்தேன். மறுநாள் காலையிலேயே ஒரு மூத்த அதிகாரி என்னைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு, அன்றைய செய்திப்பத்திரிகையில் வெளியாகியிருந்த எனது அறிக்கையைக் குறிப்பிட்டு, அதுபோல நடக்குமானால் பின்னர் எங்கேயிருந்து நமக்கு வேலைக்காரர்கள் கிடைப்பார்கள் என்று கேட்டார். மேல்தட்டில் இருக்கிறவர்களது சுயநலப் போக்குதான் 80 சதவீத மக்களைக் கல்வி பெற முடியாமல் தடுத்து வைத்திருக்கிறது என்ற கருத்து சரியானதுதான் என்பதையே இந்தச் சம்பவம் காட்டுகிறது.

**6 வயது முதல் 18 வயது வரையுள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் ஒன்றாம் வகுப்பு முதல் இடைநிலை வகுப்பு என்று கூறப்படுகிற 12ம் வகுப்பு வரையில் தரமான பள்ளிக் கல்வியை உறுதிப்படுத்துகிற ஒரு சட்ட முன்வரைவு தேவை.**

கல்வி உரிமையில் எவ்வித தாமதத்தையும் இனி மக்கள் சகித்துக்கொள்ளமாட்டார்கள் என்ற காலம் வந்துவிட்டது. மக்கள் கல்வியறிவு பெற விரும்புகிறார்கள். ஆகவே கல்வி தேவை என்ற கோரிக்கையை நிறைவேற்றியாக வேண்டும். இக்கோரிக்கை நிறைவேற்றப்படாவிட்டால், மிகக் கடுமையான பிரச்சனைகள் ஏற்படும். முதலாவதாக, சுதந்திரமான மக்களைக் கொண்ட நாடு என்ற தகுதியை நாம் இழப்போம். இரண்டாவதாக, ஒரு புரட்சி ஏற்படும். பிரெஞ்சுப் புரட்சியும் அமெரிக்கப் புரட்சியும் எப்படி ஏற்பட்டன என்பதை நாம் காண வேண்டும். மேற்கூறிய நிலை தொடருமானால், இந்தியாவிலும் புரட்சி ஏற்படவே செய்யும்.

### வாழ்வுரிமையும் கல்வியுரிமையும்

நமது அரசமைப்பு சாசனம் வாழ்க்கைக்கான உரிமையை உறுதிப்படுத்துகிறது. உலகத்தின் வளர்ச்சிப் பின்னணியில், நமது நாட்டின் இன்றைய நிலையானது ஒரு கேள்வியை எழுப்புகிறது: எப்படிப்பட்ட வாழ்க்கை உரிமை நமக்கு இருக்கிறது? செயல் முடக்கப்பட்ட நிலையில் இருக்கிறதா அல்லது முற்றிலும் நிராகரிப்பப்பட்டதாக இருக்கிறதா அல்லது கல்வி வாய்ப்புப் பெற்ற சிறு எண்ணிக்கையிலான

அதிர்ஷ்டசாலிகளுக்கு அடிமைப்பட்ட நிலையா? வாழும் உரிமை என்பதற்கான அர்த்தம் இதுதானா? என்னைப் பொறுத்தவரையில், வாழும் உரிமை என்பதன் அர்த்தம், நமது மக்களின் அடிப்படை உரிமைகளை நிறைவு செய்வது என்பதேயாகும். அந்த அடிப்படை உரிமைகளில் கல்வி, வேலை வாய்ப்பு, வீட்டு வசதி, ஆடைகள், மருத்துவ சுகாதாரம், சமூக நீதி ஆகியவை அடங்குகின்றன. இந்த அடிப்படை உரிமைகள் அடுக்கில், முதன்மையானதாக உச்சத்தில் இருப்பது கல்வி உரிமைதான் என்பதை எளிதில் காணலாம். ஏனெனில், ஒருவர் கல்வி பெற்றவராகிறபோது – ஒவ்வொரு குழந்தையும் கல்வி பெறுகிறபோது – இதர அடிப்படைத் தேவைகள் குறித்த அக்கறை தானாகவே முன்னுக்கு வந்துவிடும். வரலாறு இதே உண்மையைத்தான் கூறுகிறது. 1917ம் ஆண்டில் தென்னிந்தியாவில் பிராமணர்களை எதிர்த்து ஒரு நீதி இயக்கம் நடைபெற்றது. 1932ல் கல்வியற்ற பிராமணர் அல்லாத சமூகங்களைச் சேர்ந்தவர்கள் எண்ணிக்கையில் அதிகம், ஆனால் கல்வி பெற்ற பிராமணர்களோடு ஒப்பிடுகையில் அரசு வேலைகளில் அவர்கள் ஒரு சதவீதத்துக்கும் குறைவாகவே இருந்தனர். இன்று, பிராமணர் இருந்த இடத்தில் படித்தவர்கள் இருக்கிறார்கள் அவ்வளவுதான். இந்த நிலைமை உருவானதற்கும் தொடர்ந்து இருப்பதற்கும் காரணம் அனைவருக்கும் போதுமான கல்வி வாய்ப்பு இல்லாமல் போனதுதான். அன்றைக்கு பிராமணர் அல்லாதார் எந்த நிலைமையில் இருந்தார்களோ அதே நிலைமையில்தான் நம் மக்களில் 85–95 சதவீதம் பேர் இருக்கிறார்கள். வரலாறு நெடுக, அதிகபட்ச சுரண்டல்கள் கல்வியின்மையால்தான் நடந்து வந்துள்ளன.

### பிற நாடுகளிலிருந்து கற்றுக்கொள்ளுதல்

ஒவ்வொரு குழந்தைக்கும் கிடைக்கவேண்டிய குறைந்தபட்ச கல்வியை முடிவு செய்வதற்கு முன், இந்தக் கல்வியின் நோக்கங்கள் பற்றிய தெளிவும் தேவை. முதலாவதாக இப்படிப்பட்ட குறைந்தபட்சக் கல்வியானது தங்கள் உரிமைகளைக் கோருகிறவர்களாக, கடமைகளை நிறைவேற்றுகிறவர்களாக இருக்கக்கூடிய தகவல் அறிவுள்ள குடிமக்களை உருவாக்குவதாக இருக்க வேண்டும். அந்தக் குறைந்தபட்சக் கல்வி எவரொருவரையும் தொழில்பயிற்சி பெறத்தக்கவர்களாக, தொழிற்கல்வி பெறத்தக்கவர்களாக, உயர்கல்வி பெறத்தக்கவர்களாக உருவாக்க வேண்டும். 6 வயதில் தொடங்கி 18 வயது வரை 12 ஆண்டுகள் கிடைக்கிற அந்தக் கல்வி மேற்கண்ட இரண்டு அம்சங்களும் நடைமுறைக்கு வருவதற்கு அவசியம் என்று உலக அனுபவங்கள் காட்டுகின்றன. 18 வயது என்பது வாகனங்களைச் செலுத்த முடியும்; திருமணம் செய்துகொள்ள முடியும். இந்த வயதில் உடல் ரீதியாகவும் அறிவுப்பூர்வமாகவும் உணர்வுப்பூர்வமாகவும் தன்னைத் தானே சார்ந்திருக்கக் கூடியவராக, மன முதிர்ச்சி உள்ளவராக இருக்கிறார் என்று கருதப்படுகிறது. ஆகவே, 6 வயது முதல் 18 வயது வரையுள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் ஒன்றாம் வகுப்பு முதல் இடைநிலை வகுப்பு என்று கூறப்படுகிற 12ம் வகுப்பு வரையில் தரமான பள்ளிக் கல்வியை உறுதிப்படுத்துகிற ஒரு சட்ட முன்வரைவு தேவை.

அடுத்ததாக எழும் கேள்வி, ஒன்றாம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரையில் இத்தகைய கல்வியை வழங்குவது யார் பொறுப்பு? நமது நாட்டின் தலைமுறை வளத்தை அதிகபட்ச அளவுக்கு நாம் பயன்படுத்தியாக வேண்டுமானால், 6 வயது முதல் 18 வயது வரையிலான கல்வியை வழங்குவது அரசின் தனிப் பொறுப்பாகவே இருக்கவேண்டும். அந்தப் பொறுப்பு பகிர்ந்துகொள்ளத்தக்கதல்ல என்றே இந்தக் கேள்வி தொடர்பான உலக ஆய்வுகள் காட்டுகின்றன. தனியார் துறையின் பங்களிப்பு வரவேற்கத்தக்கதுதான். ஆனால் அது, ஒட்டுமொத்த பொதுப் பள்ளி அமைப்புக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்; அதில் அரசுதான் தலைமைப் பாத்திரம் வகிக்க வேண்டும். உலகம் முழுவதுமே வெற்றிகரமாகச் செயல்பட்டு வருவது பொதுப் பள்ளித் திட்டம்தான் (அருகாமைப் பள்ளித்திட்டம்). இத்திட்டம் குழந்தைகளுக்கு இலவசமாகக் கல்வி கிடைக்கச் செய்கிறது; குழந்தைகள் தங்களுக்கு அருகில் உள்ள பள்ளிகளுக்குச் சென்று பயில வழிசெய்கிறது.

எடுத்துக்காட்டாக பிரெஞ்சு பொதுப் பள்ளித் திட்டத்தை எடுத்துக்கொள்வோம். பிரான்ஸ் ஒரு வளர்ந்த நாடாக விளங்குவதற்கு அடித்தளமாக இருப்பது பொதுப் பள்ளித் திட்டம்தான். அந்த நாட்டின் தலைவர்கள் எல்லோருக்குமே கல்வி ஆதாரமாக அமைந்தது நிச்சயமாக பிரெஞ்சு அரசாங்கத்தின் பள்ளி முறைதான்.

**அடிப்படை உரிமைகளில் கல்வி,
வேலை வாய்ப்பு, வீட்டு வசதி, ஆடைகள்,
மருத்துவ சுகாதாரம், சமூக நீதி
ஆகியவை அடங்குகின்றன.
இந்த அடிப்படை உரிமைகள் அடுக்கில்,
முதன்மையானதாக உச்சத்தில்
இருப்பது கல்வி உரிமைதான்
என்பதை எளிதில் காணலாம்.**

பிரிட்டன், ஸ்வீடன், அமெரிக்கா ஆகிய நாடுகளில் பள்ளிக் கல்வி என்பது ஆகப் பெரும்பாலும் அரசாங்கங்களின் பொறுப்பாகவே இருக்கிறது. அந்த நாடுகளின் பள்ளிகள் அருகாமைப் பள்ளித்திட்டம் அல்லது பொதுப் பள்ளித் திட்டத்தின் கீழ்தான் செயல்படுகின்றன. நம் நாட்டில் நடந்துகொண்டிருப்பது போல் கல்வி என்பது விற்பனைச் சரக்கல்ல என்ற

அடிப்படையில், தரமான கல்வியை அரசாங்கம்தான் வழங்க முடியும் என்பதையே எண்ணற்ற உலக அனுபவங்கள் காட்டுகின்றன. ஒட்டுமொத்த பள்ளி அமைப்பைக் கட்டுப்படுத்தக் கூடிய துறையானது லாபநோக்கம் இல்லாததாக இருக்க வேண்டும் என்பது முக்கியம். அதேபோல் அனைத்து வர்க்கங்களையும் சமூகங்களையும் சேர்ந்த குழந்தைகள் இணைந்து படிக்க வேண்டும் என்பதும் அதற்கு சமமான முக்கியத்துவம் வாய்ந்ததாகும். அது மட்டுமே குழந்தைகளின் மனங்களில் ஒரு புரிதலையும் சகிப்புத் தன்மையையும் சமூக நீதி உணர்வையும் ஏற்படுத்த முடியும்.

உண்மையில் 1960ம் ஆண்டுகளின் பிற்பகுதிக்கு முந்தைய காலக்கட்டங்களில் வர்த்தக ரீதியான பள்ளிக்கூடங்கள் என்பதே கிடையாது. அனைவரும் ஏதேனும் ஒரு அரசுப் பள்ளிக்கோ, ஏதேனும் ஒரு அறக்கட்டளைப் பள்ளிக்கோ சென்று பயின்றார்கள். நமது பெருந்தலைவர்கள் அனைவரும் அந்தக் காலக்கட்டத்தில் இப்படிப்பட்ட அரசுப் பள்ளி அமைப்பில் பயின்றவர்கள்தான். அந்த காலகட்டத்தைச் சேர்ந்த பக்கிம் சந்திரா, சரத் சந்திர சாட்டர்ஜி போன்றோரின் இலக்கியப் படைப்புகள் அக்காலத்து உயர்நிலைப் பள்ளி அமைப்பின் மாண்புகளை பேசுகின்றன. ஒருவர் உயர்நிலைப் பள்ளிக்குச் சென்று வந்திருந்தால் ஒரு பி.ஏ. அல்லது எம்.ஏ. பட்டம் பெற்றிருந்தால் அவர் மிகுந்த மரியாதையுடன் பார்க்கப்பட்டார். அதற்கு நேர் முரணாக இன்று நமது பட்டதாரிகளில் 80 சதவீதம் பேர் வேலையற்றவர்களாக உள்ளனர். பலரது விவகாரத்தில் உயர்நிலைப்பள்ளியில் தேர்ச்சி என்பது கிட்டத்தட்ட படிக்காதவர்களுக்கு சமமானதாகவே இருக்கிறது.

**ஒவ்வொரு குழந்தைக்கும் கிடைக்கவேண்டிய குறைந்தபட்ச கல்வியை முடிவு செய்வதற்குமுன், இந்தக் கல்வியின் நோக்கங்கள் பற்றிய தெளிவும் தேவை**

பொதுப்பள்ளிக்கு எதிராக தனியார் பள்ளி இன்றைய காலகட்டத்தில் நமது நாட்டில் மூன்றுவிதமான பள்ளிமுறைகள் உள்ளன. மத்தியப் பள்ளிகள் (கேந்திரிய வித்யாலயா) நாட்டிலேயே மிகச்சிறந்தவையாகும். அறக்கட்டளைகளால் நடத்தப்படும் வர்த்தக நோக்கமின்றி செயல்படுகின்றன. இவற்றில் சில பள்ளிகளுக்கு அரசு நிதி உதவி கிடைக்கிறது. மூன்றாவது வகையைச் சேர்ந்தவை தனியார் பள்ளிகள் ஆகும். நடுத்தர வர்க்கத்தினருக்கும், மேல்வர்க் கத்தினருக்கும் என தொடங்கப்பட்ட இந்த தனியார் பள்ளிகள் 1960ம் ஆண்டுகளுக்குப் பிறகு ஆதிக்கம் செலுத்த தொடங்கிவிட்டன. இந்தத் தனியார் பள்ளிகள் சிறந்த கல்வியை வழங்குவதாக கருதப்படுகிறது. ஆனால், உண்மையில் ஒரு சில தனியார் பள்ளிகள்தான் தரமான கல்வியை வழங்குகின்றன. உண்மையிலேயே தனியார் பள்ளிகள் தரமான கல்வியைத்தான் வழங்குகின்றன என்றால் அவற்றின் மாணவர்கள் எதற்காக தனிப்பட்ட பயிற்சியாளர்களை (டியூசன்) நாட வேண்டும்? 1960 ஆண்டுகள் வரையில் இப்படிப்பட்ட தனியார் பயிற்சிகள் என்பது இந்த அளவிற்கு இருந்ததில்லை. பணக்காரர்களும், வாய்ப்புள்ளவர்களும் அதிக கட்டணம் செலுத்தி சேர்க்கும் பள்ளிகளில் தரமான கல்வி கிடைப்பதில்லை என்பதால்தான் தங்களுடைய குழந்தைகளை தனிப்பயிற்சிக்கு அனுப்புகிறார்கள்.

தனியார் பள்ளிகளின் கட்டிடங்கள் அரசுப் பள்ளிக் கட்டிடங்களைவிட நல்ல முறையில் பராமரிக்கப் படுகின்றன என்பது உண்மைதான். ஆனால், அரசுப் பள்ளிகள் தங்களது செயல்பாட்டில் பல இடையூறுகளை சந்திக்க வேண்டியுள்ளது. போதுமான ஆசிரியர்கள் இருப்பதில்லை, கட்டிடங்கள் சேதமடைந்துள்ளன அல்லது கட்டிடங்களே இருப்பதில்லை. போதிய சோதனைக் கூட கருவிகள் இருப்பதில்லை. கழிப்பறை வசதிகள்கூட இருப்பதில்லை (குறிப்பாக பெண் குழந்தைகளுக்கு தேவையான கழிப்பறை வசதி இருப்பதில்லை).

ஹைதராபாத் நகரில் நான் 58 ஆண்டுகளாக வாழ்ந்து வருகிறேன். இங்கே பழைய விமான நிலையத்திற்கு மிக அருகில் ஒரு குடிசைப் பகுதி இருப்பதோ, அதில் சுமார் 90,000 பேர் வசிக்கிறார்கள் என்பதோ, சுமார் 20,000 குழந்தைகள் பள்ளி செல்லும் பருவத்தில் இருக்கிறார்கள் என்பதோ எனக்கு பல ஆண்டுகள் தெரியவந்ததில்லை. அங்கே இருப்பது வெறும் 700 பேர்களுக்கான ஒரே ஒரு பள்ளிதான். ஒன்றாம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரை இரண்டே அறைகளில் செயல்படும் அந்தப் பள்ளிக்கு இரண்டே ஆசிரியர்கள்தான் உள்ளனர். அந்தப் பள்ளியில் புதிதாக இரண்டு வகுப்பறைகள் கட்டுவதற்காக சில இளைஞர்கள் (அவர்களில் பலர் கம்ப்யூட்டர் இன்ஜினீயர்கள் ஆவர்) சேர்ந்து தங்களது முயற்சியில் நிதி திரட்டவும், உடல் உழைப்பை வழங்கவும் முன் வந்துள்ளனர். நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் இதுதான் நிலைமை. அரசுப் பள்ளிகளில் இருந்து பாதிப் படிப்பில் வெளியேறுவோர் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே போகிறது.

### இதன் விளைவுகளைப் பார்ப்போம்

நமது நாட்டில் இன்று சுமார் 30 லட்சம் விஞ்ஞானிகளும், தொழில்நுட்ப வல்லுநர்களும் உள்ளனர். நமது நாட்டிற்கு இது ஒரு பெருமைதான். உலகத்திலேயே விஞ்ஞானிகள் அதிகம் உள்ள 3வது பெரிய நாடு இந்தியாதான். ஆனால், 60 ஆண்டு அனுபவம் உள்ள விஞ்ஞானி என்ற முறையில் நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன்.

இந்த 30 லட்சம் விஞ்ஞானிகளில் 5 சதவீதத்தினர்கூட ஐரோப்பிய நாடுகளின் சராசரி விஞ்ஞானிகளுக்கு பக்கத்தில் வரக்கூடியவர்களாக இல்லை. இதுதான் இந்த விஞ்ஞானிகள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்களின் தரம். இவர்களில் பலர் வேலையற்றவர்களாகவும் உள்ளனர். ஒவ்வொருக் குழந்தைக்கும் பள்ளிக் கல்வி வழங்குவதில் சமவாய்ப்புகளை இந்தியா வழங்கி இருக்குமானால், சாதி மற்றும் சமூக அடிப்படையில் இடஒதுக்கீடு என்பதற்கே அவசியம் இல்லாமல் போயிருக்கும்.

## முறையற்ற கல்வி உரிமை மசோதா

இப்பிரச்சனைக்குத் தீர்வு என்பது நம் முன் உள்ள கல்வி உரிமை மசோதா அல்ல. இந்த மசோதா குறித்து பலக் கருத்துக்கள் சொல்லப்பட்டு விட்டன. முதலில் எட்டாம் வகுப்பு வரை குழந்தைக்கு கட்டாயக் கல்வி என இருந்தது. இப்போது 12ம் வகுப்பு வரை குழந்தையை படிக்க வைப்பதற்கு ஒரு சட்ட மசோதா தேவைப்–பட்டிருக்கிறது.

அடுத்ததாக இந்த மசோதா குழந்தைகளை மிகவும் பாகுபடுத்துவதாக உள்ளது. ஏனெனில் இது பணக்காரக் குழந்தைகளுக்கும் ஏழை குழந்தைகளுக்கும் இடையே ஒரு பிரிவை ஏற்படுத்துகிறது. பணக்காரர்கள் தங்கள் குழந்தைகளை தொடர்ந்து தனியார் பள்ளிகளுக்கு அனுப்புவார்கள் (அவ்வாறு செய்வதற்கு அவர்களை இந்த மசோதா மறைமுகமாக ஊக்குவிக்கிறது) அதே நேரத்தில் ஏழைகள் அரசுப் பள்ளிகளில் மோசமான நிலைமைகளோடு போராடிக் கொண்டிருக்க வேண்டும். ஆக, அரசுப் பள்ளிகளை தரமான நிறுவனங்களாக மாற்றுவதற்கான லட்சிய நோக்கம் எதுவும் அரசுக்கு இல்லை. எனவே, இன்று எப்படி இருக்கிறதோ அப்படியேதான் எதிர்கால நிலைமையும் இருக்கும்.

அரசுப் பள்ளிகளின் தோல்விக்கு காரணங்கள் என்ன என்பதையும் நாம் பரிசீலிக்க வேண்டும். முதலில் குறிப்பிட்டது போல, 1960ம் ஆண்டுகளின் பிற்பகுதி வரையில் அரசுப் பள்ளிகள்தான் நமது நாட்டில் மிகச்சிறந்த கல்வி நிறுவனங்களாக திகழ்ந்தன. பெரும்பாலான மக்கள் அரசுப் பள்ளிகளில்தான் பயின்றார்கள். இந்த நிலைமை தகர்ந்துபோனதற்கு முக்கிய காரணம் கல்வி வர்த்தக மயமாக்கப்பட்டதுதான். வசதிபடைத்த நடுத்தர வர்க்கத்தினர் தலையெடுத்துள்ளனர். அவர்களது மனநிலை தங்களது குழந்தைகளை தனியார் பள்ளிகளுக்கு அனுப்ப வேண்டும் என்பதாகவே இருக்கிறது. ஏனெனில் அவர்கள் தங்களுடைய குழந்தைகள் சமுதாயத்தின் பிற பிரிவுகளைச் சேர்ந்த குழந்தைகளோடு கலப்பதை விரும்பவில்லை. இந்தப் போக்கை கட்டுப்படுத்துவதற்கான எந்த நடவடிக்கையும் மசோதாவில் குறிப்பிடப்படவில்லை. ஆகவே, இந்த மசோதா மிகவும் பாரபட்சமானதாக, சமுதாயத்தை மேலும் பிளவுபடுத்தக்கூடியதாக இருக்கிறது.

மத்தியப் பள்ளிகள் மட்டுமல்ல சில அரசுப் பள்ளிகளும் நல்ல முறையில் செயல்பட்டு வருகின்றன. இது மனம் இருந்தால் அரசு சிறப்பாக செயல்பட முடியும் என்பதைக் காட்டுகிறது. கேரளத்தைச் சேர்ந்த ஒரு அரசுப் பள்ளியில் ஆசிரியராக பணியாற்றி வரும் ஒரு பெண், தனது மகனை ஒரு தனியார் பள்ளியில் மாதம் ரூ.1,500 கட்டணம் செலுத்தி படிக்க வைத்திருந்தார். ஆனால், தமது பள்ளி அளிக்கப்படுவதைவிட மேம்பட்ட கல்வி எதுவும் அந்த தனியார் பள்ளியில் தரப்படவில்லை என்பதை உணர்ந்த அவர், தனது மகனை அங்கிருந்து விலக்கி தனது பள்ளியிலேயே சேர்த்துக் கொண்டார்.

முன்மொழியப்பட்டிருக்கிற சட்ட மசோதாவில், தனியார் பள்ளிகள் தமது மாணவர்களில் 25 சதவீதத்தினரை அடித்தட்டு மக்களிடமிருந்து தேர்வு செய்ய வேண்டும் என கூறப்பட்டுள்ளது. அப்படியே அவர்கள் செய்தாலும்கூட, அந்தக் குழந்தைகளை சேர்த்த பிறகு, அவர்களை பாரபட்சமாக நடத்துவதற்கான எல்லா வாய்ப்புகளும் உள்ளன. இப்படிப்பட்ட பெரும்பாலான பள்ளிகளில் ஒவ்வொரு வகுப்புக்கும் பல பிரிவுகள் உள்ளன. இந்த 25 சதவீத குழந்தைகளுக்கென்று தனியாக ஒரு பிரிவை இந்தப் பள்ளிகள் ஏற்படுத்தாது என்பதற்கோ, அந்தப் பிரிவில் யாருமே கற்றுக்கொள்ள முடியாத வகையில் மோசமான முறையில் பயிற்றுவிக்கப்பட மாட்டாது என்பதற்கோ எந்த உத்தரவாதமும் கிடையாது. தனியார் பள்ளிகளில் பல்வேறு பெயர்களில் கல்விக் கட்டணம் மோசடியாக வசூலிக்கப்படுவதை எப்படி தடுக்க முடியும்? இதைக் கட்டுப்படுத்துவதற்கான எந்த வழிமுறையும் மசோதாவில் இல்லை. தனியார் பள்ளிகளில் இந்த 25 சதவீதம் குழந்தைகளுக்கு இலவச பாடபுத்தகங்கள் வழங்கப்படும் என்பதற்கான விதியும் சட்ட மசோதாவில் இல்லை.

6 வயதுக்கு மேற்பட்ட குழந்தைகள் அவர்களது வயதின் அடிப்படையில் அல்லாமல் அவர்களது தகுதியின் அடிப்டையிலேயே வகுப்பில் சேர்க்கப்பட வேண்டும் என்று மசோதாவில் கூறப்பட்டுள்ளது. மசோதாவில் அருகாமைப் பள்ளிகள் குறித்து பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், அருகாமைப் பள்ளி என்பதற்கான திட்டவட்டமான விளக்கம் எதுவும் மசோதாவில் இல்லை. அதற்கான விதிமுறைகளோ கட்டுப்பாடுகளோ எதுவும் இல்லை.

கவனிக்கத்தக்க ஒரு சுவாரசியமான விஷயம் இருக்கிறது. இன்று பெற்றோர் தமது வருமான வரி அறிக்கையில் குழந்தைகளுக்கான செலவை கழித்துக் கொள்ள முடியும். இரண்டு குழந்தைகளுக்கு ஒரு லட்சம் ரூபாய் வரை கழித்துக் கொள்ளப்படுகிறது. பணக்காரர்கள் தங்களது குழந்தைகளை தனியார்

பள்ளிகளுக்கு அனுப்புவதற்கான சலுகை அல்லவா இது. இந்த விதிவிலக்கு இல்லையென்றால், தனியார் பள்ளிகளுக்கு குழந்தைகளை அனுப்பும் பணக்கார பெற்றோர்களிடமிருந்து வசூலிக்கப்படும் வரித்தொகையை பொதுப்பள்ளி முறைக்கு கணிசமாகப் பயன்படுத்த முடியும். இந்த மசோதாவில், சிலருக்கு தேவைப்படக்கூடிய, அரசாங்கத்தால் நடத்தப்படும் உறைவிடப்பள்ளிகளுக்கான ஏற்பாடும் இல்லை.

**பள்ளிகளில் தொடங்கி மேல்படிப்பு வரையில் நாட்டின் மிகச்சிறந்த கல்வி நிறுவனங்களாகப் பெயர் பெற்றிருப்பவை (அரசு நிறுவனங்களானாலும் சரி, அறக்கட்டளை நிறுவனங்களானாலும் சரி) அனைத்தும் வர்த்தக நோக்கமற்ற நிறுவனங்களே என்பதை இந்த மசோதாவை தயாரித்தவர்கள் மறந்துவிட்டார்கள்**

பள்ளிகளை மேம்படுத்துவதற்கான திருப்திகரமான ஏற்பாடு எதுவும் மசோதாவில் இல்லை. இதற்கான விரிவான விளக்கங்கள் தரப்படவில்லை, ஏஐசிடிஇ அல்லது எம்சிஐ அனுபவத்திலிருந்து கற்றுக் கொண்டதாகவும் தெரியவில்லை.

### உதாரணத்திற்கு ஒன்றைப் பார்ப்போம்

யாரோ ஒருவர் கட்டிடமோ, ஊழியர்களோ, சாதனங்களோ இல்லாமல் ஒரு இன்ஜினீயரிங் கல்லூரியை தொடங்க விரும்புவதாக வைத்துக் கொள்வோம். ஒரு கட்டிடத்தை வாடகைக்கு எடுக்கிறார், சாதனங்களையும் வாடகைக்கே எடுக்கிறார். ஊழியர்கள் ஊதியம் உள்பட அவருக்கு ஒரு நாளைக்கு ரூ.30,000 செலவாகிறது. சில நாட்களுக்கு ஒரு பேராசிரியரை வாடகைக்கு எடுப்பது என்பது ஒன்றும் கடினமானது அல்ல! இவை அனைத்தையும் ஏதேனும் ஒரு 'நிகழ்ச்சி ஏற்பாட்டு முகமை' (ஈவன்ட் மேனேஜ்மென்ட் ஏஜென்சி) நிறுவனத்தின் மூலம் ஏற்பாடு செய்து கொள்ளலாம். (அப்படிப்பட்ட ஒரு ஏஜென்சி ஒரு முறை என்னோடு தொடர்பு கொண்டு யாராவது ஒரு பேராசிரியர் பெயரை பரிந்துரைக்குமாறு கேட்டுக்கொண்டது. இந்திய பார்மஸி கவுன்சிலால் அங்கீகரிக்கப்பட்ட பார்மஸி கல்லூரியில் பயின்று பேராசிரியர் பட்டம் பெற்றவராக இருக்க வேண்டும் என்றும் அந்த ஏஜென்சி கேட்டுக் கொண்டது.)

அந்தக் கல்லூரியை பார்வையிட வரக்கூடிய ஆய்வுக் குழுவினர் தங்களது வேலையை முடித்துப் போன பிறகு வாடகைக்கு பெற்ற அனைத்தையும், அனைத்து ஊழியர்களையும் திருப்பி அனுப்பி விடலாம். ஆனாலும், அந்தக் கல்லூரி நிர்வாகம், அதிகமான கட்டணங்களை வசூலிக்க முடியும். பெரும்பாலும் அப்பாவி மாணவர்களிடமிருந்து அந்தக் கட்டணம் வசூலிக்கப்படும். இப்படிப்பட்ட நிறுவனங்கள், எந்த ஒரு கல்வியையும் பெறாமலே பெருந்தொகையை கட்டணமாகச் செலுத்திய ஏராளமான வேலையற்ற பட்டதாரிகளை உருவாக்குகின்றன.

மத்திய அரசின் கல்வி உரிமை மசோதா மறைமுகமாக இந்த நடைமுறையை ஊக்குவிப்பதாக இருக்கிறது. கல்வியை வியாபாரச் சரக்காக விற்கிறவர்களை இந்த மசோதா ஆதரிக்கிறது. அதன் விளைவு என்ன என்பதைப் பற்றி மசோதா கொஞ்சமும் கவலைப்படவில்லை. பள்ளிகளில் தொடங்கி மேல்படிப்பு வரையில் நாட்டின் மிகச்சிறந்த கல்வி நிறுவனங்களாகப் பெயர் பெற்றிருப்பவை (அரசு நிறுவனங்களானாலும் சரி, அறக்கட்டளை நிறுவனங்களானாலும் சரி) அனைத்தும் வர்த்தக நோக்கமற்ற நிறுவனங்களே என்பதை இந்த மசோதாவை தயாரித்தவர்கள் மறந்துவிட்டார்கள்.

### நிறைவாகச் சொல்வதற்கு...

இரண்டு, மூன்று சுருக்கமான கருத்துக்களை நான் நிறைவு செய்கிறேன். முதலாவதாக, அறிவுசார் பொருளாதாரம், அறிவுசார் சமூகம் என்ற சொல்லாடல்கள் பெரும்பாலும் சரியான பொருளில் பயன்படுத்தப்படுவதில்லை. ஏனென்றால் இவை இரண்டும் ஒன்றல்ல. நாம் ஏற்கெனவே ஒரு அறிவுசார் பொருளாதாரத்தில்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். தகவல் தொழில்நுட்பம், உயிரியல் தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளால் இந்த அறிவுசார் பொருளாதாரம் உருவாகியிருக்கிறது. ஆனால், அறிவுசார் சமுதாயம் இல்லாத நிலையில் அறிவுசார் பொருளாதாரம் என்பது மிகவும் சுரண்டக்கூடியதாகவே இருக்கும். அதைத்தான் நாம் இன்று காண்கிறோம். இவ்வாறாக நாம் இன்று மிகவும் சுரண்டப்படுகிற உலக பொருளாதாரத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

அறிவுசார் சமுதாயத்தில் குடிமக்கள் ஒவ்வொருவருக்கும் குறிப்பிட்ட குறைந்தபட்ச அறிவு என்பது இருக்கும். அதற்கு விளக்கம் தர இயலும். அதாவது, நாம் முன்னர் பார்த்ததுபோல 12 ஆண்டுகள் ஒருவர் கல்வி பெறுவது என்பது அந்த குறைந்தபட்ச அறிவை அவருக்கு ஏற்படுத்தி இருக்கும். ஆகவே, அறிவுசார் சமுதாயத்தை நோக்கிச் செல்வதற்கான ஒரே வழி பொதுப்பள்ளி அமைப்புதான். அதில்தான் கல்வி இலவசமாக இருக்கும். அதில்தான் ஒவ்வொரு குழந்தைக்கும் ஒரே தரமான, ஒரே அளவான கல்வி பெறும் வாய்ப்புக் கிடைக்கும். அறிவுசார் பொருளாதாரம் என்பது அறிவுசார் சமுதாயத்தை அடிப்படையாக கொண்டதாக இருக்கும்போதுதான் பொருளாதாரம் அப்பாற்பட்டதாக இருக்கும்.

இறுதியாக, வாழ்வதற்கான உரிமை என்பது உண்மையில் நடைமுறையில் இருக்கச் செய்ய வேண்டும் என்றால் பள்ளிக் கல்வி என்பதை வர்த்தக மயத்திலிருந்து விடுவித்தாக வேண்டும். பொதுப்பள்ளி முறையையோ, அருகாமைப் பள்ளி முறையையோ நாம் கடைப்பிடித்தாக வேண்டும். இன்று நமக்கு அப்படிப்பட்ட 4 லட்சம் பள்ளிகள் தேவை. அந்தப் பள்ளிகளில் இலவசமான, முற்றிலும் இலவசமான, மறைமுகக் கட்டணம் எதுவும் இல்லாத கல்வி வழங்கப்பட வேண்டும். இது நிகழுமானால் இடஒதுக்கீடுக்கான தேவை தானாக நீங்கிவிடும். மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 6 சதவீதத்தை மட்டும் கல்விக்கு என ஒதுக்கினாலே இதை நாம் சாதித்துவிட முடியும். இதில் உள்ள நிதியாதார அம்சங்கள் குறித்து பலரும் ஆராய்ந்து சொல்லி இருக்கிறார்கள். ஆகவே, போதிய நிதி இல்லை என்று அரசு கூறுவது வெறும் சாக்குப்போக்குதான்.

**பள்ளிக் கல்வி குறித்து அக்கறை கொள்ள தவறினால் அடுத்த 15 ஆண்டுகளில் நமது நாட்டில் ரத்தக் களறியான ஒரு புரட்சி வெடிக்கும் என்று நான் இப்போதே கணித்துச் சொல்ல முடியும். ஆகவே, கல்வி உரிமை மசோதா இன்றைய வடிவத்திலேயே நிறைவேற்றப்படுமானால், அதை எதிர்த்து பொது நல வழக்கு தொடர்வதை தவிர வேறு வழியில்லை. நாட்டின் வரலாற்றில் அது ஒரு முக்கியமான போராட்டமாக அமையும்.**

**– Combat Law, Sep –Dec 2009**

## மூடப்பட்ட 3 பள்ளிகள் மீண்டும் திறப்பு

சென்னையில் கடந்த மாதம் மூடப்பட்ட 30 மாநகராட்சிப் பள்ளிகளில் 3 பள்ளிகள் மீண்டும் திறக்கப்பட உள்ளன. இந்த வார இறுதியில் அப்பள்ளிகள் செயல்படத்தொடங்கும் என்று சென்னை மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதனால் சென்னையில் உள்ள மாநகராட்சிப் பள்ளிகளின் எண்ணிக்கை 286 ஆக உயர்ந்திருக்கிறது. சென்னை மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் மொத்தம் 313 பள்ளிகளை சென்னை மாநகராட்சி நடத்தி வந்தது. இவற்றில் 139 பள்ளிகள் தொடக்கப்பள்ளிகளாகும். 103 நடுநிலைப் பள்ளிகளாகும். 28 உயர்நிலைப் பள்ளிகளாகும். மேல்நிலைப் பள்ளிகளின் எண்ணிக்கை 27 ஆகும். இவற்றில் பல பள்ளிகளில் போதிய அளவு மாணவர்கள் இல்லை என்று தெரியவந்ததையடுத்து, ஒவ்வொரு பள்ளியிலும் பயிலும் மாணவர்களின் உண்மையான எண்ணிக்கையை கண்டறிவதற்காக கடந்த சில நாட்களுக்கு முன் கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. அப்போது 30க்கும் மேற்பட்ட பள்ளிகளில் குறைந்த எண்ணிக்கையில் மாணவர்கள் இருந்ததால் அப்பள்ளிகள் அனைத்தையும் அருகில் உள்ள பள்ளிகளுடன் இணைக்க சென்னை மாநகராட்சி மேயர் மா. சுப்பிரமணியன் ஆணையிட்டார்.

அதன்படி 30 பள்ளிகளும் மூடப்பட்டன. இதற்கு கல்வியாளர்கள் மற்றும் அரசியல் கட்சியினரிடையே கடும் எதிர்ப்பு எழுந்தது. மூடப்பட்ட பள்ளிகள் அனைத்தையும் உடனடியாக திறக்க வேண்டும் என்று கல்வியாளர்கள் வலியுறுத்தினர். தமிழக சட்டப்பேரவையிலும் பல்வேறு கட்சிகளின் உறுப்பினர்கள் இது பற்றி சிக்கல் எழுப்பினர். இந்த நிலையில், மூடப்பட்ட 30 பள்ளிகளில் 3 பள்ளிகளை மீண்டும் திறக்க சென்னை மாநகராட்சி முடிவு செய்துள்ளது. சென்னை ஜாபர்கான் பேட்டையில் உள்ள மாநகராட்சி தொடக்கப் பள்ளி, கோபாலபுரத்தில் உள்ள பள்ளி, வட சென்னையில் உள்ள அரங்கநாதபுரம் தொடக்கப் பள்ளி ஆகியவையே மீண்டும் திறக்கப்பட உள்ள பள்ளிகளாகும். இப்பள்ளிகளை மீண்டும் திறப்பதற்கான சுற்றறிக்கை இவற்றின் தலைமை ஆசிரியர்களுக்கு நேற்று (திங்கட் கிழமை) அனுப்பப்பட்டுவிட்டதாக மாநகராட்சி ஆணையர் இராசேசுலக்கானி தெரிவித்திருக்கிறார்.

அதன்படி இப்பள்ளிகளில் ஏற்கெனவே பணியாற்றி வேறு பள்ளிகளுக்கு மாற்றப்பட்ட ஆசிரியர்கள் அனைவரும் மீண்டும் இப்பள்ளிக்கே அனுப்பப்படுவார்கள். இப்பள்ளிகளில் பயின்று வந்து வேறு பள்ளிகளுக்கு அனுப்பப்பட்ட மாணவ, மாணவியரும் திரும்ப அழைத்துக் கொள்ளப்படுவார்கள். இந்தப் பணிகள் முடிவடைந்த பிறகு இந்த வார இறுதியிலோ அல்லது அடுத்தவார தொடக்கத்திலே இந்த 3 பள்ளிகளும் செயல்படத்தொடங்கும் என்று மாநகராட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. மாநகராட்சி பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியருக்கு சிறப்பான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தித்தரும் நோக்குடனேயே குறைந்த மாணவர்கள் படிக்கும் பள்ளிகள் மற்ற பள்ளிகளுடன் இணைக்கப்பட்டதாக மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்தனர். 50க்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட பள்ளிகள் மட்டுமே மற்ற பள்ளிகளுடன் இணைக்கப்பட்டிருக்கும் என்றும், ஏதேனும் பள்ளிகளில் 50க்கும் மேற்பட்ட மாணவர்கள் இருந்து அப்பள்ளி மூடப்பட்டிருந்தால் அது மீண்டும் தொடங்கப்படும் என்றும் மாநகராட்சி அதிகாரிகள் தெரிவித்தனர்.

**– தமிழ் ஓசை, 14.7.2009**

# பண்டங்களாக மாற்றப்படும் சிறுமிகள்!

பாலியல் தொழிலுக்காக பெண்கள் மற்றும் சிறுமிகள் கடத்தப்படுகிறார்கள் என்ற அதிர்ச்சிகரமான தகவலை தேசிய பெண்கள் ஆணையம் கவலையுடன் தெரிவித்துள்ளது. இவ்வாறு கடத்தப்படுவது குறித்து தேசிய பெண்கள் ஆணையத்தின் சார்பில் ஆய்வு ஒன்று நடத்தப்பட்டது. ஆய்வு விபரங்களை ஆணையம் தற்போது வெளியிட்டுள்ளது. நாட்டிலுள்ள 612 மாவட்டங்களில் 378 மாவட்டத்தில் இந்தக் கொடூரம் நிகழ்ந்து கொண்டிருக்கிறது. குறிப்பாக, தெற்கு மற்றும் கிழக்கு மாநிலங்களில் தான் இது அதிகமாக நடப்பதாக ஆய்வறிக்கை குறிப்பிடுகிறது. இந்தக் கொடுமைகள் நடப்பதற்கு வறுமை, வேலையின்மை, எழுத்தறிவின்மை மற்றும் பாலினப் பாகுபாடு ஆகியவை உள்ளிட்ட பல்வேறு காரணங்கள் சொல்லப்படுகின்றன.

**அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது :**

சராசரியாக 90 சதவிகித தெற்கு மற்றும் கிழக்கு மாநில மாவட்டங்களிலிருந்து பெண்கள் மற்றும் சிறுமிகள் பாலியல் தொழிலில் ஈடுபடுவதற்காக கொண்டு செல்லப்படுகின்றனர். தமிழகத்திலும் இந்தக் கொடுமை பரவலாக இருக்கிறது. இங்கிருந்து 93.33 சதவிகித மாவட்டங்களி–லிருந்து பெண்களையும், சிறுமிகளையும் கடத்திச் சென்று பாலியல் தொழிலில் ஈடுபட வைப்பது நடந்து கொண்டிருக்கிறது. நாடு முழுவதும் சுமார் 28 லட்சம் பெண்கள் இந்தப் பாலியல் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். நாட்டில் 15 முதல் 35 வயது வரையுள்ள பெண்களின் மொத்த எண்ணிக்கையில் 2.4 சதவிகிதப் பெண்கள் இத்தகைய கொடூரங்களால் பாதிக்கப் படுகின்றனர். இவ்வாறு கடத்திச் செல்லப்பட்டு பாலியல் தொழிலில் ஈடுபடுத்தப்படுபவர்களில் 43 சதவிகிதம் பேர் சிறுமிகளாவர்.

இதில் பெரும்பாலான பெண்கள் மற்றும் சிறுமிகள் கட்டாயப்படுத்தப்பட்டே இத்தகைய தொழிலுக்கு தள்ளப்படுகிறார்கள். ஆசை வார்த்தை காட்டி அழைத்துச் செல்லப்பட்டுதான் இவர்கள் இத்தகைய நெருக்கடியை சந்திக்க வேண்டி வருகிறது. இதில் கொடுமையிலும் பெரிய கொடுமை என்னவென்றால் கணிசமான பெண்கள் மற்றும் சிறுமிகள் தங்கள் குடும்ப உறுப்பினர்களாலேயே இத்தொழிலுக்கு தள்ளப்படுகிறார்கள் என்பது தான். கிட்டத்தட்ட 22 சதவிகிதம் பேர் குடும்பத்தினரின் நிர்ப்பந்தம் காரணமாகவே இத்தொழிலுக்கு செல்கிறார்கள். எட்டு சதவிகிதம் பேர் தாலி கட்டிய கணவனாலேயே இந்தப் புதைகுழியில் தள்ளப்படுகின்றனர். சுமார் 18 சதவிகிதம் பேர் நண்பர்கள் மற்றும் அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள் ஆகியோரின் தவறான ஆலோசனைகளால் இதில் சிக்கிக் கொள்கிறார்கள். இவ்வாறு பெண்களும், சிறுமிகளும் நிர்ப்பந்தத்தாலும், ஆசை வார்த்தைகளாலும் சிக்கிக் கொள்வதற்கு வறுமையே பிரதான காரணமாகும். அதோடு பாலினப்பாகுபாடும் முக்கிய காரணமாக உள்ளது. பெண்களுக்கு எதிரான கொடுமைகளைத் தடுக்க ஏராளமான சட்டங்கள் இயற்றப்பட்டுள்ளன. ஆனால் அந்த சட்டங்கள் சரியான முறையில் அமல்படுத்தப்படுவதில்லை. பெண்கள் பாதுகாப்பற்ற நிலையில் தள்ளப்பட்டு சதி வலையில் சிக்கிக் கொள்வதற்கும், அவர்களுக்கு எதிராக அநீதி இழைக்கப்படுவதற்கும் இத்தகைய அம்சங்களே காரணங்களாக இருக்கின்றன. இவ்வாறு இந்த கொடுமை குறித்த ஆணையத்தின் அறிக்கை கூறுகிறது.



இதிலிருந்து அப்பாவி பெண்களையும், சிறுமிகளையும் விடுவிக்க என்ன செய்ய வேண்டும் என்பதற்கான தீர்வையும் தேசிய பெண்கள் ஆணையமே தனது அறிக்கையில் முன்வைக்கிறது. பெண்களுக்கு பொருளாதார ரீதியான சுதந்திரம் இல்லாதது முக்கியமான காரணமாகும். அவர்களுக்கு அந்த சுதந்திரம் கிடைக்கச் செய்ய வேண்டும். காகிதங்களில் இருக்கும் சட்டங்கள் முறையாக நடைமுறைக்கு வர வேண்டும். அதோடு, பெண்களும் நம்மைப் போலவே ரத்தமும் சதையும் கொண்டவர்கள். அவர்களும் சமுதாயத்தில் மதிக்கப்படக்கூடியவர்கள் என்ற மனப்பான்மை மக்கள் மத்தியில் உருவாக்கப்பட வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் பெரும்பாலான குற்றங்களைத் தடுத்து நிறுத்திவிட முடியும் என்று தேசிய பெண்கள் ஆணையம் கருதுகிறது. பெண்களைப் பண்டங்களாகவும், குழந்தைகள் பெற்றுக் கொள்ளும் எந்திரங்களாகவும் பார்க்கின்ற மனநிலை மாற பள்ளிப் பாடத்திட்டத்திலேயே இது குறித்த கருத்துகள் சேர்க்கப்பட வேண்டும். சமூக, பொருளாதார மற்றும் அரசியல் ரீதியான பாகுபாடுகள் இல்லாத நிலை உருவானாலேயே இப்பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைக்க முடியும் என்பது தான் பெண்களின் உரிமைகளுக்காகப் போராடுபவர்களின் கருத்தாகும். ஆட்சியாளர்களின் கொள்கைகள் மாற வேண்டும். அதுவே ஆண், பெண் பாகுபாடற்ற நிலையை நோக்கிச் செல்வதற்கான முதல்படியாக அமையும் என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

**– தீக்கதிர், 6.10.2009**

# ஒரு மாணவனின் சத்துணவுக்கு 43.5 காசு மட்டுமே

## அரசு நிதி ஒதுக்கீட்டை அதிகரிக்க வலியுறுத்தல்

சத்துணவு மையங்களுக்குத் தேவையான காய்கறிகள், விறகு, மசாலா பொருட்கள் வாங்க மிக மிகக் குறைவான அளவே செலவுத் தொகை வழங்கப்படுகிறது. இதனால், மாணவர்களுக்கு முழுமையான மற்றும் தரமான சத்துணவு வழங்கப்படுகிறதா என்ற கேள்வியெழுந்துள்ளது. தமிழகத்தில் மொத்தம் 42 ஆயிரத்து 78 சத்துணவு மையங்கள் உள்ளன. இந்த மையங்களில் 56 லட்சத்து 41 ஆயிரத்து 502 மாணவ, மாணவிகள் மதிய உணவு சாப்பிடுகின்றனர். இவர்களுக்கு அரிசி சாதத்துடன் காய்கறிகள் கலந்து சாம்பாருடன் சாப்பாடு வழங்கப்படுகிறது. திங்கள், புதன், வியாழன் ஆகிய மூன்று தினங்களில் மதிய உணவுடன் சேர்த்து முட்டை வழங்கப்படுகிறது. செவ்வாய்கிழமை உருளைக் கிழங்கும், வெள்ளிக்கிழமை கொண்டைக்கடலை அல்லது பச்சைப்பயறு வேக வைக்கப்பட்டு வழங்கப்படுகிறது. சத்துணவு திட்டத்துக்காக அரிசி, எண்ணெய் போன்றவை அரசு சார்பில் வழங்கப்படுகிறது. இது தவிர கடுகு, சீரகம் உள்ளிட்ட மசாலா பொருட்கள் வாங்க ஒரு மாணவனுக்கு என்ற கணக்கில், 8.5 காசும், காய்கறிகள் வாங்க 20 காசும், விறகு வாங்கிக் கொள்ள 15 காசும் என ஒட்டுமொத்தமாக ஒவ்வொரு மாணவனுக்கும் மொத்தமாக 43.5 காசு வழங்கப்படுகிறது. ஒரு சத்துணவு மையத்தில், 50 மாணவர்கள் இருக்கின்றனர் என்றால் அவர்களுக்கு காய்கறிகள், மசாலா பொருட்கள் மற்றும் விறகு என சேர்த்து மொத்தமாக 217 ரூபாய் 50 காசுக்குள் வாங்கிக்கொள்ள வேண்டும். இந்த தொகையை கொண்டு மாணவர்களுக்கு எப்படி சத்துணவு வழங்க முடியும் என்று சத்துணவு அமைப்பாளர்கள் புலம்புகின்றனர்.

சத்துணவு மையங்களின் தற்போதைய நிலைமை குறித்து சத்துணவு அமைப்பாளர் ஒருவரிடம் பேசிய போது: கடந்த 1982ம் ஆண்டு எம்.ஜி.ஆர்., ஆட்சியில் சத்துணவு திட்டம் அமல்படுத்தப்பட்டது. அப்போது, சத்துணவு மையங்களை சுத்தமாக வைத்துக் கொள்வதற்கான துடைப்பம், பினாயில், சோப்பு வாங்க மாதம் 20 ரூபாய் ஒதுக்கப்பட்டது. 27 ஆண்டுகளாக இதே தொகை தான் தற்போதும் வழங்கப்படுகிறது. இதே போல் காய்கறிகள், விறகு மற்றும் மசாலா பொருட்கள் வாங்குவது தொடர்பாக 2007ம் ஆண்டு ஜூலை 18ம் தேதி வெளியிடப்பட்ட அரசாணையில், ஒவ்வொரு மாணவனுக்குமான காய்கறி, விறகு, மசாலா பொருட்களுக்கான செலவுத் தொகையாக 43.5 காசு ஒதுக்கீடு செய்யப்பட்டது. இதில் விறகு வாங்கிக்கொள்ள மட்டும் ஒரு மாணவனுக்கு 15 காசு ஒதுக்கப்பட்டது. இதை கொண்டு தான் அரிசி, சாம்பார், முட்டை மற்றும் உருளைக்கிழங்கு, பச்சைப்பயிறு போன்ற இணை உணவுகளையும் வேக வைத்துக் கொள்ள வேண்டும். இது எப்படி சாத்தியமாகும்? இந்தத் தொகையை கொண்டு மாணவர்களுக்கு சத்துணவு கொடுப்பது மிகவும் கஷ்டமாக உள்ளது. இதை உயர்த்தி தருமாறு அரசை, கேட்ட பின்னரும், இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் இல்லை.

மற்றொரு விஷயம், கிராமப்புறங்களில் ஊராட்சி அலுவலகங்களில் கொண்டு வந்து முட்டையை வட்டார வழங்கல் அதிகாரிகள் வைத்துவிடுவர். அவர்களே தான் சத்துணவு மையங்களுக்கு நேரிடையாக முட்டையை சப்ளை செய்ய வேண்டும். ஆனால், அவர்கள் முட்டையை சப்ளை செய்வது இல்லை. இது பற்றி, வட்டார வழங்கல் அதிகாரிகளிடம் கேட்டால், 'முட்டையை கொண்டு வந்து நேரிடையாக சத்துணவு மையங்களுக்கு சப்ளை செய்ய 1990ம் ஆண்டு ஒரு முட்டைக்கு 8 காசு பயண செலவாக அரசு ஒதுக்கீடு செய்தது. தற்போதும், இதே கொகை தான் வழங்கப்படுகிறது. இதை வைத்து, முட்டையை சத்துணவு மையங்களுக்கு சப்ளை செய்ய முடியாது. தேவைப்பட்டால், நீங்களே வந்து எடுத்துச் செல்லுங்கள்' என்கின்றனர்.

வாரந்தோறும் செவ்வாய் கிழமை மதிய உணவுடன் சேர்த்து மாணவர்களுக்கு இணை உணவாக உருளைக்கிழங்கை வேக வைத்து கொடுக்க வேண்டும். ஒவ்வொரு மாணவனுக்கும் 20 கிராம அளவு உருளைக்கிழங்கை கொடுக்க வேண்டும். ஒரு கிலோ உருளைக் கிழங்கை 8 ரூபாய் மற்றும் அதற்குள்ளாக வாங்கிக்கொள்ள வேண்டும்' என்று 2001ம் ஆண்டு அரசாணை பிறப்பிக்கப்பட்டது.

இந்தத் தொகையும் இன்று வரை உயர்த்தப்படவே இல்லை. அதனால், மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய 20 கிராம் உருளைக்கிழங்கை குறைத்து வழங்க வேண்டிய வருத்தமான சூழ்நிலை உள்ளது. இவ்வாறு அவர் கூறினார். ஆண்டுதோறும் அண்ணாதுரை, காமராஜர், எம்.ஜி.ஆர்., பிறந்த நாளின் போது சத்துணவு மைய மாணவர்களுக்கு சர்க்கரை பொங்கல் வழங்க வேண்டும் என்று அரசு சார்பில், 1991ம் ஆண்டு உத்தரவிடப்பட்டது. அப்போது பிறப்பிக்கப்பட்ட அரசாணையில், 'சர்க்கரை பொங்கல் செய்வதற்கு தேவையான சர்க்கரை, வெல்லம், டால்டா, ஏலக்காய் மற்றும் சுக்கு வாங்கிக்கொள்ள ஒரு மாணவனுக்கு 33 காசு ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்தத் தொகையும் இன்னமும் உயர்த்தப்படாமலேயே உள்ளது. மாணவர்களுக்கு சத்தான உணவு வழங்க வேண்டிய சத்துணவு மையங்கள் பலவித காரணங்களால் சத்து குறைந்து போய் மெலிந்து காணப்படுகின்றன. இதை அரசு கண்டு கொண்டு விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**– தினமலர், 18.8.09**

# ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தில் தனியார் பங்கேற்பு

## (அரசுடைமைக்கும் தனியார் மயமாக்கத்திற்கும் இடையே நடைபெறும் ஓர் மல்யுத்தம்)

– இந்திராணி மஜும்தார்

சுதந்திர இந்தியாவின் மிகப் பெருமைக்குரிய திட்டங்களில் முதன்மையானது ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்டமாகும். இத்திட்டம் பிரதானமாக இந்திய நாட்டிலுள்ள 70 மில்லியன் (7 கோடி) குழந்தைகளுக்கு இணை மற்றும் துணைச்சத்துக்களை அளித்து வருவதாக உரிமை கோருகிறது. ஒருங்கிணைந்த வளர்ச்சித்திட்ட முகவுரை, நமது இந்தியத்திட்டம் தான் உலகிலேயே மிக அதிகமான எண்ணிக்கையிலுள்ள மிக இளவயதுக் குழந்தைகளுக்கான பராமரிப்பு மற்றும் வளர்ச்சிக்காக செயலாற்றிக்கொண்டிக்கிறது எனப் பெருமிதம் கொள்கிறது. இந்தத்திட்டம் அங்கன் வாடி மையங்களை ஒரு சங்கிலித் தொடராக இணைத்து நடத்தப்பட்டு வருகிறது. இந்த அங்கன் வாடி மையம் ஒவ்வொன்றிலும் பணியாளர் ஒருவரும், உதவியாளர் ஒருவரும் பணியாற்றுகிறார்கள். 1975ல் திட்டம் துவங்கும் போது நூற்றுக்கணக்கில் இருந்த மையங்களின் எண்ணிக்கை, 1992ல் இரண்டரை இலட்சங்களாகவும் பின்னர் 2002ல் ஆறு இலட்சங்களாகவும் உயர்ந்தது. தற்போது நமது நாட்டில் 9 இலட்சம் அங்கன் வாடி மையங்கள் செயல்படுகின்றன.

இத்திட்டம் நாட்டிலுள்ள எல்லாப் பகுதிகளிலுள்ள எல்லாக் குழந்தைகளையும் சென்றடைய வேண்டுமென மைய அரசுக்கு உத்தரவிட்ட உச்சநீதிமன்றம், தொடர்ந்து 2004ஆம் ஆண்டு வழக்கு விசாரணை ஒன்றின் போது மீண்டும் தனது உத்தரவை வலியுறுத்தியது. 2006ஆம் ஆண்டு நாட்டின் எல்லாப் பகுதிகளிலும், எல்லாக்குழந்தைகளையும் அங்கன் வாடி சேவைகள் சென்றடைய அவற்றின் எண்ணிக்கை 14 இலட்சங்களாக உயர்த்தப்பட வேண்டுமென வரையறுத்தது. குழந்தை உரிமைகள் குறித்து தெளிவான, ஸ்தாபனம் சார்ந்த உறுதிப்பாடுகள் உருவாக்கப்பட வேண்டுமென்பதாக பொதுமக்களின் கோரிக்கைக் குரல் வலுத்துவருகிறது. மறைந்த பிரதமர் இந்திராகாந்தி அவர்களது தலைமையிலான ஆட்சி நடைபெற்ற காலங்களில் குடும்பக்கட்டுப்பாட்டுத்திட்டம் / மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தும் திட்டத்திற்கான ஒரு துணை அமைப்பாகச் சிறுமைப்பட்டுக் கிடந்த அங்கன் வாடி மையங்கள், நாடு முழுமையிலும் பரவலாக மக்கள் கோரிக்கைகள் வலுப்பெற்றதையடுத்து, 2004ல் ஆட்சிக்கு வந்த “ஐக்கிய முற்போக்குக் கூட்டணி” ஆட்சிக்காலத்தில் நாட்டின் மிக முக்கியமான, சிறப்பு வாய்ந்த திட்டமாக வடிவமைக்கப்பட்டு வளர்ச்சி பெற்றது. 1980–களில், 1990–களில் அங்கன் வாடி மையங்களின் பொறுப்பாளர்கள், உதவியாளர்கள் ஆற்றிய பணியின் காரணமாக, அங்கன் வாடி மையங்கள் பெரும் புகழ் பெற்று, நாடு முழுவதிலும் உள்ளூர் அரசியலின் தவிர்க்கமுடியாத அங்கங்களாக அங்கன் வாடி மையங்கள் ஆகிவிட்டன. அங்கன் வாடி மையங்கள் உள்ளூர் மக்களின் தேவை மற்றும் கோரிக்கைகளை அடுத்து, மிக வேகமாக வளர்ச்சி பெற்று குழந்தைகள் மட்டுமல்லாது, அவர்களின் பெற்றோரின் கவலைகளுக்கும் அருமருந்தாக ஆகியுள்ளன. இதன் காரணமாக அங்கன் வாடி மையங்கள் குறித்த உற்சாக உணர்வு மக்களிடம் பெருக்கெடுத்துள்ளன. இவை செயல்படும் விதம் குறித்த விமர்சனங்களும் பெருவெள்ளமாகப் பாய்ந்து வருகின்றன.

பள்ளி செல்லும் பருவத்துக்கு முந்தைய தளிர் பருவக் குழந்தைகளுக்கு, ஓரளவுக்காவது சத்து மற்றும் உணவை உத்தரவாதம் செய்கிற அங்கன்வாடி மையங்களைக் கொண்டுள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்டம் வெற்றியடைவது என்பது அதன் முன்னணிப் படைவீரர்களான அங்கன்வாடி மையப் பொறுப்பாளர்கள் மற்றும் உதவியாளர்கள் என ஒரு மிகப் பெரிய பெண் தொழிலாளர் படையணியில் செயல்பாட்டைப் பொறுத்தே இருக்கிறது. இந்தத் தொழிலாளர்கள் தான் ICDS திட்டத்தை மக்களிடம் கொண்டு செல்கிறார்கள். அவர்கள் தான் இந்த மையத்தை உருவாக்கி நடத்தி வருகிறார்கள். சில சமயம் உரிய தனி கட்டிடமில்லாத வேளையில் தங்களது சொந்த வீட்டில் வைத்து நடத்துகிறார்கள். இவ்வளவும், ’மதிப்பூதியம்’ என்ற பெயரால் வழங்கப்படும் ஒரு அற்பத் தொகைக்காக இந்தத்தொகை குறைந்த பட்ச சம்பள விகிதத்தோடு எந்த வகையிலும் பொருந்தாத அவர்களது குறைந்தபட்ச, சொந்தத் தேவைகளைக் கூடப் பூர்த்தி செய்து கொள்வதற்கு இயலாத அளவு மிகக் குறைந்த தொகை என்பது தான் மிகக் கசப்பான உண்மையுங்கூட, ஆயினும், இந்தத் திட்டம் ஒரு அரசு அரசுத்திட்டம் என்பதால் அது நிலையாக, நிரந்தரமாகச் செயல்படும் என்ற நம்பிக்கையில் இலட்சக்கணக்கான பெண்கள் இத்திட்டத்தில் இணைந்து பணியாற்றி வருகிறார்கள்.

இந்த நிலையான, நிரந்தரத் தன்மை என்பது புதிய–தாராளமயக் கொள்கை காரணமாக, தாக்குதலுக்காளாக்கப்பட்டு அபாய நிலையை எதிர் நோக்கியிருக்கிறது. இதன் மூலம் இத்திட்டத்தில் அரசு/தனியார் பங்கேற்பு என்ற போர்வையின் கீழ் மிக முக்கியமான கொள்கை மாற்றங்கள் முன் மொழியப்பட்டு

இத்திட்டத்தின் நடைமுறையில் அரசின் பொறுப்பைத் தட்டிக்கழிக்கும் வகையிலான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. 2008–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில், மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் வளர்ச்சித்துறை அமைச்சர் மாண்புமிகு. ரேணுகா சவுத்திரி அவர்கள் தாம் பங்கேற்ற ICDS சம்மந்தமான தேசிய கலந்தாய்வுக் கூட்டத்தில், ICDS மையங்களின் செயல்பாட்டில் அரசுப் பொறுப்பைக் குறைத்துக் கொள்வதும், ICDS மையங்கள் நடத்தும் பொறுப்பையும், ICDS க்கான நிதியையும் அரசு அல்லாதவர்களின் கரங்களில் மாற்றி ஒப்படைப்பதும், இத்திட்டத்தை நடத்துவதில் சீர்திருத்தங்கள் என்ற பெயரால் உலக வங்கி வகுத்தளிக்கும் நடைமுறை பின்பற்றப்பட்டு வருகிறது என்பதை ஐயமின்றித் தெளிவுபடுத்துகிறது. ஏற்கனவே, இது போன்ற 'சீர்திருத்தங்கள்' மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்துறையில் துவக்கப்பட்டு விட்டன. அதற்கு "ICDS திட்டத்தை அமலாக்குவதில் நிகழ்காலத் தேவைகளை நிறைவு செய்யத்தக்க செயல்முறைகளை வரைவு செய்யும் வகையிலான ஒரு அதிவேகப்பாய்ச்சல் தேவைப்படுகிறது" என்பதாகக் காரணம் கூறப்படுகிறது. (ICDS4 திட்டக்கொள்கைக் குறிப்பு, செப்படம்பர் 2007, மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம், இந்திய அரசு). இதனைத் தொடர்ந்து நாட்டில் நடைபெற்று வரும் ICDS திட்டத்தை மறுகட்டமைப்புச் செய்யத்தக்க வகையில் "மறுசீரமைக்கப்பட்ட தேசிய அமலாக்க வரையறைக் கொள்கை" ஒன்று வெளியிடப்படவுள்ளது. இப்போது உலக வங்கியின் உதவியோடு செயல்படுத்தப்பட்டு வரும் ICDS சீர்திருத்ததிட்டம் 4 ஆனது இத்தகைய "மறு சீரமைக்கப்பட்ட தேசிய அமலாக்க கொள்கை வரையறையின்" முன்னோடித் திட்டமாகும்.

ஒரு குறிப்பிட்ட மிகப்பெரிய பொதுத்திட்டத்திற்கென செலவு செய்யப்படும் மிகப்பெரிய தொகையில், ஒரு மிகச் சிறிய பகுதி அளவுள்ள தொகையை வழங்குவதன் மூலம், அந்தத்திட்டம் செயல்படும் திசை வழியையே மாற்றக் கூடிய அளவுக்கு செல்வாக்கு செலுத்தும் கலையில் உலகவங்கி தேர்ச்சி பெற்றுள்ளதாக இந்தக் "கொள்கை வரையறை" பறைசாற்றுகிறது. எனவே, ICDS திட்டத்திலும் கூட, இத்திட்டத்திற்கான மொத்த செலவுத் தொகையில் வெறும் ஒரு சதவீதத்திற்கும் குறைவான அளவு தொகையை வழங்கிவிட்டு, அந்த சிறு தொகையையும் கூட திட்டத்தின் ஒட்டுமொத்த செயலமைப்பையும் தனது புதிய தாராளமயக் கொள்கைகளையும், அடிப்படைச் செயல்பாடுகளில் கட்டுப்பாடு, உறுதியான கொள்கை என்ற பெயரால் அரசின் பொறுப்பை குறைக்கச் செய்வதற்கான முயற்சிகளுக்குப் பயன்படுத்துகிறது உலக வங்கி. இது மட்டுமின்றி, பங்கேற்பாளர்கள் பயனாளிகள் என்ற பெயரால் ICDS திட்டத்திற்குள் தனியாரைக் கொண்டு வந்து நுழைக்கத் துடிக்கிறது உலகவங்கி.

ICDS திட்டச்சீர்திருத்தம் 4 தனது தாக்குதலை இவ்வாறு துவக்குகிறது. "இப்போது செயல்படுத்தப்பட்டு வரும் ICDS திட்டம் குழந்தைகளின் இடையே எடைக்குறைபாடுள்ள குழந்தைகளின் விகிதத்தைத் குறைப்பதற்கான முயற்சியில் தோல்வியடைந்து விட்டது. எடைக்குறைபாடுள்ள குழந்தைகளின் விகிதம் உலக நாடுகள்யாவற்றிலும் இந்தியாவில் தான் அதிகமாகவுள்ளது. (0–3 வயது குழந்தைகளிடையே 2005–06 ஆம் ஆண்டுக் கணக்குகெடுப்பின் படி இது 46 சதவீதமாகும்)". இது உண்மை தான் அதில் சந்தேகமேதுமில்லை. ஆனால், இந்தப் பிரச்சினைக்கு உண்மையிலேயே தீர்வு காண வேண்டுமானால், இந்தத் திட்டத்தினை நாட்டிலுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் சென்று சேரும் வகையில், ஒரு குழந்தை கூட விடுபட்டுப் போகாமல் இருக்கத்தக்க வகையில் முழுமையாக விரிவுபடுத்துவதில் கவனம் செலுத்துவதே சிறப்பான வழியாகும். ஆனால் இச்சீர்திருத்தம் தற்போதுள்ள ICDS திட்டம் எல்லாக்குழந்தைகளுக்கும் உரித்தானதாக இல்லாதிருப்பது பற்றியோ அல்லது இதற்கான நிதி ஒதுக்கீடு பற்றாக்குறையாக இருப்பது பற்றியோ, எதுவும் பேசவில்லை. உண்மையில் 'இத்திட்டம் எல்லாக் குழந்தைகளுக்குமாக இருக்க வேண்டுமென்பதை' முக்கியமற்றதாகக் கருதி துவக்கத்திலேயே அதனை நிராகரித்து விடுகிறது.

"குழந்தைகளிடையே சத்துக்குறைபாடு என்ற மிகச் சிக்கலான பிரச்சினைக்கு, இப்போதுள்ள ICDS திட்டத்தை பரவலாக்குவதன் மூலமே தீர்த்து விடலாம் எனக்கருதுவது எந்த வகையிலும் பொருத்தமானதாகாது. ICDS திட்டத்தின் மையக் கோட்பாடுகளை நிறைவு செய்யத்தக்க வகையில் அதன் செயல்பாட்டை விரைவுப்படுத்து முகத்தான் திட்டத்தின் உள்ளடக்கத்தைச் செழுமைப் படுத்துவதோடு, உயிரோட்டமுள்ளதாக ICDS திட்டத்தை மாற்றியமைக்கவேண்டும்" என அலங்காரச் சொல்லடுக்குகளைப் பயன்படுத்தி அதன் கோரமுகத்தை மறைத்துக்கொள்ள முயற்சிக்கிறது இந்தச் சீர்திருத்த அறிக்கை இது மேலும் "திட்டத்தில் பன்முகத் தலையீடுகள் வர அனுமதிக்கவும், குடும்பப்பராமரிப்புக் கோட்பாடுகளில் மாற்றங்களை ஏற்படுத்தவும் தேவையேற்பட்டுள்ளது" எனப்பிதற்றுகிறது.

இந்தச் சீர்திருத்த அறிக்கை 2004–ஆம் ஆண்டு உலக வங்கி வெளியிட்டுள்ள "இந்தியாவின் சத்துக்குறைபாடுள்ள குழந்தைகள்: சீர்திருத்தம் மற்றும் செயல்பாட்டுக்கான ஓர் அறை கூவல்" எனத் தலைப்பிடப்பட்ட "விவாதத் தொகுப்பின்" அடிப்படை

வாசகங்களை அப்படியே கடன் வாங்கி எழுதப்பட்டதாக இருக்கிறது. இந்தியாவின் ICDS திட்டத்தினைப் பரிசீலனை செய்து உலக வங்கி வெளியிட்டுள்ள "விவாதத் தொகுப்பில்" இவ்வாறு கூறுகிறது. "இந்தியாவில் குழந்தைகள் அதிக அளவில் நோய் தாக்குதலுக்கு ஆட்படும் வாய்ப்பு உள்ளதாலும், இளங்குழந்தைகளுக்கு உணவூட்டுவதில் பராமரிப்பதிலும் சரியான வழிமுறைகள் பின்பற்றப்–படாமையினாலும் குழந்தைகள் சத்துக்குறைபாட்டுக்கு ஆளாவது பெருமளவு உள்ளது. எனினும் உணவுப்பாதுகாப்பு இன்மையே பிரதானமான, இன்றும் சொல்வதானால் முழு முதல் காரணமாக உள்ளது எனப் பொதுவான புரிதல் உள்ளது. இத்தகைய சூழ்நிலையில் இந்தியாவில் தற்போதுள்ள குழந்தைகள் சத்துக்குறைபாட்டுப் பிரச்சினைக்கு, உணவு அளிப்பதன் அடிப்படையிலான செயல்பாடுகளில் மட்டுமே முழுகவனம் செலுத்தப்பட்டு, இப்பிரச்சினைக்கான மற்ற காரணிகள் கவனிக்கப்படாது கைவிடப்பட்டு விட்டன". எனவே இத்தகைய சத்துக்குறைபாட்டுக்கு நிரந்தரத்தீர்வு காண "குழந்தை பராமரிப்பில், உணவூட்டும் நடைமுறைகளில், துணைச் சத்துப்பொருட்களை அளித்தல் ஆகியவற்றில் அவரவர் வீடுகளில் உள்ளோர் கூடுதல் அக்கறை செலுத்துவதை உற்சாகப்படுத்துதல் அல்லது மேம்படுத்துதல்" என்ற வழிமுறையைப் பரிந்துரைக்கிறது உலக வங்கி. "துணைச்சத்துப் பொருட்களை அளிப்பதைக் காட்டிலும் தகவலளித்தல், கல்வி கற்பித்தல், தகவல் தொடர்பு ஆகியவையே ICDS திட்டத்தின் மையக் கொள்கையாக இருக்க வேண்டும்" என்று உலகவங்கி கூறுகிறது.

மேலும், சத்துக் குறைபாடு என்ற பிரச்சினை சில குறிப்பிட்ட இடங்களில் தான் செறிவாக உள்ளது. எனவே, ICDS திட்டத்தை மேலும் பரவலாக்குவதற்கு பதிலாக, எங்கு குறைபாடு அதிகமாகவுள்ளதோ அந்த மாவட்டங்களில் அல்லது பகுதிகளில், எங்கு அதிகமாக கவனம் தேவையுள்ளதோ அங்கு குவி கவனம் செலுத்தினால் போதுமென உலகவங்கி சொல்கிறது.

**உணவு மற்றும் சத்துப்பொருட்களை வழங்கும் பொறுப்பு அரசுசாரா அமைப்புகளிடமே நீடிக்கிறது. வழங்கப்படும் உணவுப் பொருட்களின் அளவுக்குறைவு, தரக்குறைவு ஆகியவை குறித்த குற்றச்சாட்டுக்கள் மலையெனக் குவிந்துள்ளன**

கடந்த மூன்றாண்டுகளில் ICDS திட்ட அமலாக்கத்தில், அதன் நான்காம் சீர்திருத்த அறிக்கையில் அரசு கொண்டுவந்துள்ள மாற்றங்களை போகிற போக்கில் பார்த்தால் கூட, ICDS திட்ட அமலாக்கத்திற்கான நிதி ஒதுக்கீடு படிப்படியாகக் குறைக்கப்பட்டிருப்பதோடு, அதனை மேலும் பரவலாக்கும் நடவடிக்கைகள் ஒட்டு மொத்தமாகக் கைவிடப்பட்டிருப்பதும் வெள்ளிடை மலையாகப் புலனாகிறது. ஒரு எளிய கணக்கின்படி கூட, 2004ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுத் தேவை குறைந்தபட்சம் ரூ.12,000 எனத் தெரிகிறது. ஆனால் அக்கணக்கீடு செய்யப்பட்டு, நான்கு ஆண்டுகள் கடந்த பின்னரும் கூட, அதாவது 2008–09 நிதியாண்டில் இந்திய அரசு ICDS திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்த தொகை 2004–ஆம் ஆண்டின் படியான தேவையில் ஏறத்தாழ சரிபாதி தான்யென்பதே உண்மை. இத்தகைய மிக முக்கியமான கேள்விகளுக்கு முகம் கொடுக்க மறுக்கும் இந்த மறுகட்டமைப்புச் சீர்திருத்த அறிக்கை நான்கு முக்கிய அம்சங்களை உள்ளடக்கியிருக்கிறது.

1. சர்வதேச பொருளாதார நெருக்கடி என்ற காரணம் காட்டி, விவசாய நெருக்கடி ஒரு புறமும், வேலையின்மை மறுபுறமுமாக இரு பொறிகளின் கீழ் சிக்கித்தவிக்கும் இந்திய ஏழைக்குடும்பங்கள், ஏற்கனவே சரிந்து விழும் தமது வருவாய் ஆதாரங்களால் கலங்கித் தவிக்கும் நிலையில், அரசு தனது பொறுப்பையும் தட்டிக்கழித்து சுமையை இந்தக் குடும்பங்களின் தலை மீது மாற்றி வைக்க வேண்டுமென இந்த வரைவறிக்கை கூறுகிறது.
2. துணைச் சத்து அளிக்கப்படுவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படும் வேளையிலும் கூட, இத்தகைய துணைச்சத்துப்பொருட்களைத் தயாரிக்கும் தனியாரிடமிருந்து அரசு மூலம் கொள்முதல் செய்யப்பட்டு அளிக்கப்பட வேண்டும். இதன் மூலம் இதன் பங்காளிகள் பயன்பெறுவர்.
3. இதற்கிடையே, ICDS திட்டத்தின் செயல்பாடுகள் பலவற்றையும, தொழிலாளர்களையும் மற்ற அரசுசாரா நிறுவனங்கள், சுய உதவிக்குழுக்கள், பன்னாட்டுக் கம்பெனிகள் உள்ளிட்ட தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றின் கைகளில் ஒப்படைப்பதன் மூலம் அரசு நிர்வாகம், அதன் கடமைப் பொறுப்புகளைக் கைகழுவச் செய்து விட்டால், ICDS திட்டத்தை முழுவதும் தனியார் மயமாக்குகிற புனிதக் கடமை நிறைவு பெற்றுவிடும்.
4. அதிகாரப்பரவல், மக்களின் பங்கேற்பு என்பனவற்றின் பெயரால் அங்கன்வாடி மையப் பணியாளர்களது பணியை மறுவரையறை செய்து, அங்கன்வாடி மூலம் பயன் பெறும் குழந்தைகள் மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்கள் ஆகியோர் அரசுப் பொறுப்பைத் தட்டிக்கழிக்கச் செய்து, தொழிலாளர் வேலையளிப்போர் என்ற உறவுக் கட்டமைப்பைத் தகர்க்கச் செய்து அங்கன்

வாடிப்பணியாளர்கள் தாம் தொழிலாளர்கள் என்ற அதிகாரத்தை இழந்து தனியார் இடும் உத்தரவுகளுக்குத் தலை வணங்கும் நிலையை உருவாக்குவது.

இந்தக் கொள்கை ICDS திட்டத்தையேத் தள்ளாட வைத்துவிடும். ஏனெனில் தனியார் கரங்களில் ஒப்படைக்கப்பட்டவை தடுமாற்றத்துக்கு ஆளாகி விட்ட, பரிசோதனைச் சம்பவங்கள் இதற்கு முன்பே ஏராளம் உண்டு. இது குறித்த மிகச் சமீபகால உதாரணம் ஒன்று கூட உண்டு. கடந்த 2006 ஆம் ஆண்டு, டெல்லியில் செயல்பட்டு வந்த அங்கன்வாடி மையங்களில் 10 சதவீத மையங்கள் அரசுசாரா அமைப்புகளின் நிர்வாகத்தின் கீழ் ஒப்படைக்கப்பட்டன. இவ்வாறு ஒப்படைக்கப்பட்டு இரண்டாண்டுகள் முடிவதற்குள்ளாகவே பெரும்பாலான அங்கன் வாடி மையங்கள் நடத்துவதற்கு வழியின்றி முழுவதுமாக மூடப்பட்டுவிட்டன. ஊழலைக் களைவதற்கோ அல்லது குறைப்பதற்கோ எவ்வித முயற்சிகளும் மேற்கொள்ளப்படாதது மட்டுமின்றி, ஏராளமான நிதி தனியார் வசம் மாற்றப்பட்டுள்ளது ஆதார பூர்வமாகக் கண்டறியப்பட்டது. அதே வேளையில் தொழிலாளர்களுக்கு சம்பளம் அளிக்கப்படாத அவலநிலையோடு, பயன்பெற வேண்டிய ஏழைக் குழந்தைகள் வஞ்சிக்கப்பட்டதும் பூதாகரமாக வெளிப்பட்டு விட்டது. இத்தகைய கசப்பான அனுபவத்தில், துயர் மிகுந்த பாடம் கற்றதற்குப் பின்னர் அரசு சாரா அமைப்புகளின் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்ட அங்கன்வாடி மையங்கள் மீண்டும் மாநில அரசுப் பொறுப்பின் கீழ் கொண்டு வரப்பட்டன. ஆனால் உணவு மற்றும் சத்துப்பொருட்களை வழங்கும் பொறுப்பு அரசுசாரா அமைப்புகளிடமே நீடிக்கிறது. வழங்கப்படும் உணவுப் பொருட்களின் அளவுக்குறைவு, தரக்குறைவு ஆகியவை குறித்த குற்றச்சாட்டுக்கள் மலையெனக் குவிந்துள்ளன.

இப்போது, குழந்தைகளின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதினின்றும் அரசு தன்னுடைய பொறுப்புணர்வைக் கைவிடுவது பற்றி மட்டுமல்லாது, ICDS திட்டமே நீடித்து நிலைக்குமா என்ற ஐயம் ஏற்பட்டுள்ளது. இத்திட்டத்தில் அளிக்கப்படும் சத்துப்பொருட்கள் தரமாக இருப்பது, அவை முடிறயாகப் பகிர்ந்தளிக்கப்படுவது ஆகியவற்றில் மேம்பாடு காண்பதோடு, ஊழல் களையப்பட்டு, தேவையுள்ள அனைவருக்கும் திட்டப்பயன்கள் சென்றடைவது உறுதி செய்யப்பட வேண்டும். அத்துடன் பள்ளிக் கல்விக்கு முந்தைய கல்வியை சிறப்பாக அளிப்பதும் கட்டாயக் கடமையாகும். எனவே இனிவரும் காலம் தனியார் மயமாக்கத்திற்கு எதிராகப் கடுமையாகப் போராட வேண்டிய துயர் மிகுந்த கால கட்டமாகும். அங்கன்வாடி மையங்களில் பணியாற்றும் பணியாளர்கள் சமீபத்தில் நடத்திய போராட்டங்களின் மூலம் ஒன்று தெளிவாகிறது. அவர்கள் தங்களது பொருளாதாரத் தேவைகளுக்காக மட்டும் போராடவில்லை; அவர்கள் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்டம் முடக்கப்படாமல் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதற்காகப் போராடுகிறார்கள். இந்த நோக்கத்திற்காக அங்கன்வாடிப்பணியாளர்களோடு, இம்மையங்களின் மூலம் பயன் பெறுவோரும் கரம் கோர்த்தும் போராடும் காட்சியினை இனி நாம் காணலாம்.

**– Labour File, July-October 2009**

## மேற்கூரை இல்லாத பள்ளி: பீதியில் மாணவர்கள்

வாலாஜாபாத் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் போதிய கட்டட வசதி இல்லாததால், மாணவர்கள் அவதிப்படுகின்றனர். வாலாஜாபாத்திலிருந்து தாம்பரம் செல்லும் சாலையில் பேரூராட்சி அலுவலகம் அருகில், அரசு ஆண்கள் மேல் நிலைப்பள்ளி அமைந்துள்ளது. இப்பள்ளியில், 490 மாணவர்கள் படிக்கின்றனர். முதுகலை, இளங்கலை மற்றும் இடைநிலை ஆசிரியர்கள் உள்ளனர். ஆனால், போதிய கட்டட வசதி இல்லை. நான்கு வகுப்பறைகள் கொண்ட கட்டடத்தின் மேற்கூரை பெயர்ந்த நிலையில் உள்ளது. எப்போது தலையில் விழுமோ என்ற மரண பயத்துடன் மாணவர்கள் கல்வி கற்க வேண்டியுள்ளது. புதிய கட்டடம் கட்டுவதற்காக கடந்த கல்வியாண்டில் ஒன்பது லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. ஆனால், இன்னும் பணிகள் துவக்கப்படவில்லை. பள்ளியில் உள்ள குடிநீர் தொட்டி உடைந்துள்ளதால் மாணவர்கள் தண்ணீருக்கு வெளியில் அலையும் அவலநிலை உள்ளது.

இது குறித்து, பெற்றோர் ஆசிரியர் கழகத் தலைவரும், பேரூராட்சி தலைவருமான சேகர் கூறும் போது, அரசு ஆண்கள் மேல் நிலைப் பள்ளியில் மேற்கூரை சிதிலமடைந்த கட்டடத்தை சீர் செய்வதற்கு ஒன்பது லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டது. அதை சீர்செய்து புது ஓடுகள் பொருத்தினாலும் நீண்ட நாட்களுக்கு தாங்காது. எனவே, புதிதாக ஒன்பது வகுப்பறைகள் கொண்ட கட்டடம் கட்ட பேரூராட்சியில் தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பியுள்ளோம். அரசு அனுமதி கிடைத்தவுடன் கட்டட பணி துவக்கப்படும். பள்ளியில் குடிநீர் தொட்டி அமைக்கவும் நடவடிக்கை எடுத்து வருகிறோம் என்றார்.

**– 5.11.2009, தினமலர்**

# இந்தியாவில் குழந்தைகளின் அவல நிலை

இந்தியா முழுவதிலும் நேற்றைக்கு முன்நாள் (கடந்த சனிக்கிழமை அன்று) குழந்தைகள் நாள் கொண்டாடப்பட்டிருக்கிறது. ஆனால், அதே சமயத்தில், இந்த நாளை பூரிப்புடன் கொண்டாடக்கூடிய நிலையில், கோடானுகோடி ஏழை, எளிய இந்தியக் குழந்தைகள் இருக்கவில்லை. செல்வந்தர்கள் வீடுகளில் குழந்தைப் பஞ்சம் இருந்துவரும் அதே சமயத்தில், ஏழைகளின் வீடுகளில் குழந்தைச் செல்வம் நிறைந்திருப்பது ஒருவித சமூக வினோதமே, இந்தியாவில் வறுமைக்கோட்டுக்கு கீழே உழன்றுவரும் 30 விழுக்காட்டுக்கு மேற்பட்ட குடும்பங்களில் சத்துணவு கிடைக்காததால், குழந்தைகளில் பெரும்பாலானவை பலவித நோய்களுக்கும் உள்ளாகி அவதிப்பட்டு வருவதாக இரண்டு ஆண்டுகளுக்கு முன் ஐ. நா. அமைப்பின் சார்பில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலம் தெரியவந்தது.

அதையடுத்து, சர்வதேச அளவிலான குழந்தைகளுக்குரிய நன்கொடை நிறுவனம் ஒன்று அண்மையில் மேற்கொண்ட ஆய்வின்படி, இந்தியாவிலுள்ள குழந்தைகளில் – அனேகமாக பாதியளவு குழந்தைகளுக்கு முழு அளவில் சத்துணவு கிடைக்கவில்லை என்பது தெரியவருகிறது. 2006–ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட தேசிய குடும்ப சுகாதார ஆய்வறிக்கையில் கண்டுள்ள அவல உண்மை ஒன்றை மேற்படி சர்வதேச நன்கொடை நிறுவனத்தின் பிரதிநிதியாகிய பாபு மேத்யூ என்பவர் புதுதில்லியில் வெளிப்படுத்தியிருக்கிறார். இந்தியக் குழந்தைகளில், 46 விழுக்காடு குழந்தைகள் எடை குறைந்து இருப்பதோடு, ஐந்து வயதுக்குட்பட்ட குழந்தைகளில் 70 விழுக்காடு இரத்த சோகைக்கு உள்ளாகியிருக்கிறார்கள் என்பதே அந்த அவல உண்மை. உலக நாடுகளுக்கிடையே குழந்தைகளின் சுகாதாரத்தை பொறுத்த அளவில், இந்தியாவில் தான் நிலைமை மிகமிக மோசமாக இருந்து வருவதாக மற்றொரு சர்வதேச அமைப்பான ‘‘குழந்தைகளைக் காப்போம்’’ என்ற நிறுவனம் ஆழ்ந்த கவலையுடன் தெரிவித்திருக்கிறது. இச்சம்பவத்தில் இந்நிறுவனத்தை சேர்ந்த உயர்நிலை அதிகார ஒருவர் குழந்தைகள் உரிமை பற்றிய ஐ.நா. பட்டயத்தின் ஆறாவது பிரிவின்படி, ‘‘ஒவ்வொரு குழந்தைக்கும் உலகில் செம்மையாக வாழ்வதற்கான உரிமை இருப்பதை’’ சுட்டிக் காட்டியிருக்கிறார். எனினும், இந்தியாவில் ஆண்டுதோறும் சுமார் 20 இலட்சம் குழந்தைகள் பல்வேறு வகையான நோய்களுக்கு உள்ளாகி மரணமடைந்து வருவதை இந்த அதிகாரி சுட்டிக்காட்டியிருக்கிறார்.

இந்தியாவில் அரசியல் சாசனத்தில் அதன் 'இதயம்' போன்ற நான்காவது பாகத்தில் ’கொள்கை விளக்கம்’ என்ற தலைப்பில், ஆட்சி முறைக்கான அடிப்படைக் கொள்கைகள் வலியுத்தப்பட்டுள்ளன. இப்பகுதியில் 47–ஆவது பிரிவின்படி, அரசின் தலையாயகடமை என்ன– வென்றால், குடிமக்களின் வாழ்க்கைத் தரம் உயருமாறு செய்வதும் அதன்மூலம் – சத்துள்ள உணவை உண்டுவாழ வகை செய்வதும், அதோடு பொது சுகாதார வசதிகளை மேம்படுத்துவதுமாகும். ஆனால் தற்போதைய நிலவரப்படி 30 கோடி மக்கள் வயிறார உண்ண வக்கின்றி அரைப்பட்டினி கிடந்து வருகிறார்கள்.

அடுத்து, அரசியல் சாசனம் அமலுக்கு வந்த 10 ஆண்டுக் காலத்துக்குள் எல்லாக் குழந்தைகளுக்கும் கட்டாய இலவசக்கல்வி அளிப்பதற்கான எல்லா முயற்சிகளையும் அரசு மேற்கொள்ள வேண்டுமென 45–வது பிரிவு கட்டளையிடுகிறது.

அதையும்விட, 27–வது பிரிவு குழந்தைகள் மற்றும் இளைஞர்களின் நலனைப் பேணுவதில் அரசு தனி சிரத்தை காட்ட வேண்டுமென்று வற்புறுத்துகிறது. ‘‘குழந்தைகள் சுதந்திரமான சூழ்நிலையிலும் கண்ணியத்தோடும் ஆரோக்கியமாக வளர்வதற்கும் அப்படி வளர்வதற்கான வாய்ப்புகளை அளிப்பதற்கும், பொருளாதாரம் காரணமாக நிராதரவாக விடப்படாமல் குழந்தைகளைக் காப்பதற்கும் உரிய வகையில் அரசு தனது கொள்கைகளை நெறிப்படுத்திக்கொள்ள வேண்டும்’’ என்று திட்டவட்டமாகக் கூறுகிறது.


ஆனால், கட்டாய இலவசக் கல்வித் திட்டமே சென்ற ஆண்டில் தான் அறிமுகமாயிருக்கிறது. குழந்தைகள் நலவாழ்வு சம்பந்தமான நடவடிக்கைகளை உரிய அளவுக்கு நடுவண் அரசு மேற்கொள்ளவில்லை. ஆனால், அதே சமயத்தில் கனரகத் தொழில்கள் வளர்ச்சி படுவேகத்தில் நடந்திருக்கிறத. அணு விஞ்ஞானம், ஏவுகணைத் தொழில் நுட்பம் விண்வெளிஇயல்–போன்றவற்றில் இந்தியாவேகமான முன்னேற்றத்தை கண்டிருக்கிறது. ஆனால், அதே சமயத்தில் இந்திய மக்களின் வாழ்க்கைத் தரம் உயர்த்தப்படுவதற்கான திசையில் உருப்படியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டதில்லை. எந்திரங்களும் பல்வேறு நவீன சாதனங்களும் வளர்வதில் இந்திய அரசு அசாத்திய முனைப்பைக் காட்டி வந்திருக்கிறது. ஆனால், உயிருள்ள மனிதர்களும் – குழந்தைகளும் பசியில்லாமலும், ஊட்டச்சத்துடன் உணவு அருந்தியும் வாழ்வதற்கான ஏற்பாடுகளை செய்வதில் போதிய அளவுக்கு சிரத்தை காட்டப்படவில்லை. இந்த அவலநிலையை குழந்தைகள் நாளன்று, சர்வதேச அமைப்பு வெளியிட்டுள்ள ஆய்வறிக்கை அம்பலப்படுத்துகிறது.

– தமிழ் ஓசை, 16.11.2009

# உலகமயமாக்கல் குழந்தைகளின் உரிமைகளை அழிக்கிறது

**தனியார்மயமாக்கல் என்பதன் பொருள் அதிகரித்து வரும் வறுமை, கட்டாயத் தொழிலில் ஈடுபடுத்தப்படுதல், பல கோடி குழந்தைகள் நோயால் பாதிப்புக்குள்ளாதல்.**

**அரசே! உலகமயமாக்கலை, தனியார்மயமாக்கலை நிறுத்து – இது எங்களின் வாழ்வை அழிக்கிறது.
உலக வர்த்தக நிறுவனங்கள் (WTO), ஆசிய வளர்ச்சி வங்கி (ADB),
உலக வங்கி (WB) தேவையில்லை எனக் கூறு!**



**எங்களுடைய உரிமைகளைக் காப்பதற்கு குழந்தைகள் சங்கங்களை உருவாக்குவோம்.**

இலவச, தரமான கல்வி, பாதுகாப்பான குடிநீர்.
சுத்தமான பசுமையான சுற்றுச்சூழல்.
உயிர் மற்றும் வாழ்வாதாரங்கள்.

சத்தான உணவு.
குடியிருப்பு – குடியிருப்பை அகற்றுதலை நிறுத்து.
எங்கள் குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பைக் கொடு.




குழந்தை உரிமைக்கான முன்னணி – தமிழ்நாடு & புதுவை
தமிழ்நாடு குழந்தை உரிமைகள் பாதுகாப்புக் கூட்டமைப்பு
தொடர்பு முகவரி : எண் : 10, தாமஸ் நகர், சின்னமலை, சைதாப்பேட்டை, சென்னை – 600 015

***Education Material Published on behalf of***

**Tamil Nadu Child Rights Protection Network by**
**Human Rights Advocacy and Research Foundation (HRF)**
*No.10, Thomas Nagar, Little Mount, Saidapet, Chennai - 600 015.*
*Ph : 044-2235 3503, Fax : 044-2235 5905, E-mail : hrf@md3.vsnl.net.in,*
*Website : humanrightsadvocacyandresearchfoundation.org*